Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
25-31. 7.1993 ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 9



## கிரிக்கெட் இராஜதந்திரம்
ஒரு வித்தியாசமான அரசியல் அலசல்

சூடான அரசியல் செய்திகளை
சுவாரசியமாக சொல்லும் புதிய பக்கம்
காதுல பூ

மகளிர் மட்டும்
பட்டுச்சேலை பரிசுத்திட்டம்
மற்றும் ஆறுதல் பரிசுகள்



கிரிக்கெட் உலகுக்கு
மலையகம் தந்த கொடை!
இலங்கையின் இளம்புயலோடு ஒரு பேட்டி!

சிறுகதைகள்+ புதுமைத் தொடர்
சின்னச் சின்ன கவிதைகள்



லேடீஸ் ஸ்பெசல்

கவர்ச்சியாக நடிப்பதா? குஸ்பூ வெடிப்பு!
பிரபுவா யாரது? வினா தொடுப்பு!!
காதுல பூ

பாப்பா முரசு

ருசியான சமையல்

நவீன தலையலங்காரம்
லேடீஸ் ஸ்பெசல்

முதுகு வலிக்கு
முத்தான யோசனைகள்
(மருத்துவப் பக்கம்)

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

வழக்கமாக வரும்-எமது
தபால்காரருக்கு
உங்கள் மீது வருத்தம்.
வாரத்தில் ஒரு நாள் தவிர
மீதி ஆறுநாட்களும்
முரசுக்கு வரும் மடல்கள் சுமந்து
தோள் வலிக்கிறதாம்.

காதலர்களுக்கும்
கலைஞர்களுக்கும்-
கருவியாய் பேனா பிடிப்பவர்களுக்கும்
சலிக்காத ஒரு விசயம்
கடிதங்களை எதிர்பார்ப்பது
பிடிவாதமாய் எழுதிக்கொண்டே இருப்பது.
பிடித்தமான பணியாய் வாசித்துக்
கொண்டிருப்பது-
தபால்காரருக்கு எப்படி புரியவைப்பது-
அவருக்கு-சுமை-நமக்கு சுகம்.

■

வேறு பத்திரிகைகளுக்கு
எழுதிய ஆக்கங்களை
ஓரிருவர் மீண்டும்
முரசுக்கு அனுப்பிவைக்க
எழுதுவோருக்கு இயன்றளவு
இடம் கொடுக்கும் எண்ணத்தில்
நாமும் அதை
மறுபிரசுரம் என்று புரியாமல் பிரசுரிக்க
நெற்றிக்கண் வாசகர்கள் சிலர்
சுட்டிக்காட்டி தட்டிக்கேட்க
சம்பந்தப்பட்டவர்கள் ஆக்கங்களை
இனி முரசு மறுதலிக்கும்.

தமிழ் பத்திரிகைகள்-சஞ்சிகைகள்
அனைத்தையும்
ஆதியோடந்தமாய்
வாசித்து முடித்துவிட்டுத்தான்
வாசகர் ஆக்கங்களுக்கு இடம்
வழங்க வேண்டுமானால்
அது முடியாத காரியம்.

எனவே
வாசகர்கள் சுட்டிக்காட்டினால்
சம்பந்தப்பட்டவர்கள்
முரசில் இருந்து புறம்தள்ளப்படுவார்கள்.

■

கவிதைகள் நிறைய எழுதுகிறீர்கள்.
கண்டிப்பாக போடவும்
என்ற பின் குறிப்பும் மறக்காமல்.
காதல் ஒரு இனிய விசயம்தான்
ஆனால்
எரியும் பிரச்சனைகளையும்
எடுத்துக்காட்டலாம் அல்லவா.
ஆகவே
அவற்றையும் அலசுங்கள்.
மீண்டும் மறுமடலில்
அன்பு கொண்ட உங்களை
சந்திக்கலாம்.

அன்புடன்
ஆசிரியர்.

**தினமுரசு
போன்: 820265**

## கவிதைப் போட்டி இல-6

### வந்து குவிந்தவற்றில்
### பரிசுபெறுவதும் பாராட்டுப் பெறுபவையும்

## பரிசுபெறும் கவிதை

(வேர்களும்-கால்களும்)

வேர்களின்றியே
நிலத்தை ஜெயிக்கும்
இந்த வித்துக்கள்.
ஊனக் கால்கள்
கொண்டாலும்
உலவிச் சிரிக்கும்
சிறு உள்ளங்கள்.

செல்வி ஷர்மிளா இஸ்மாயில்
விஜேநாயக்க கார்டன்ஸ்
பஹிரவகந்த -கண்டி.

## பாராட்டுப்பெறும் கவிதைகள்

யாருக்கு ஊனம்
மனிதத்தை
மரணிக்கச் செய்து
போர் முரசு கொட்டும்
இரக்கமற்ற
மானிடரா சொன்னது
நீங்கள்
ஊனமுள்ளவர்களென்று
ஊனம் உங்கள்
கால்களில் இல்லை
அவர்களின்
மனங்களில் தான்.

ஜுலிஜோசப்
நாகம.

ஊனமுற்றவர்கள் நாங்கள்
எங்கள் உள்ளத்தில்
ஊனமில்லை
ஊனமில்லாத உங்களுக்கு
உள்ளத்தில் ஊனம் எதற்கு

நா.வினோஜிதா
திருகோணமலை.

ஒற்றுமை
ஊனமாக இருந்தாலும்!
ஒற்றுமையாய்
இருக்கின்றோம்
ஊனமில்லா
உங்களுக்கு
உதாரணம்
நாங்கள்தான்.

புவன் செபமாலை
வத்தளை.

*நாளைய நட்சத்திரங்கள்*
நாளைய தலைவராகும்
நம்பிக்கை நட்சத்திரங்கள்
இது-
இயற்கையின் அனர்த்தமோ
பயங்கரவாதத்தின்
பரிசளிப்போ?

எம். எம். முஸ்தரி பேகம்
புத்தளம்.

*மனவுறுதி*
கால்கள்
ஊனப்பட்டதால்
கைகளில்
ஊன்றுகோல்கள்.
இவர்களின்
நம்பிக்கை
நெம்புகோல்கள்
பூமிப்பந்தையே
புரட்டிவிடும்!

ஹமீட். எம். பைரூஸ்
நுரைச்சோலை.

விரிவு
ஊனத்தின்
மறுதலிப்பு
உள்ளத்தின்
பகிர்ந்தளிப்பு.

ஆரையூர் முரளி
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல—9



பாருங்கள் படத்தை. சிந்தனைக்கு கொடுங்கள் வேலையை. ஒரு தபாலட்டை போதும். உணர்வுகளை பதிவு செய்து எமக்கு அனுப்பி வைக்க. சிறந்த முதல் கவிதை ரூபா 100 பரிசு பெறும். சிறந்தவை இடநெருக்கடி மறுப்புச் சொல்லாதவரை இடம்பிடிக்கும்.

அனுப்ப வேண்டிய கால எல்லை 7.8.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:9
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5



*குருட்டு மனிதம்*
பிஞ்சுமதலையின்
பஞ்சுக் கால்கள்
ஏன்? ஊனமாயின...
வாழ்வை அறுக்கும்
கோடரி காம்பாய்
இன்னும் இன்னும்
குருட்டு மனிதம்

இளநிதி வரதராஜா
கல்குடா.

துணை
மனிதம்
மரணித்துக்
கொண்டது,
சொந்தக் காலில்
நிற்க
இளமைதுணை
தேடுகிறது.

திதக்ஷலா
திருமலை.

தவிப்பு
துள்ளும் காலுக்கு
விலங்கிடலாம்,
இந்தக்
கொள்ளைச்
சிரிப்புக்கும்
குறைவருமோ....?

பே.தேவானந்தன்.
ஹெந்தளை
வத்தளை.

இது
விதி செய்த
சோதனையோ
போர்
சதி செய்த
வேதனையோ

திருமதி:சாந்தினிசந்திரன்
ஹெந்தள
வத்தள.

*உயிருள்ளவர்கள்*
எலும்புகள்
முறிந்து
போனாலும்
முனைப்புகள்
முறிந்து போகாத
பிஞ்சுகள்

இளைய அப்துல்லாஹ்
அக்குறணை.

உறுதியான
உள்ளங்கள்
உடலோ
ஊனமானாலும்
உவகையுறும்
உள்ளங்கள்
ஊன்றுகின்ற
கோலோடும்.
உறுதிகுறையா
முத்துக்கள்.

மது-பாலவி.

இவர்களின்
முகத்தில்
ஆயிரம் சிரிப்பு
இறைவனின்
படைப்பில்
ஏன் இந்த
பிரிப்பு

சிவரஞ்சினி
மட்டக்களப்பு.

"பேர்த்டே" சுவீட்ஸ்!
ஆ!
"சுவீட்"ஸா?!
அட-
யார் தந்தா?!
நம்மோட
"பேர்த்டே"க்கு!"....

வாஹிட் ஏ.குத்தூஸ்
கோட்டை முனை.

நம்பிக்கை
பூமி
சுற்றவில்லையா
கால்கள்
இன்றி!
நம்பிக்கை
இருக்கிறது
நாளைய
விடியலுக்கு!

ஜயந்தன்
பசுமலை.

*அறுவடை*
யுத்த மேகங்களின்
அடைமழையினால்
இன்று
அங்கவீனர்கள்
அறுவடை
செய்யப்படுகிறார்கள்

ரொசானா-நிசாம்.

ஊனத்தை
கூட-தங்கள்
உதட்டுச்சிரிப்பால்
உதாசீனப்படுத்தும்
உதாரண
ஜீவன்கள்.

கலாயுவன் தாஜுதீன்
நிட்டம்புவ.

உள்ளே பார்
ஊனம்
உடலில் தானே
உள்ளத்தில்
இல்லையே....

எஸ்.பி. பிரகாஸ்
மாத்தளை.

*போலியான போலியோ*
போலிப் பாதத்துடனும்
ஜாலியான சிரிப்பு
"போலியோ"வே
நீ போலியோ!

ச.கண்ணன்
பேராதனை.

நாங்கள்
நடக்காததாலோ
உலகம் கூட
உருண்டு
செல்கிறது.

சுல்பிகா ராசிக்
ராஜகிரிய.

நிதி தாருங்கள் என்று
கேட்டு வரவில்லை
நிம்மதியாக
வாழ
வழி விடுங்கள்.

ம.ஞானசீலன்-மயில்ஞானன்
முல்லைத்தீவு.

மொட்டுக்கள்!
படைத்தல்
இலக்கணம்
தெரியாத
பிரம்மாவின்
படைப்பில்
மலர்ந்தும்
மலராத
மொட்டுக்கள்!

த.சிவராஜா
ஆரையம்பதி-3.

அல்லது....
போலியோவின்
வீரியமா?
அல்லது
வெடிகுண்டுப்
புகையின்
வீரியமா?

கலைமொழி
வெள்ளவத்தை.

*தித்திக்கும் தேனமுதாய்
இனித்திடும் தினமுரசே...!
வாழ்க உன் பணி என்றென்றும்...*

மு.ரஞ்சன் துரைசிங்கம்
நோட்டன்.

உண்மைக் கதை என்று எழுதியும் வாசகர்கள் முகில் வண்ணனைத் தாக்கியிருப்பது மனிதாபிமானமற்ற செயல்.

# வாசக(ர்)சாலை

வந்த புதிதிலேயே உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இனிய மலரே. நீ எந்நாளும் நலமாய் வாழ இந்நாளில் என் இனிய வாழ்த்துக்கள். கதைகள் அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

தேன்மொழி
தெஹிவளை.

**அனுப்புங்கள்-தரம் கண்டு இடம் தருவோம்.**

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் வெகுபிரமாதம். அத்தோடு 'பச்சை ரிபன்' சிறுகதை வெகு ஜோராகவே இருந்தது. என்றும் உன் முரசொழிய என் வாழ்த்துக்கள்

செல்வி.மா.ஜோதிலட்சுமி
போபத்தலாவ.

மனித வெடிகுண்டு ஏ வன். இப்போதும் சீதாப்பாட்டியை போன்று நாகரிக (சுமங்கலி) மங்கையர் உண்டோ. கணவன் இருந்தும் திருமதியை நீக்கி செல்வி என்று பறைசாற்றுவோர் ஏராளம் ஏராளம். இக்கதை திருமதிகளு-(செல்விகளுக்கு)-க்கு ஒரு பேரிடியே!

-க.சந்திரகலா-

தினமுரசு இல்லாத வீடு
தீந்தமிழ் சுவை அறியாத
வெறும் காடு

பாலா பாலச்சந்திரன்
மஸ்கெலிய.

அன்பின் தினமுரசு வாரமலரே இருள் சூழ்ந்த என் வாழ்வுக்கு சிறைப்பட்டுப் போன, என்ஆசைக்கு மிக நாளைக்குப்பின் அரு மருந்தாய் நீ என் நண்பி மூலம் எனக்கு கிடைத்தாய். என் எண்ணங்கள் உன்னைக் கண்டபின் இனிய வானில் சிறகடிக்கின்றன. உன் சேவை மென் மேலும் உயர என் கோடான கோடி வாழ்த்துக்கள்!

செல்வி:ஸீனியா மனாப்
போபிட்டியூர்.

எம்.சிவமயம்
பதுளை.

தினமுரசே நீ ஒரு புது முரசு: உன் பேனா முனைகளுக்கு ஈடாகுமோ இனி ஒரு முரசு?உன்னை வெளியில் பார்த்தால் கண்ணுக்கு விருந்து. உள்ளே கொட்டி கிடப்பதோ புதுமை விருந்து. தினமும் கிடைக்காதோ என்று ஏங்கும் எம் போன்ற வாசகர் மனசு!

எஸ்.இராஜேந்திரா
வத்தளை.

தித்திக்கும் தினமுரசே. தத்திக்கும் சங்க தமிழ் கொண்டு எண்ணங்கள் பல சுமந்து வண்ணம் குழையாமல் எம்மை வலம் வரும் வாரமலரே வாழிய பல்லாண்டுகள் பல நீ.

எஸ் வடிவேல்.
கொழும்பு-13

ஆருயிர் தினமுரசே உன்னை காண வியாழன் வெள்ளி தோறும் காத்திருக்கும் புதிய தலைமுறைகளுக்கு உனது ஆக்கங்கள் அனைத்தும் தேன் போல இனிக்கு சுவையான கதைகளுடன் வாசகர்களின் நெஞ்சைத் தொட்டு விட்டது மேலும் உனது ஆக்கங்களும் வாழ என்றும் எங்கள் குடும்பத்தாரின் வாழ்த்துக்கள் வாழ்க வளர்க வளமுடன் முரசே.

வெ.ரஞ்சனி
நுவரெலியா

முரசா....!முரசா....!வாரமலர் தனமுரசா... வளர்ந்து வரும் இள எழுத்தாளர்களுக்கு கலம் அமைத்து கொடுத்துதவும் தினமுரசா...
உன் உயர்விற்கும் இனிமைக்கும் என்றும் இளையவள் இவள் இனிய வாழ்த்துக்கள்.

பாத்திமா ஹமீட்
குருத்தலாவை.

சிந்தியாவின் பதில்கள் பென்டாஸ்டிக். பல்வேறுபட்ட விடயங்களை சுவையாக அள்ளி வழங்கும் தினமுரசை வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

ராதா ராமநாதன்
பூண்டுலோயா.

என் உயிர் முரசே ஆயிரம் மலர்கள் மலர்ந்தாலும் அது அத்தனை நாளை உதிர்ந்துவிடும் ஆனால் எம் இதயத்தில் பூத்திருக்கு "தினமுரசு வாரமலரா" அது என்றும் உதிராது.

கே.எஸ்.பாலா
ஏ.பீ.சுபா
ஆலி-எல

வாரம் ஒரு முறை வண்ண வண்ணப் பூக்களாய் மலர்ந்து மனம் பரப்பும் தினமுரசு வாரமலரே தினந்தினம் நீ வந்து வாசம் வீச வேண்டும்!

ரிபான் பௌஸர்
ரம்புக்-எல

தினமுரசு வார்மலருக்கு கவிதை, கேள்வி வாசகசாலை அனைத்தும் எழுதி அனுப்பிவைத்தேன் வாரமலரில் இடம் பெறவில்லை தயவு செய்து எமது விருப்பத்தையும் பூர்த்தி செய்யுமாறு வேண்டுகிறேன். ஆரம்பம் முதல் தினமுரசு வாசகன் எனது மனதை உடைய வைத்து விடாதீர்கள். மறவாமல் வாரமலரில் எமது விருப்பத்தையும் நிரைவு செய்து தரும்படி வேண்டுகிறேன்.

ஆ.விஜயகுமார்
நுவரெலியா.

வாசகர் உள்ளமதை வர்ணத்திலும், எண்ணத்திலும் (செய்திகள்) கவரும் உனது வளர்ச்சிக்காய் வாழ்த்துக்கள் பல.

கலைநேசன் ஜவாத்
புத்தளம்.

தினமுரசின் அட்டைப்படத்தை திடீரென்று மாற்றி எங்களை அசத்தி விட்டீர்கள்போங்கள்!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

முரசே. இருண்டவானில் நீயொரு வென்னிலா
வட்டமிட்டு வாலிபரையும், வணிதையரையும் ஏன் சிறுவரையும் கூட கவர்ந்து இழுத்து உன்
வசம்படுத்தும் மகா கில்லாடிதான்.

யோகநாதன்
வகுவப்பிட்டிய.

எஸ்.ஐ. அப்துல் ஹகீம் - புத்தளம்,
த.தங்கராசா- வவுனியா.

www.padippakam.com                                                                 நன்றி - நூலகத்திட்டம்

# "சோழர் காலத்தின் பின் மீண்டும் கடல்புறா! கடற்பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்"

## புலிகளின் மன்னார் கூட்டத்தில் பேச்சு

(மன்னார் நிருபர் பஸ்தியன்)

அண்மையில் மன்னார் மாவட்டம் மடுவில் புலிகள் அமைப்பின் கடற்புலிகள் பிரிவு உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சுமார் இரண்டாயிரம் பேர் அக்கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

அங்கு மன்னார் மாவட்ட புலிகள் அமைப்பின் அரசியல் துணைப் பொறுப்பாளர் நந்தகுமார் உரையாற்றினார்.

கடல் பகுதிகளில் தமது புதிய தாக்குதல்களை புலிகள் நடாத்தக் கூடும் என்பதை அவரது உரை கோடிட்டுக் காட்டியது.

அவர் தமது உரையில் தமிழர் வரலாற்றில் சோழர் காலத்தில்தான் கடல் புறா என்ற பெயரில் பெரும் கடற்படை ஒன்று இருந்தது.

அதன்பின்னர் இப்போதுதான் புலிகள் பெரும் கடற்படையை உருவாக்கியுள்ளனர்.

தமிழீழத்தின் 2/3 கடற்பகுதிகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்காகவே கடற்புலிகள் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

கடற்புலிகளின் தீரச்செயல்கள் என்னும் வீடியோ படமும் அங்கு காண்பிக்கப்பட்டது.

பூநகரி முழங்காவில் பகுதிகளிலும் கடற்புலிகள் நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கடற்பகுதியில் முக்கிய கவனம் செலுத்துவதன் ஊடாக இயக்கத்தின் முக்கிய தேவைகள் பூர்த்தியாக்கப்படலாம் என்று விடுதலைப்புலிகள் நினைப்பதால் கடற்புலிகள் அமைப்பை பலப்படுத்தும் வேலைகள் நடப்பதாகவும் அறியப்படுகிறது.

இலங்கைக் கடற்படையினர் நவீனரக படகுகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளமை புலிகளின் கடற்பகுதி போக்குவரத்தை பாதித்துள்ளது.

## யாழ்ப்பாண அகதி முகாம்களில் சீர்கேடு

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிமுகாம்களில் சீர்கேடான நிலைகள் காணப்படுகின்றன.

கோப்பாய் பகுதியில் மட்டும் 21 அகதி முகாம்களில் இடம்பெயர்ந்த மக்கள் உள்ளனர். தெல்லிப்பளை, அளவெட்டி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களே அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் குடிசைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள போதும் இட நெருக்கடி பெரும் பிரச்சனையாக உள்ளது. இட நெருக்கடி தீர வேண்டுமானால் மேலும் 314 குடிசைகள் புதிதாக அமைக்கப்பட வேண்டும். 274 குடிசைகள் மலசலகூடங்கள் என்பன திருத்தியமைக்கப்பட வேண்டும்.

அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமை பெரும் குறைபாடாகும். ஆனால் தொற்றுநோய்களுக்கு மட்டும் இட நெருக்கடி கிடையாது. வசதியாகப் பரவுகின்றன.

## முகம் காட்டிய புதுக்கவிதை நூல் அறிமுகம் செய்யும் விழா!

எதிர்வரும் 30.07.93 அன்று மாலை 3 மணிக்கு சாய்ந்தமருது அல்கமறுன் வித்தியாலயத்தில் மருதூர் ஏ.ஹஸனின் "மழையும் சிறையும்" புதுக்கவிதை நூலின் அறிமுகவிழா மிகவும் விமர்சையாக இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ஜனாப்-ஐ.எல்.ஏ.றஹீம் அவர்களின் தலைமையின் கீழ் இவ்விழா இடம் பெறவுள்ளது. மருதூர் ஏ.ஹஸன் ஏற்கனவே 'அநாமிகா' புதுக்கவிதைத் தொகுதியை தந்தவர்.

'அப்பா இல்லாத ஊரில்', 'கனவுகள் இலவசம்', 'களிமண்வீடு' போன்ற நாடகங்களை கொழும்பு டவர் மண்டபத்தில் மேடையேற்றியுமுள்ளார்.

மருதூர் வெளியீட்டுப் பணி மனை வெளியீடாக வந்துள்ள இப்புதுக் கவிதை நூல்பற்றி லத்தீப் சின்ன லெப்பை, எம்.ஏ. சம்சுதீன், ஐ.எம்.இஸ்ஸதீன், யூ.எல் ஆதம்பாவா, மருதூர் கொத்தன், அலியார் முஸம்மில், ஆர்.எம்.அஸ்மி, எம்.எம். எம்.றபீக், மருதூர்.ஏ.ஹஸன். ஆகியோர் பேசுவார்கள். இவ்விழா ஒழுங்குகளை அமு/அல்கமறுன் வித்தியாலயம் செய்துவருகிறது. மருதூர்.ஏ ஹஸன் அவர்கள் பிறந்த ஊரான மருதூரில் இடம் பெறும்

மூன்றாவது அறிமுகவிழா இதுவாகும். இவ்விழாவை சிறப்புற நடாத்த வேண்டுமென சாய்ந்தமருது "மாலைவட்ட" தலைவர் ஜனாப் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் மேலதிக ஒழுங்குகளை கவனித்துவருகிறார்.

## பழைய குறை தீருமா? புதிய அமைச்சு கவனிக்குமா?

(பதுளை நிருபர்)

பதுளை பிரதேச செயலாளர் தொகுதியைச் சேர்ந்த கலன் தமிழ் வித்தியாலயத்திற்கு இரண்டு ஏக்கர் காணி பெற்றுத்தருமாறு 1980ம் ஆண்டு முதல் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் காணி கிடைத்த பாடில்லையென மேற்படி பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் 140 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். ஆனால் இப்பாடசாலையில் 40'×20' அளவிலான ஒரு கட்டிடம் மட்டுமே உள்ளது. இப்பாடசாலைக்கு முக்கியமாக மேலும் ஒரு 40'×20' அளவிலான கட்டிடம் ஒன்று தேவைப்படுகிறது.

இதுவரை காலமும் இப்பாடசாலைக்கு எதுவித உதவியும் கிடைக்கவில்லை எனக் கூறும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இம்முறை அமைக்கப்பட்டுள்ள மகாண சபையில் தோட்டப் பாடசாலை கல்விக்கென தனியான ஒரு அமைச்சு இருப்பதால் இவ் அமைச்சின் மூலமாவது பல ஆண்டுகாலமாக இப்பாடசாலையில் நிலவிவரும் இக்குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். எனக் கேட்கின்றனர்.

## தமிழர்களின் கஷ்டங்களை நேரில் கண்டு வேதனை!

யாழப்பாணத்திலுள்ள சிங்களப் பொலிசாரின் உறவினர்கள் குண்டுவீச்சால் பாதிக்கப்பட்ட யாழ் பகுதிகளை சென்று பார்வையிட்டனர்.

தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை தாம் இப்போது நேரில் கண்டு வருந்துவதாக அவர்கள் தெரிவித்தனர்.

தாம் மாற்றுடைகூட இல்லாத நிலையில் யாழ்ப்பாணம் வந்தபோதும் புலிகளே தமக்கு வேண்டிய உடுப்புக்களை வழங்கியதாகவும் அந்த உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் மீது அந்த உறவினர்கள் குறைகூறுவதாக தெரிவித்து யாழப்பணத்தில் புலிகளின் குரல் வானொலி தினமும் செய்திகளை வெளியிட்டு வருகிறது.

பொலிசாரை விடுவிக்கும் விடயத்தில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்று அந்த உறவினர்களுக்கு புலிகளால் கூறப்பட்டுள்ளது.

தாம் கொழும்புக்கு திரும்பி வந்தால் பொலிசாரது விடுதலையில் தீவிரம் காட்டப்படமாட்டாது என்று கருதியே தாம் அங்கு தங்கி நிற்பதாக உறவினர்கள் கூறுகின்றனர்.

## உடைக்கப்படுகிறதா கடிதங்கள்? மட்டுநகரில் சந்தேகம்!

மட்டக்களப்பு நகருக்கு சமீப காலமாக வரும் கடிதங்கள் உடைக்கப்பட்ட பின்னர் தம் கரம் வந்து சேருகிறதா என்று நகரில் உள்ள பலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சில கடிதங்கள் உடைக்கப்பட்ட நிலையில் உரியவர்கள் வசம் சேர்ந்துள்ளன. வேறு சில உடைக்கப்பட்டு பின் ஒட்டப்பட்டவை போன்ற அடையாளங்களோடு சேர்ந்துள்ளன.

மட்டக்களப்பு நகரில் இயல்பான வாழ்க்கை திரும்பிவரும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு கடிதங்கள் உடைக்கப்படுவது உண்மையானால் அது ஒரு தவறான நடவடிக்கையாகும்.

எங்கே தவறு என்று கண்டு பிடிக்கப்பட வேண்டியதுமாகும்.

## அரசு ஆயத்தம் புலிகள் சொல்கிறார்கள்

வடக்கே பாரிய தாக்குதல் ஒன்றுக்கு படையினர் தயாராகி வருவதாக யாழப்பாணத்தில் புலிகள் கூறியுள்ளனர்.

விமானப்படை விமானங்கள் சமீபத்தில் யாழ்குடாநாட்டில் அடிக்கடி பறந்து திரிகின்றன. அது நோட்டமிடும் நடவடிக்கை என்று விடுதலைப் புலிகள் விபரித்துள்ளனர்.

## நச்சரவத்தால் பெரும்செலவு!

(குருநாகல் நிருபர் விசிநவஉதுமான்)

குளியாப்பிட்டிய தொகுதிலில் பரவலான முறையில் பாம்புத் தொல்லை அதிகரித்து வருவதாக இங்கு வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று மாத காலத்துக்குள் 197 பேர் அரவம் தீண்டி குளியாப்பிட்டிய அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்துள்ளனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு நோயாளியைக் காப்பாற்ற ரூபா 7000ம் தொடக்கம் ரூபா 35000ம் வரை செலவிட வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## —ஒரு விடுதலை— பெரும் நிபந்தனை

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி பல்கலைக்கழகத்தின் அருகே புத்தகக்கடை வைத்திருந்தவர் மணியம்.

ஏனைய தமிழ் அமைப்புக்களோடு தொடர்பு வைத்திருந்தவர் என்று சந்தேகத்தின் பெயரில் புலிகள் அவரை தமது சிறையில் வைத்திருந்தனர்.

இலண்டனில் உள்ள "ஆட்டிக்கிள் 19" என்னும் அமைப்பு தனது கடந்த வருட அறிக்கையில் மணியத்தை புலிகள் கைது செய்தது பற்றி கண்டித்திருந்தது.

இப்போது மணியம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைசெய்யப்பட்ட போதும் அவர் தனது குடும்பத்தோடு இருக்க முடிவது வாரத்தில் இருநாட்கள் மட்டும்தான்.

திங்கள் முதல் வெள்ளிவரை புலிகளின் பத்திரிகையான ஈழநாதம் அலுவலகத்தில் அவர் பணியாற்ற வேண்டும் என்பது புலிகள் விதித்துள்ள நிபந்தனையாகும்.

உள்ளே இருப்பதை விட இது ஒன்றும் மோசமானதல்ல.

## இட நெருக்கடியால் அடிபிடி

(எம்.எச்.எம்.ஹாரித்)

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து நிட்டம்புவ வரையில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ் வண்டிகள் உரிய நேரத்தில் ஒழுங்காக ஓடுவதில்லை. இதனால் பருவகாலப் பயணச் சீட்டுடன் கியூவில் காத்துநிற்கும் பலர் பணம் கொடுத்து தனியார் பஸ்களில் பயணம் செய்ய வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக அங்கலாய்க்கின்றனர்.

சில நேரங்களில் கியூ வரிசையில் பலர் காத்துநிற்க திடீர் என்று பஸ்வண்டி வரும்போது கியூவுக்கு வெளியே நிற்பவர்கள் முண்டியடித்துக்கொண்டு ஏறி ஆசனங்களில் உட்கார்ந்துவிடுகின்றனர். இவ்வேளைகளில் பஸ்சாரதிக்கும் கியூவில் நின்றும் ஆசனம் கிடைக்காத பயணிகளுக்குமிடையே வாய்ச்சண்டை முற்றி கைகலப்பும் ஏற்படுகிறது. இது விடயத்தில் அதிகாரிகள் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க மாட்டார்களா? எனப் பலரும் கேட்கின்றனர்.

## போசன விருந்தோடு சிந்தைக்கும் விருந்து

(திருகோணமலை நிருபர்)

இந்த ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கென இராப்போசன விருந்தொன்றும் கலை நிகழ்ச்சிகளும் திருமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி உயர்தர மாணவர்களால் அண்மையில் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி குணாளன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக திரு.அ. சிவலோகநாதன், திருமதி சுபாஷினி வரதன், திரு.கு.ஹேமச்சந்திரா, திரு. தவசலிங்கம் ஆகியோரும் அழைக்கப் பிற கல்லூரிகளைச் சேர்ந்த உயர்தர மாணவர் தலைவர்களும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்ச்சிகள் மனதைத் தொட்டன. கோ. மணிவண்ணன் செல்வன் தா.மகேஸ்வரன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

## கச்சான் காற்றால் கஸ்ரம் வருகிறது!

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியாப் பிரதேசத்தில் தற்போது பலமாக வீசப்படும் கச்சான் காற்றினால் சகல பாடசாலைகளிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் பெரும்பாலும் கட்டடப் பற்றாக்குறைகள் நிலவுவதால் பல வகுப்புகள் வெளியில் காணக்கூடிய மரநிழல்களிலே அமைந்துள்ளது.

இதனால் இக்காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாது ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இக்காற்று வேகத்தினால், அடிக்கடி மண்வாரி வீசப்படுகிறது, மாணவர் அப்பியாச புத்தகம், கொப்பிகள், கரும்பலகை போன்றனவைகளும் தூக்கிவீசப்படுகின்றனவாம்.

## வலையில் சிக்கிய கொள்ளையர்கள்! தன்னியக்க ஆயுதங்கள்-தாராளமாய் ரவைகள்!

(நிந்தவூர் நிருபர்)



நிந்தவூர்ப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த பல்வேறு கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் எனக்கருதப்படும் ஐந்து பேரைக்கொண்ட கொள்ளைக்கோஷ்டி ஒன்றை சம்மாந்துறைப் பொலிஸார் மடக்கிப் பிடித்ததுடன், அவர்களிடமிருந்து இரு தன்னியக்கதுப்பாக்கிகள் (ஒன்று மேற்கு ஜேர்மன்தயாரிப்பு) 160 சுற்றுரவைகள் மற்றும் கொள்ளைப் பொருட்களையும் மீட்டுள்ளனர். இங்கு மீட்கப்பட்ட ஆயுதங்கள், கொள்ளைப் பொருட்களுடன் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. நிஸாந்த பெரேரா, பெரும் குற்றவியற்பிரிவு பொறுப்பதிகாரி ஜனாப்.ஏ.டபிள்யூ.ஏ. கபார் உட்பட பொலிஸார் பலரும் படத்தில் காணப்படுகின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஒரு கண்ணோட்டம்

## ---ராக்கிங் ஒழிப்பு வெற்றி பெறுமா முயற்சிகள்?---

அண்மையில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவனொருவன் "ராக்கிங்" இன்போது மரணமானதைத் தொடர்ந்து நாடெங்கும் ராக்கிங் தொடர்பான பல சூடான விமர்சனங்கள் எழுந்தது யாவரும் அறிந்ததே. இதில் ஒரளவு விசயம் புரிந்தவர்கள் ராக்கிங் குறைக்கப்பட வேண்டும் அல்லது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். அதே வேளை இன்னொரு குழுவினர் "ராக்கிங்"ஐ இல்லாதொழிக்க வேண்டுமெனக் கோஷமிட்டனர். (இதில் எல்லாத் தரப்பினரும் அடங்குவர்) இரண்டு கருத்திலும் நியாயம் இருப்பினும் "ராக்கிங்" குறைக்கப்பட வேண்டுமென்ற கருத்தே பல்கலைக்கழக மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. காரணம் ஏனைய கல்வி நிறுவனங்களில் இருந்து பல்கலைக்கழகங்களை தனித்துவப் படுத்தும் சிறப்பம்சங்களில் "ராக்கிங்" முக்கியமானது.

இது தவிர "ராக்கிங்"ஐ முற்று முழுதாகக் கட்டுப்படுத்த முடியாது என்பது பல்கலைக்கழக மாணவர்களின் கருத் தாகும். காரணம் போனமுறை "ராக்கிங்"கூடாதென்று கூப்பாடுபோட்டு கண்ணீர்வடித்த மாணவர்கள்தானே இம்முறை "ராக்கிங்" செய்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு புதிய கல்வி யாண்டிலும் ராக்கிங் குறைக்கப்பட வேண்டும் என்று கோஷமெழுவதும் பின்பு அதே புதிய மாணவர்களால் ராக்கிங் ஆதரிக்கப்படுவதும் வழமை.

ஆனால் இம்முறை கொழும்பு பல்கலைக்கழக புதிய கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து சில விரிவுரையாளர்கள் முற்றுமுழுதாக "ராக்கிங்"ஐ இல்லாதொழிக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதைப் போல் தெரிகிறது. அவர்கள் ராக்கிங் ஒழிப்புக்குக் கையாளும் புதிய தொழில் நுட்பங்களைப் பார்ப்போமானால்....

1. புதிய மாணவர்களுக்கு வகுப்பு நடக்கும் பக்கங்களுக்குப் பழைய மாணவர்களை செல்லாமல் தடுத்தல்.
2. சில பழைய மாணவர்களின் அடையாள அட்டையைப் பறித்து மிரட்டுதல்.
3. எல்லாவற்றிற்கும் மேலாக வகுப்பு முடிந்ததும் சில விரிவுரையாளர்கள் சேர்ந்து புதிய மாணவர்களை பஸ் தரிப்பு நிலையம் வரை அழைத்துச் சென்று பஸ் ஏற்றி விடுதல் (சூப்பர் ஐடியா?)

இவர்களின் முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாக இருப்பினும், சாதாரணமாக ஒரு புதிய மாணவரோடு கதைப்பதற்குக் கூட அனுமதிக்காமல் நடவடிக்கை எடுப்பது அவ்வளவு நல்லதாகப்படவில்லை. மோசமாக ராக்கிங் செய்ப வர்கள் தண்டிக்கப்படுவது நியாயம். ஆனால் தன்னை சாதாரணமாக அறிமுகப்படுத்த முயலும் ஒரு பழைய மாணவன் தண்டிக்கப்படுவது நிச்சயம் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும். ஏற்கனவே கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாணவர்களாகவே கூடி, மோசமான ராக்கிங் செய்வதில்லை என்று முடிவெடுத்திருக்கும் நிலையில், சில விரிவுரையாளர்களின் இத்தகைய நடத்தை பழைய மாணவர்கள் மத்தியில் எத்தகைய உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் அதன் விளைவுகள் எந்த அளவிற்கு நெகிழ்சித் தன்மை கொண்டதாக இருக்கும் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது எப்படி இருப்பினும் "ராக்கிங்"ஐ முற்றுமுழுதாக இல்லாதொழிக்க முயலும் (அதற்காக வியர்வை சிந்தும்) சில விரிவுரையாளர்களின் முயற்சி வெற்றி பெறவேண்டும் என்பது எனது பிரார்த்தனை. ஆனால் "ராக்கிங்"ஐ ஒழிக்க முடியாதென்பது எனது கருத்து!!

-தமிழ்க்கொடி-
கொழும்பு பல்கலைக்கழகம்.

## மின்சாரம் போனால் வெகுதூரம் போவோர்

(நாரம்மலை நிருபர் ஏ.எல்.ஸலாம்)

ஆனமடுவைத் தேர்தல் தொகுதியில் பல பகுதிகளிலும் அடிக்கடி மினசாரம் தடைப்படுவதாகவும் அதுபற்றி முறையிடுவதற்காக சுமார் பதினைந்து மைல்களைக் கடந்து புத்தளம் நகருக்குச் செல்லவேண்டியிருப்பதாகவும் இப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மதவாக்குளம் வாழ் பிரதேச வாசியொருவர் இதுபற்றி நமது நிருபரிடம் தெரிவித்ததாவது, மினசார திருத்த வேலைகளை அறியப்படுத்துவதற்காக சுமார் இருபது மைல்களைக் கடந்து புத்தளம் செல்லவேண்டியிருப்பதாகவும், தொலைபேசி வசதி கூட இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே மின்சார சபையின் கிளையொன்று அண்மையில் உள்ள ஆனமடுவ நகருக்குத் தேவையென்றும், அல்லது அருகில் உள்ள நிக்கவரட்டிய பகுதியில் இருந்தாவது இச்சேவையைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கூறினார். இச்சிரமங்களினால், இரண்டு மூன்று நாட்களின் பின்னரேயே வெளிச்சம் கிடைப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

## கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கற்றுக்கொடுக்கிறது தொழிற்பயிற்சி திணைக்களம்


(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட தொழிற் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிண்ணியாப் பிரதேசத்தில் படித்து விட்டு வேலையற்று வீட்டிலிருக்கும் இளம் யுவதிகளுக்கு ஒரு வருட தையல் பயிற்சி வகுப்பை அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

இப்பயிற்சி வகுப்பில், சுமார்–25 இளம் யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பயிற்சியில் ஈடுபடும் இளம்யுவதிகளுக்கு, நாளொன்றுக்கு கொடுப்பனவாக ரூபா 15ம் வருட இறுதியில் பெறுமதிமிக்க சான்றுதழ்களையும், மாவட்டத் திணைக்களமே வழங்கியும் வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–08



### இடமிருந்து வலம்

1. திசையறி கருவி போல் இது தினமறி கருவி.
5. இங்கு தியாகிகளும் செல்வதுண்டு திருடர்களும் செல்வதுண்டு.
6. அடிக்கடி பக்கம் மாறுவோர் இதைச் செய்வதாகச் சொல்வதுண்டு.
11. ராகங்களில் ஒன்று.
12. தொடரும் யுத்தத்தோடு இதுவும் தலைவிரித்தாடுகிறது.

### மேலிருந்து கீழ்

1. சினிமா வளர்ச்சி இதனைப் பாதித்திருக்கிறது.
2. நம்மூர்த் தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் இப்படி.
3. சிந்தினால் போச்சு
4. அம்பிகாபதியின் தந்தை.
7. காதலின் நினைவால் மண்ணிலே ஒரு ஆலயம்.
8. தினங்களின் ஆரம்பம்.
9. தகுதியானவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டியது.
10. இருட்டின் எதிரி.
11. பாய்வதில் படுசுட்டி.

இதற்கான சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 31.07.93 ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-08
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## புகார் பெட்டி

### ஏன் இந்த புறக்கணிப்போ?

பதுளை பொது வைத்தியசாலையில் சுகாதார ரீதியிலான கண்காட்சியின் போது போதிய தமிழ் விளக்கங்கள் இல்லாததால் மாணவர்கள் பெரும் திண்டாட்டத்தினை எதிர்நோக்கினர். தமிழுக்கு ஏன் இந்த புறக்கணிப்பு?

ஆர்.இரமேஷ்
லெஜர்வத்தை.

### தொலைக்காட்சி இடம் கொடுக்குமா?

காலை ஏழரைமணிவரை ஒளிபரப்பாகும் "வாஹினி"யில் ஒரேயொரு "தமிழ்ப்பாடல்" மட்டுந்தானா? ஏராளமாக சிங்களப் பாடல்களை ஒளிபரப்பி கீதப் பிரியர்களை களிப்பிலாழ்த்தும் "வாஹினி" தனது இரு மணிநேர ஒளிபரப்பில் "அட்லிஸ்" ஒரு மணிநேரத்திற்கு ஒரு தமிழ் பாடல் என்ற வீதத்திலாவது இரு தமிழ்ப்பாடல்களுக்காவது, இடம் கொடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமா?

முத்து மணி
மட்டுநகர்.

### நகர சபையின் கவனம் திரும்புமா?

சுமார் 25 வருடகாலமாக இருந்து வந்த தர்ஹா நகர் மசூர் மாவத்தையின் பின் பகுதியில் அமைந்துள்ள "தெம்பிளியாவத்த" பாதை பிரச்சினை களுத்துறை நீதிமன்றத்தின் தீர்ப்பில் எமக்கு திறந்து தரப்பட்டும் நீண்ட நாட்களாகி விட்டது. ஆனால் பாதை போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை. பாதைக்கு மண் போட்டு சீர் செய்து தரும்படியும் பாதையை பதிவு செய்து கொள்ளும்படி நகர சபைக்கு இப்பகுதி மக்கள் கேட்டும் கோரிக்கை புறக்கணிப்புடன் இருக்கின்றது. இவ்விடயமாக உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளோம்.

இதைக் கவனத்தில் கொள்வார்களா?

உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஏ.ஆர்.எம். எம்.றபீக்
மசூர்மாவத்தை
தர்ஹா நகர்.

### குறவன் குடி தபாலகத்தின் திறன் குறைந்த சேவை!

புத்தளம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த நுரைச்சோலை என்னும் கிராமப்பகுதியிலுள்ள குறவன் குடிப்பகுதி உப-தபாற் கந்தோரின் மூலம் இப்பகுதி மக்களுக்கு சீரான சேவை கிடைப்பதில்லையென புகார் செய்யப்படுகின்றது.

இங்கு வரும் கடிதங்கள் பொதுமக்களுக்கு ஒழுங்கான முறையில் பட்டுவாடா செய்யப்படாமல் மோசடி நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளியிடங்களிலிருந்து பொதுமக்களுக்கு பெரும் பெறுமதிமிக்க பொருட்களும் காணாமல் போவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சமீபத்தில் இப்பகுதியைச் சேர்ந்த நபரொருவருக்கு வேறொரு இடத்திலிருந்து பெறுமதிமிக்க பார்சலொன்று வந்ததாகவும் அதிலிலிருந்த புத்தகத்துடன் கூடிய டயறியும் காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவிடயத்தில் தபால் இலாகா உடனடி நடவடிக்கை எடுப்பதுடன் பொதுமக்களுக்கு சீரான சேவையை நடாத்த வேண்டும்

தகவல்–புத்தளம் நிருபர்.

### கடத்த வேண்டாம் காலம்

உக்குவெல முஸ்லிம் விவாகப் பதிவாளர் ஜனாப் தாஹிர் அவர்கள் சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பு காலமானதில் அவருடைய விவாகப் பதிவாளர் பதவி இன்றுவரை காலியாகவே இருந்து வருகிறது.

இப்பதவிக்குத் தகுதியான ஒருவரைத் தெரிவு செய்வதற்கு, உக்குவெல பிரதேச செயலகத்தினால் அவ்வப்போது மூன்று முறை விண்ணப்பம் கோரப்பட்டு அதன்படி நேர்முகப்பரீட்சையும் நடாத்தப்பட்டும் இதுவரையில்- இப்பதவிக்கு எவரும் தெரிவு செய்யப்படாமலிருப்பது மிக ஆச்சரியத்தையும் கவலையையும் தருகிறது.

உக்குவெலப் பகுதியைப் பொருத்தவரை முஸ்லிம் விவாகப் பதவினர் ஒருவர் மிக அவசியம் என்பதை மறுக்கமுடியாது.

எனவே மேலும் காலம் கடத்தாது இப்பகுதிக்குப் பொருத்தமான விவாகப் பதிவாளர் ஒருவரைத் தெரிவு செய்யுமாறு சம்பந்தப்பட்டவுர்களை வேண்டுகிறேன்.

ஏ.முஹம்மது ஜலீல்
உக்குவெல.

### புதிய தமிழ் எழுத்து!

கடந்த 1990ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்ச வெளியிலிருந்து அகதியாக அனுராதபுர மாவட்டத்திலுள்ள ஹொரவப்பத்தானைக்குச் சென்றிருந்தோம்.

ஹொரவப்பத்தானையிலிருந்து 15 மைல்களுக்கு அப்பால் ஆனை விழுந்தான் எனும் முஸ்லிம் கிராமம் உள்ளது. இந்த ஆனைவிழுந்தான் கிராமத்திற்கு கெபிதி கொள்ளாவை என்னும் ஊரிலிருந்து சுமார் 10 மைல்கள் பயணம் செய்தால் வேறு ஒரு பாதை இப்பாதையைச் சந்திக்கிறது. இப்பாதைகள் சந்திக்குமிடத்தில் அப்பாதைக்கு வலது, இடது பக்கமுள்ள கிராமங்களின் பெயர்களும் அவற்றிற்கிடையே உள்ள தூரங்களும் குறிக்கப்பட்டுள்ளன. இடதுபக்கமாக கப்புக்கொள்ளாவை என்றும் வலது பக்கமாக "ஆன விழுந்தான்" என்றும் தமிழில் எழுதப்பட்டு இருந்தது. அதன் பின் அக்கிராமத்தவர்களிடம் விசாரித்த போதுதான் அது ஒரு முஸ்லிம் கிராமம் என்பதும் அதன் பெயர் "ஆனைவிழுந்தான்" என்பதும் தெரிய வந்தது. "ஆன" இப்படியும் ஒரு புதிய தமிழ் எழுத்தோ.

ரீ.ஏ.சிபுனிஸ்
குச்சவெளி.

### தூக்கி அடிக்கும் பயணம்!

மத்திய மலை நாட்டின் ஹேவாஹெட்ட என்ற தேர்தல் தொகுதியில் தெல்தோட்டை என்னும் பிரதேசத்தில் பள்ளேகம எனும் கிராமத்தின் நடுவே நலிந்து வளைந்து கண்டிக்குச் செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் குழிகள் நிறைந்து கிடக்கின்றது. இதனால் பொதுமக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். குறிப்பாக தாய்மார்களுக்கு இப்பாதையில் செல்லவே முடியாது. காரணம் பஸ்வண்டியை மேலே துக்கி கீழே அடிக்கிறது. எனவே ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு குழிகள் நிறைந்த பாதையைப்பற்றி சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அறிந்து கொள்வதற்காக தினமுரசு பத்திரிகையில் இவ்விடயத்தை பிரசுரிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

முஹமட் அனீஸ்
பள்ளேகம, தெல்தோட்டை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-06 இற்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 யா | 3 ச | ம் | ■ | டை | 4 ஆ |
| லை | 5 க | 6 ர | த | ம் | ■ | ந் |
| 7 வ | ம் | ச | ம் | ■ | 8 உ | தை |
| ன | ■ | ம் | ■ | 9 சீ | ப் | ■ |
| ம் | 10 வா | ■ | 11 பா | ப் | ப | ளி |
| ■ | ச | ■ | து | பு | ள | ள் |
| 12 ம | ல் | லி | கை | ■ | ம் | 13 வெ |

குறுக்கெழுத்துப் போட்டி இல.06ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. சு.ஜனகன் மஸ்கெலியா.
2. செல்வி.பூ. சசிகலா திருகோணமலை.
3. செல்வி.இ. ஷாமினி மட்டக்களப்பு.
4. சணா. கார்த்திகா புசல்லாவ.
5. திருமதி. அஸ்மியா அஷ்ரப் சாய்ந்தமருது–07.
6. கே.ஆர். ஞானேந்திரம் பண்டாரவளை.
7. எம். சிராஜ் கொழும்பு–09.
8. கணேஷ்வரன் கனகசிங்கம் வத்தளை.
9. ரி. புனிதவதி கொழும்பு–13.
10. செல்வி. பர்வீன் இஸ்மாயில் உடதலவின்ன.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

### அதிபர் முயற்சித்தும் கூட.....

மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள அளுத்கம மா/அல்-அஸ்ஹர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கணிசமான ஆசிரியர் பற்றாக்குறை நிகழ்கின்றது. இதனால் இப்பாடசாலை மாணவர்களது கல்வியறிவு பின்தள்ளப்படும் என பெற்றோர்கள் பலர் கவலையடைந்துள்ளனர். இப்பாடசாலையில் ஆரம்ப ஆண்டுமுதல் பதினொரு ஆண்டுவரை வகுப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய பகுதிகளில்போலல்லாது இப்பகுதி பாடசாலை மாணவர்கள் தனியார் வகுப்புக்கும் செல்லமுடியாது திண்டாடுகின்றனர். குறிப்பாக கணித, விஞ்ஞான, சிங்கள ஆசிரியர்களது பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்றது. எனினும் இவ்வாசிரியர் பற்றாக்குறையை நீக்க பாடசாலை அதிபர் ஜனாப் சமர்தீன் அவர்கள் முயற்சித்தும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே காணப்படுகின்றது. எனவே இப்பகுதி பெற்றோர்கள் எப்போது தமது மாணவர்களது மனக்கஷ்டம் தீரும் என அங்கலாய்க்கின்றனர்.

ஆகவே இதற்கு பிற்பாடாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா? என புகார் பெட்டியினூடாக இப்பகுதி மக்கள் வினா தொடுக்கின்றனர்.

ஏ.எம். ஆரிப்
மணன்வத்த, மாத்தளை.

### தண்ணீர் பிரச்சனை

ஊவா மாகாணத்தில் அப்புத்தளை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு முஸ்லீம் கிராமம் காஹாகொல்லை இந்தக் கிராமத்தில் பல வருடகாலமாக தண்ணீர் பிரச்சினை பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. இதில் எமது பள்ளிவாசலுக்கும் கூட தண்ணீர் இல்லை. இதைப்பற்றி எத்தனையோ முறை எமது தொகுதி பாராளுமன்ற அமைச்சர்களிடம் கடிதம் மூலமாகத் தெரிவித்தும் நேரடியாக விடயத்தைக் கூறியும் எவ்வித முயற்சியும் எடுப்பதாக இல்லை. இங்கு அவதியுறும் பொதுமக்களின் இந்த அவலநிலை எப்போது தீருமோ? இதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி உரிய அதிகாரிகளை பொதுமக்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

பி.எஸ்.எம்.மொகமட் இல்மி.
காஹாகொல்லை

எக்ஸ்ரே ரிப்போர்ட்

-நாரதர்-

# தமிழ், முஸ்லிம் அகதிகளின் அவலங்கள்

கடந்தவாரம் வெளிநாட்டில் நம்மவர் அகதிகளாய் பரவியிருந்து படும் இன்னல்கள் பற்றி சொல்லியிருந்தேன்.

வெளிநாட்டில் நம்மவர்கள் அகதிகளாய் படும் இன்னல்களுக்கு ஒன்றும் குறைந்ததல்ல இங்கு உள்நாட்டில் அகதிகள் படும் அவலம்.

சிங்கள-தமிழ்-முஸ்லிம்கள் என்று இனபேதமின்றி அகதிகள் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள்.

எனினும் தமிழ்-முஸ்லிம் மக்கள்தான் அகதிகளில் கணிசமானவர்களாக இருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேறிய தமிழ் மக்கள் இரண்டு வகையான வாழ்க்கை முறையில் இருக்கின்றனர்.

ஒன்று-கொழும்பில் வாடகை வீடுகளிலும் விடுதிகளிலும் நெருக்கு வாரத்தில் வாழ்பவர்கள். வசதியான வாழ்க்கையிலும் சிலர் இருக்கின்றனர். என்றாலும் என்னதான் வசதியிருந்தாலும் சொந்த காணி பூமியை கைவிட்டு, இன சனம் பிரிந்து வாழ்வது என்பது வருத்தமான வாழ்க்கைதான்.

இரண்டாவது பிரிவினர்-கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கொழும்பில் நான்கு அகதி முகாம்கள் தமிழர்களுக்கென்று இருந்தன. இப்போது ஒன்று மூடப்பட்டதால் மீதி மூன்று முகாம்கள்.

பெரும்பாலும் கிழக்குமாகாணத்தை சேர்ந்தவர்களே கொழும்பில் அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

அவர்களை மீண்டும் சொந்தப் பகுதிகளுக்கு செல்லுங்கள் என்கிறது அரசு. உதவி செய்கிறோம் என்கிறது சமூக சேவைகள் திணைக்களம்.

எனினும் அகதிகள் உள்ளூரப் பயம் கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கில் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் பலரது விபரங்கள் இதுவரை அறியப்படாத நிலையில் இருக்கின்றன.

புலிகளால் முஸ்லிம்கள் கொல்லப் பட்டபோது முஸ்லிம்கள் தரப்பில் இருந்து சில தவறான சக்திகள் மேற்கொண்ட செயல்பாடுகளும் பாதிப்புக்களை ஏற்படுத்தின. எய்தவனும் வேறு. அம்பும் வேறு. சாதாரண மக்களை தாக்குவது தவறு என்பதை மக்கள் உணர்ந்திருந்தும் தீயசக்திகள் கைவரிசை காட்டின. சாதாரண தமிழ், முஸ்லிம் மக்கள் பந்துகளாகினர்.

இவ்வாறான நிலையில் கொழும்பில் தங்கியிருக்கவே அகதிகள் விரும்பு கின்றனர்.

அண்மையில் கிழக்குக்கு அனுப்பப் பட்ட அகதிகளுக்கு போதுமான வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும் அகதிமுகாம்கள் பரவியிருக்கின்றன.



வெளியேற்றியது.

தமிழரசுக்கட்சிக் காலத்தில் இருந்தே யாழ்ப்பாண முஸ்லீம்கள் தமிழ் சமூகத்தின் அரசியல் அபிலாசைகளோடு இணைந்தே நின்றார்கள்.

தமிழரசுக்கட்சி சார்பாக அமரர் மாட்டின் பாராளுமன்றம் செல்ல உதவியது முஸ்லிம்களின் வாக்குகளே.

அதுதவிர வியாபார தொடர்புகள் பூகோள சூழல்கள் யாவும் யாழ்ப்பாண முஸ்லிம்களை தமிழ் சமூகத்துடன் பிணைத்தே வைத்திருந்தது.

எவ்வித காரணமும் இல்லாமல் அவர்கள் வெளியேற்றப்பட்டதுதான் பெரிய கொடுமை.

உடமைகளைக்கூட எடுத்துச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

அவர்களது உடமைகளை புலிகள் கயிறு கட்டி பாதுகாப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று கூறியிருந்தது.

பாதுகாத்தது வேறுகைகளுக்கு போய் சேராமல் அனைத்தையும் தாம் எடுத்துக் கொள்ளவே என்பது பின்னர் புலிகளின் விற்பனை நிலையங்களில் ஏலம் போன பொருட்கள் மூலம் அறியப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து எப்போது முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டார்களோ அன்றே தமிழ் பேசும் மக்கள் என்ற ஒன்றுபட்ட எண்ணக்கரு சிதைந்துவிட்டது என்று யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் சொன்னார். அவர் புலிகளின் எதிரியல்ல. ஆனால் முஸ்லிம்கள் விடயத்தில் புலிகளின் அணுகுமுறையை ஏற்காதவர்.

இப்போது கொழும்பிலும் அநுராதபுரத்திலும்-புத்தளத்திலும் முஸ்லிம் அகதிகள் எதிர்காலம் குறித்த கேள்வியோடு காலம் தள்ளுகின்றனர்.

இடையே புலிகள் மனம் மாறிவிட்டதாகவும், திரும்பி வருமாறு அழைக்கப் போவதாகவும் ஒரு 'செய்தி பரவியது. பின் அதுவும் பொய்யானது.

புலிகள் தமிழ் பேசும் மக்களின் பரந்துபட்ட ஐக்கியத்தில் நம்பிக்கையும் அக்கறையும் கொண்டிருந்தால் முஸ்லிம்கள் மீதான தமது அபாயகரமான தவறான அணுகுமுறைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

தொடரும் போரின் நிறுத்தமும் கௌரவமான அரசியல் தீர்வுமே அகதிகள் பிரச்சனைக்கும் நிரந்தரமான தீர்வொன்றினை உருவாக்கும்.

அகதிகள் பிரச்சனைக்கு தீர்வு என்பது வடக்கில் இருந்து அநியாயமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் தீர்வையும் உள்ளடக்கியதே. ■

அகதிகள் பிரச்சனையே விரிவாகிப் போனதால் சுவாரசியமான தலைநகர நிலவரங்களை சொல்ல முடியவில்லை. அது அடுத்த வாரம்.

# அடிபடும் பந்துகளாக சாதாரண மக்கள்!

அகதி முகாமில் வைத்துக் கைதானவர்கள் பற்றிய விபரங்களும் அதில் அடக்கம்.

அதுதவிர திருகோணமலையில் அகதிமுகாமில் கைதானவர்கள் பலர் நீண்டகாலத்தின் பின்னரே விடுதலை செய்யப்பட்டனர். கைதானவர்களில் பலர் குடும்பஸ்தர்கள். மற்றும் வயோதிபர்கள்.

அத்தோடு முன்பு ஒரு பிரச்சனை. மட்டக்களப்பிலும்-திருமலையிலும் வெள்ளை வான் ஒன்று காலன்போல் இரவில் மிரட்டித்திரிந்தது. இதுவரை வெள்ளைவான் மர்மம் வெளிப்படவேயில்லை.

அகதிகள் விடயத்தில் புலிகளும் அனுசரனையான போக்கைக் கடைப் பிடிக்கவில்லை.

அகதிமுகாம்கள் அருகே இருந்து தாக்குதல் நடத்துவது-பின்னர் அகதி முகாம் பக்கமாக ஓடித்தப்புவது போன்ற நடவடிக்கைகள் கிழக்கில் காணப்பட்டன.

வாழச்சேனை அகதிமுகாம் கைதிகளுக்கு புலிகளின் தாக்குதல் செயல் பாடொன்றே தூண்டுதலாக அமைந்தது.

அதுமட்டுமல்லாமல் கிழக்கின் சில பகுதிகளில் அகதிகளை காட்டுக்குள் செல்லும்படியும் புலிகள் உத்தரவிட்டிருந்தனர். அதனையடுத்தே காட்டுக்குச் செல்ல பயந்த அகதிகள் கொழும்பு அகதிமுகாம்களை நோக்கிப் படையெடுத்தனர்.

கிழக்கில் உள்ள அகதிமுகாம்களில் பராமரிப்புக்களும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. மழைக் காலங்கள் அகதிகளுக்கு அவலக் காலங்களாகவே கழிந்தன.

அவர் பார்வையிட்டார். இவர் பார்வையிட்டார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கும் போதும் அகதிகள் முகாம்களில் நிலமை மோசமாகவே இருக்கிறது.

அகதிகளுக்கான நிவாரணப் பொருட்களே போதுமானவையாக இல்லாத போது புலிகளும் தமக்கென்று அதில் பிடுங்கிக்கொள்கிறார்கள்.

கிழக்கின் பல பகுதிகளில் அகதிகளுக்கான நிவாரணத்தில் ஒரு பகுதி புலிகளுக்கும் போய்ச் சேருகிறது.

ஒரு எச்சரிக்கை கடிதம் போதும். நிவாரணப் பொருட்கள் இரகசியமாய் போய்ச்சேர்ந்துவிடும். தமிழ் ஊழியர்கள் பயத்தில் இருக்கிறார்கள்.

அண்மைய செய்தியின்படி இரு நெருக்கடிகளும், சுகாதார சீர்கேடுகளும் அங்குள்ள அகதிமுகாம்களில் நோய் நொடிகளை உருவாக்கி வருகின்றன.

அங்கு அகதி முகாம்களில் புலிகளின் எண்ணப்படியே காரியங்கள் நடக்கின்றன.

நிவாரணப்பொருள் பகிர்வில் அங்கும் புலிகள் ஒரு பகுதியை எடுத்துக் கொள்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் அகதிகளை அகதிகளாகவே வைத்திருக்கும் புலிகளின் நடவடிக்கைகள் கசப்பை ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த அகதிகளை அந்தப் பகுதிகளுக்கு திரும்பிச்செல்ல விடாது புலிகள் தடுத்து வருவதை குறிப்பிடலாம்.

குடாநாட்டின் தீவகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே அங்கு பெருந்தொகையில் அகதிகளாய் உள்ளனர். அவர்களில் கணிசமானோர் திரும்பிச் செல்லவும் விரும்புகின்றனர். புலிகள் அதை விரும்பவில்லை.

அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பெருந்தொகையான மக்கள் வாழ்வது தமிழர்கள் தங்கள் பக்கம் இருப்பதாக அரசு சொல்வதற்கு உதவும். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியான நிலவரமும், இயல்பான வாழ்க்கையும் திரும்பியுள்ளதாக அரசு காட்டும் என்று புலிகள் அமைப்பினர் கருதுகின்றனர்.

இது அகதிகள் பிரச்சனையை தமது இயக்க நிலைப்பாட்டில் இருந்தே விடுதலைப் புலிகள் நோக்குகின்றனர் என்பதையே உணர்த்துகிறது. நிச்சயமாக இது ஒரு தவறான அணுகுமுறையாகும்.

அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு செல்வதால் உள்ள பிரச்சனைகள் பற்றி புலிகள் தம் கருத்தைச் சொல்லலாம். ஆனால் போக விரும்புவோரை தடுத்து வைப்பதும், அவ்வாறான முயற்சியில் ஈடுபடுவோரை எச்சரிப்பதும் சரியாகாது.

மறுபுறத்தில் வடக்கே இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்போது குறிப்பிட்ட பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி விடுகிறார்கள். வயோதிபர்கள் மட்டும் தங்கியிருக் கிறார்கள்.

மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று அரசும், படையினரும் அறிவித்தாலும் கூட கடந்தகால கசப்பான அனுபவங்களை மக்கள் மறந்துவிடாதிருக்கிறார்கள்.

தீவிரமான ஷெல் வீச்சுக்களுக்கும், விமானக்குண்டுகளுக்கும் கண் இல்லை என்பதையும் மக்கள் அறிவர்.

புலிகளும்கூட துர்க்கை அம்மன் ஆலய கோபுரத்தில் ஏறி நின்று கோபுரத்தை தமது அரணாக பாவித்து தாக்குதல் நடத்தினார்கள். படையினரும் பதிலடி நடத்தினார்கள். சேதமானது கோபுரம் மட்டுமல்ல இந்துக்களின் உணர்வுகளும் தான். அதற்கான பொறுப்பு இரு தரப்புக்கும் உண்டு.

தாக்குதல் நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்தவர்கள் தாக்குதல்கள் ஓய்ந்த பின்னர் திரும்பிச் செல்லவே விரும்புகின்றனர்.

ஆயினும் அவர்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருப்பதையே புலிகள் விரும்புகின்றனர்.

தமது கட்டுப்பாட்டில் அவர்களை வைத்திருப்பது பாதுகாப்பு கருதியே என்று விடுதலைப்புலிகள் சொல்லுகின்றனர்.

புலிகள் தமது பாதுகாப்புக்காகவே அகதிகளை வைத்திருக்கின்றனர் என்று அரசும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் கூறுகின்றன.

மக்களின் பாதுகாப்பு பற்றி புலிகள் அக்கறை கொள்ளலாம்.

ஆனால் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வெளியேதான் பெரும்பான்மையான தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதை புலிகள் மறந்துவிடக்கூடாது.

அங்கு முப்படைகளும் உண்டு. பொலிசும் உண்டு. ஏனைய தமிழர் அமைப்புக்களும் உண்டு. எனவே சொந்தப்பகுதிகளுக்கு திரும்பிச்செல்ல நினைப்போரை புலிகள் தடுப்பது நியாயமாகாது.

அகதிகளால் அல்லல்படுவோரில் முஸ்லிம்களின் நிலையும் பரிதாபமானது.

வடக்கே தமிழ் சமூகத்தோடு அவர்களைப் போலவே அரசியல் அபிலாசைகளோடு வாழ்ந்தவர்கள் திடீரென்று ஒரு நாள் வெளியேற்றப் பட்டார்கள்.

துப்பாக்கி மனிதர்களிடம் காரணம் கேட்க முடியாது.

காலம் காலமாய் வாழ்ந்த மண்ணில் இருந்து ஒரு ஒலிபெருக்கி அறிவித்தல் முஸ்லிம்களை சுத்தமாக துடைத்து

## அதிரடி அய்யாத்துரை



பிரான்ஸ் தேசிய தினத்துக்காக கொழும்பில தடபுடலான விருந்துபசாரம். பிரான்ஸ் தூதரகம் உபயம். விரும்பிய சாப்பாடு. மற்றும் பானவகைகள். சந்தோசபானம். பத்திரிகையாளர் சிலரும் ஒரு பிடி மூக்குமுட்ட உள்ளே தள்ளியதை அவதானித்தது இருக்கட்டும். வேறை ஒரு சுவாரசியமான சங்கதி. விருந்துபசார மண்டபத்தின் ஒரு மூலையில தட புட கட புட சத்தம். அதைச்சுத்தி ஒரே கூட்டம். என்னடா விசயம் எண்டு எட்டிப்பார்த்தா கொத்துரொட்டி கணகணப்பா ரெடியாகிக் கொண்டிருந்தது. கியூவில வெள்ளைக்காரர்-ராஜதந்திரிகள் உட்பட நெருக்குப்பட்டதைப் பார்க்கேக்க கொத்து ரொட்டியை கண்டு பிடிச்சதுக்காக சத்தியமா கொலரைத்தூக்கி விட்டுக் கொள்ளலாம். வேறை எதிலை கொலரை தூக்கி விடுகிறதாம்.

நாட்டு நிலவரம் நொடிக்கொரு தரம் மாறிக்கொண்டிருக்குது. ஆறுதலா இருந்து அரைப்பக்கற் சிகரெட் புகைத்து காலாட்டிக்கொண்டு விமர்சனம் எழுதும் வேலையெல்லாம் சரிப்பட்டுவராது. பேச்சுநடக்கப்போகுது. சமிக்கை தெரியுது எண்டு எழுதிப்போட்டு நெட்டி முறிக்கேக்க மற்ற நியூஸ் வரும். எல்லாம் போச்சுது. அடிபாடாம் எண்டு. பிறகென்ண எழுதினதைக் கிழிச்சுப் போட்டிட்டுப்போய் வெள்ளி பார்க்க வேண்டியதுதான்.

இரண்டெழுத்துக்காரரும் அறிவிக்காமல் சம்பந்தப்பட்டவர்களும் அறிவிக்காமல் உறவினர் உண்ணாவிரதம் எண்டு நியூஸ் பரவியது எப்படி? தொண்டர் நிறுவனம் ஒன்றுதான் தப்பாச் சொல்லுதெண்டா தவறா செய்தி போட்ட ஆக்களை என்ன செய்யிறது. யாழ்ப்பாண செய்தியளை தீரவிசாரிக்காம காதில விழுற செய்தியளை போடுறதால உதுதான் பிரச்சனை.

தனித்துவ அரசியல்தலைவரை கிழக்கில் கால்வைக்க விடாமல் சதி நடக்குதாம். அப்பிடித்தான் அந்த வட்டாரங்கள் கவலையா சொல்லுகினம். என்னவோ செய்யுங்கோ அரசியல் சண்டையால சனத்தை அடிபட வையாதேங்கோ. இதுதான் எல்லாருக்கும் பொதுவா நான் சொல்லுறது. ஆனால் ஒரு விசயம் பாருங்கோ. நேற்று ஆதரிக்கிறது, இன்று எதிர்த்து எலக்ஷன் கேட்கிறது எண்ட நிலைப்பாட்டால அவற்ற பேரில கொஞ்சம் பழுது ஏற்பட்டுத்தான் போச்சுது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உலக ரவுண்டப்

## “இஸ்ரேலின் இதயத்தை நிர்மூலமாக்குவோம்” கைப்பற்றப்பட்ட ஒலிப்பதிவு நாடா பேசுகிறது

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புறூக்லின் பகுதியில் இருக்கிறது அபூபக்கர் பள்ளிவாசல்.

பள்ளிவாசலை சுற்றி அமெரிக்க



உளவுத்துறையினரும்-சாதாரண உடை தரித்த பொலிசாரும் பதுங்கியிருந்தனர்.

உள்ளே பதுங்கியிருந்தவர் அப்துல் ரஹ்மான். நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட பயங்கரவாதக் குழுவுக்கு அப்துல் ரஹ்மான் ஆன்மீக போதனை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்.

“அமெரிக்கரின் இரத்தம் அமெரிக்கரால் தான் சிந்தப்பட வேண்டும்” என்று அவர் பேசியதாகக் கூறப்படுகிறது. எனினும் நிரூபிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லை.

அவரைக் கைது செய்யத்தான் அவர்கள் மசூதிக்கு வெளியே காத்திருந்தார்கள்.

காத்திருந்தவர்கள் உசாரானார்கள். மசூதியிலிருந்து நீளமான வெள்ளை அங்கியும் சிவப்புத் தொப்பியும் அணிந்து ஒரு உருவம் வெளியே வந்தது. வாசலில் நின்ற வாகனத்திற்குள் ஏறியது.

அடுத்த நொடியே பொலிசார் வாகனத்தை வளைத்துப்பிடித்தனர். “வாகனத்தை விட்டு வெளியே வா” என்று கட்டளையிட்டனர்.

உருவம் வெளியே வந்தது. ஆனால் அதுதேடப்பட்ட அப்துல் ரஹ்மான் அல்ல.

அவரைப்போல் பொய் வேடம் புனைந்து பொலிசாரை ஏமாற்ற நடந்த நாடகம்.

அப்துல் ரஹ்மான் மறுநாள் மாலை தான் மசூதியில் இருந்து வெளியே வந்தார். அவரைச்சுற்றி அரணாக வந்தது அவரது ஆதரவாளர் குழு.

20 மணிநேரப் பேச்சு வார்த்தைக்குப் பின்னரே அப்துல் ரஹ்மான் மசூதியை விட்டு வெளியே வந்தார். பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

சட்டபூர்வ வழிகளில் அவர்மீது நடவடிக்கை எடுக்கவும், குண்டுவெடிப் போடு தொடர்புபடுத்தவும் போதிய சான்றுகள் இல்லை.

இதே வேளை குண்டுவெடிப் புக்களும், அவற்றைத் தொடர்ந்து வெளியாகியுள்ள தகவல்களும் நியூயோர்க் நகரம் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளதைப் புலப்படுத்துகின்றன.

ஜோர்ஜ் வாஷிங்டன் நினைவுக் கட்டிடத்தையும், மாணிக்க வைரக்கற்கள் வெட்டி மெருகு தீட்டப்படும் கட்டிடத்தையும் தகர்க்கவும் திட்டமிடப்பட்டிருந்த விசயம் இப்போது அம்பலமாகியிருக்கிறது. அங்கு பணிபுரிந்தவர்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது முக்கியமானது.

வெடிகுண்டுகள் தயாரிக்கும் போதே ஒரு குழு மடக்கிப் பிடிக்கப்பட்டது.

அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ள ஒலிப்பதிவு நாடா ஒன்று இப்படிப் பேசுகிறது.

“அமெரிக்காவில் உள்ள இஸ்ரேலின் இதயம் நிர்மூலமாக்கப்பட வேண்டும்”

தனது அடாத கூட்டாளியால் அமெரிக்காவுக்கும் பிரச்சனை.

## மாளிகையின் கதவுகள் திறக்கின்றன! பாவம் ராணி - பணக் கஷ்டம்!!

பிரிட்டிஷ் மகாராணியின் வசிப்பிடமான பக்கிங்ஹாம் அரண்மனையில் உள்ள வின்சர் கோட்டை தீப்பிடித்து எரிந்தது அறிந்த செய்திதான்.

இப்போது தீப்பிடித்த மாளிகையை திருத்தியமைக்க மாகாராணி எலிசபெத் முடிவு செய்துள்ளார். முடிவை செயல்படுத்த பணக்கஸ்டம் இடிக்கிறது. கையைக் கடிக்கிறது.

அதனால் மாளிகையைப் பார்வையிட பொதுமக்களை அனுமதித்து அதற்கு கட்டணம் வசூலிக்க மகாராணி முடிவு செய்துள்ளார்.

அநேகமாக ஆகஸ்ட் 7ம் திகதிக்கு முன்னர் மாளிகை பொதுமக்கள் பார்வையிட திறந்து வைக்கப்படும்.

தினசரி 7000பேர் வரை பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

அனுமதிச்சீட்டுக்களை முன்னதாகவே பெறவேண்டும். ஏற்கனவே விற்கப்பட்ட அனுமதிச்சீட்டுக்கள் சில கறுப்புச்சந்தையில் அதிக விலைக்கு கைமாறுவதாகவும் தகவல் வந்துள்ளது.

அரச மாளிகையை பொதுமக்கள் பார்வையிட அனுமதிப்பது பிரிட்டிஷ் அரச குடும்பவரலாற்றிலேயே இதுதான் முதல்தடவை. புகைப்படம் எடுக்க பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## தலையலங்காரம் பற்றிக்குறை சொல்வதா? தாய் மகளுக்கு வெட்டிய குழி!



அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்த 25வயது இளமங்கை செறில் ஜோன்ஸ்.

அன்று செறில் ஜோன்ஸ் தனது தலைமுடியை புதுவிதமாக அலங்கரித்திருந்தார். மகளின் முடி அலங்காரத்தைப் பார்த்த தாயாருக்கு முகம் கறுத்துவிட்டது.

“இது அவ்வளவு நன்றாக இல்லை மகளே” என்று கூறியிருக்கிறார். அவ்வளவுதான். மகளுக்கு வந்தது பாருங்கள் கோபம். கோபம் என்றால் அப்படியொரு கோபம். காரசாரமான வாக்குவாதம் முடிவில் தாயாரின் கழுத்தைப்பிடித்து தன் கரங்களால் நெரித்தாள். உடும்புப்பிடி. 53வயதான தாயார் இறந்தார்.

இறந்து விட்டாளே தாய் என்று கலங்கினாளா? ஆத்திரப்பட்டுவிட்டேனே என்று பதறினாளா? அதுதான் இல்லை. தாயாரின் உடலை ஒரு பெரிய டிரங் பெட்டியில் போட்டு மூடினாள். தாயாரின் மோட்டார் வண்டியில் பிணத்தை ஏற்றி வீச இடம் தேடி ஒருவாரமாக அலைந்தாள்.

இதற்கிடையே அந்தத் தாயாரை ஒருவாரமாக காணாதவர்கள் உடனே பொலிசில் புகார் செய்தனர். காரின் இலக்கத்தையும் கொடுத்தனர்.

பொலிசார் காரின் இலக்கத்தை வைத்து கண்டுபிடித்து பார்த்தபோது உள்ளே அழுகிய பிணம்.

இப்போது தண்டனைக்காக சிறையில் காத்திருக்கிறாள் மகள்.

ஈன்ற பொழுதில் பெரிதுவந்த தன்மகளின் தலையலங்காரம் பிழையென்று சொன்னதால் தலைபோன தாய். இதென்ன புதுநானூறோ?

## தேன்நிலவில் ஒரு சோகக் கதை





சமீபத்தில் பத்திரிகைகளின் பக்கங்களை பரபரப்பாக நிரப்பிக்கொண்டு நடைபெற்ற திருமணம் எதுவென்று கேட்டால் ஜப்பான் இளவரசரின் திருமணம் என்று உடனே சொல்லி விடுவீர்கள்.

புராதன நகரமொன்றில் இவர்களது தேன்நிலவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

குற-குறு பிரதேசத்தில் புதுமணத் தம்பதியினர் சந்தோச உச்சிக்கு செல்வதுதான் தேன் நிலவு. சாதாரண மனிதர்கள் விடயத்தில் அதுசரிதான்.

ஆனால் அரச குடும்பத்தினர் விடயத்தில்.

அப்பப்பா எத்தனை சடங்குகள். எத்தனை சம்பிரதாயங்கள். நடக்க, இருக்க, எழுந்து நிற்க என்று எதற்கெடுத்தாலும் சம்பிரதாயம். அதுவும் ஜப்பான் அரச குடும்பத்தினர் சம்பிரதாயங்களை கெட்டியாகப் பிடித்திருப்பவர்கள்.

தேன்நிலவன்று தம்பதியினர் ஐ.சி என்ற பாரம்பரிய நகருக்கு அனுப்பப்பட்டனர். அங்கு தமது மரபு வழிக்கடவுளான சூரியனுக்கு பிரார்த்தனை செய்வதில் நேரம் கழிந்தது.

ஜப்பான் அரச பரம்பரை வழக்கப்படி தமது திருமணத்தை முறைப்படி சூரியனுக்கு தெரிவித்துவிட வேண்டும்.

அதுதான் தேன்நிலவு.

ஐ.சி.நகரில் இருந்த நாட்களில் இளவரசர் நகுஹிட்டோவும் துணைவி மசாகோவும் பிரார்த்தனை மாளிகையின் தனி அறைகளில்தான் தனித்தனியே தங்கினார்கள்.

பின் டோக்கியோ திரும்பி மறைந்த மன்னரான ஹிரோஹிடோவின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

இதற்கெல்லாம் பிறகுதான் உண்மையான தேன்நிலவு.




கனடாவில் இனவெறியை நிறுத்துக என்று அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் நடத்திய ஊர்வலம்

## நோர்வேயில் ஒரு போட்டி!

நோர்வே தமிழ் விளையாட்டுக் கழகம் வருடம் தோறும் ஐரோப்பிய ரீதியிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடாத்தி வருகிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7ம் 8ம் திகதிகளில் ஒஸ்லோவில் இவ்வருடத்திற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

## இலண்டனிலும் இசை முயற்சி!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி.சீலன் ஒரு வித்தியாசமான கலைஞர். இப்போது லண்டனில் இருக்கிறார். கேட்போர் ஆச்சரியத்தால் விழிகளை விரிக்கும் வகையில் அங்கிருந்தே ‘கொம்பக்ற் டிக்ஸ்க்’ மூலமாக இசை வடிவம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவர் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுன்கலைக் கல்லூரியில் வீணை வாத்தியம் கற்றவர். லண்டனில் உள்ளபோதும் தனது கலை முயற்சிகளை தொடரும் சீலன் பாராட்டக்குரியவர்.

## ஜெர்மனியில் தமிழாலயம்

ஜெர்மனி நகரில் உள்ள பிறேமவோ-நகரில் ‘தமிழாலயம்’ என்னும் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.இது புலிகள் அமைப்பினரின் முயற்சி என்று சொல்லப்படுகிறது.

## லஞ்சத்தில் மோகம் சிறையிலே வாசம்!

சீனாவில் லஞ்சம் வாங்கிய வங்கி அதிகாரிகள் 8 பேருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக கடனுதவி வழங்கிய மற்றொரு அதிகாரிக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## பைத்தியக்காரத்தனமான காதலன் காதலியை முடித்தான் தானும் மடிந்தான்!

அமெரிக்காவில் ஹில்டன் நகரில் தன் காதலியை கடத்திச் சென்றான் காதலன்.

காதலனின் பெயர் கான்சலாய் (வயது 27) காதலியின் பெயர் எஸ்காபிடோ (வயது 26)

அவளை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று அறையொன்றுக்குள் அடைத்து வைத்தான். பின்னர் அவளோடு பேசியபடியே திடீரென்று துப்பாக்கியால் சுட்டான். காதலி மடிந்துபோக, தன்னைத் தானே சுட்டுக்கொன்று அவனும் மடிந்து விட்டான்.

## விடை கொடு முத்தம்!

பிரிட்டிஷ் இளவரசி டயானாவும் இளவரசர் சார்ள்சும் பிரிந்தபின்னர் சமீபத்தில் ஒரு விழாவில் இணைந்து கலந்து கொண்டனர்.

அவர்களது மகன்களான 11 வயதான வில்லியம் மற்றும் 8வயதான ஹாரி ஆகியோரின் பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டி ஒன்றிலேயே இருவரும் கலந்து கொண்டனர்.

அதனையடுத்து தமது பிள்ளைகளை சீராக வளர்க்கும் விடயத்தில் இருவரும் ஒன்றுபடக்கூடும் என்று அவதானிகள் கூறுகின்றனர். அந்த அவதானிகள் கூறுவதை மேலும் உறுதிப்படுத்திய சம்பவம் அந்த விழாவில் டயானா வழங்கிய முத்தம். விழா முடிந்து சாள்ஸ் விடைபெறும் போது அவரை டயானா முத்தம் கொடுத்து வழியனுப்பிவைத்தார். அதனை சிலர் மட்டுமே கவனித்தனர். அதில் ஒருவர் அவர்களது மகன் வில்லியம்.



www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது – இராஜதந்திரி

# கிரிக்கெட் இராஜதந்திரம்

> *"Indian team to Sri Lanka would do more than all the diplomats and politicians could do to bring the two peoples together. It's people to people contacts which must be made possible. Its these interactions which can bring any two countries together.*
> ***-Dr. Neville Kanakaratne, The Sri Lankan High Commissioner in India.***

இலங்கை -இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான பந்தயங்கள் சூடுபிடித்திருக்கும் தருணம் இது!

சுமார் எட்டு வருடங்களின் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி தற்போது இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த எட்டு வருட காலத்தில் இலங்கை, இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. கூடவே இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளிலும் ஏற்ற, இறக்கங்கள் நிலவியிருந்தன.

இந்திய கிரிக்கெட் அணி இலங்கை புறப்படுமுன்னர் சென்னையில் தங்கியிருந்து தீவிர பயிற்சிகளைப் பெற்றிருந்தது. இலங்கையின் சீதோஷ்ண நிலையை பொத்த தன்மை சென்னையில் காணப்பட்டதனாலேயே இந்திய கிரிக்கெட் அணி அங்கு தங்கியிருந்து பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தது.

இந்திய கிரிக்கெட் அணி இலங்கை புறப்படுமுன்னர் சென்னையில் உள்ள இலங்கைத் துணை ஸ்தானிகராலயத்தில் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு விருந்துபசாரம் ஒன்றும் நடத்தப் பட்டிருந்தது.

இவ்விசேட விருந்துபசாரத்துக்கென இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் டாக்டர் நெவில் கனகரட்னவும் புதுடில்லியிலிருந்து சென்னை வந்திருந்தார்.

டாக்டர் நெவில் கனகரட்ன இலங்கையின் ராஜ தந்திர வட்டாரத்தில் ஒரு சிரேஷ்ட ராஜதந்திரியாக இருக்கின்றார்.

எந்தவொரு கடினமான விடயத்தையும் சுவையாகவும், நகைச் சுவைப்பாங்குடனும் எவருக்கும் புரியக் கூடியவகையில் எடுத்துரைப்பது இவரிடம் உள்ள சிறப்பம்சமாகும்.

இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராக நியமிக்கப்படு முன்னர் டாக்டர் நெவில் கனகரட்ன, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றியிருந்தார்.

அமெரிக்காவில் கடமையாற்றிய பின்னர் முன்னாள் சோவியத் யூனியனிலும் இலங்கைத் தூதுவராக டாக்டர் நெவில் கனகரட்ன நீண்ட காலம் பணி புரிந்திருந்தார்.

எனவே இருபெரும் வல்லரசுகளாக இருந்த அமெரிக்காவிலும், அன்றைய சோவியத்யூனியனிலும் இலங்கையின் தூதுவராகப் பணியாற்றியதன் மூலம் உலக விடயங்களிலும், இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கைகளிலும் மிகவும் பரிச்சயமும், அனுபவமும் வாய்ந்த ஓர் இராஜதந்திரியாகவே டாக்டர் நெவில் கனகரட்ன காணப்படுகின்றார்.

சென்னையில் டாக்டர் நெவில் கனகரட்ன இந்திய கிரிக்கெட் வீரர்களை வழியனுப்பிவைக்கும் வைபவத்தில் உரையாற்றியபோது, "இராஜதந்திரிகளாலும், அரசியல் வாதிகளாலும் ஏற்படுத்த முடியாத உறவுகளை இக்கிரிக்கெட் சுற்றுப் பயணத்தின் மூலம் ஏற்படுத்த முடியும். அத்துடன் இன்றைய காலகட்டத்தில் இரு நாடுகளினதும் மக்களுக்கிடையிலான உறவுகளே அத்தியாவசியமானவையாகக் காணப்படுகின்றன. எனவே இக் கிரிக்கெட் சுற்றுப் பயணத்தின் போது ஏற்படக் கூடிய பரஸ்பர உறவுகள் இரு நாடுகளையும் மேலும் நெருக்கமடையச் செய்யும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

டாக்டர் கனகரட்ண தமது உரையின் இறுதியில் இந்தியக் கிரிக்கெட் அணியினரை நோக்கி "நீங்களே உண்மையான நல்லெண்ணத் தூதுவர்கள்" என்றும் தெரிவித்திருந்தார்.

எனவே ஸ்தானிகர் கனகரட்ன கூறியவை, காலமறிந்து வெளியிடப் பட்ட கருத்துக்களாகவே காணப் படுகின்றன.

இலங்கைக்கு இந்திய கிரிக்கெட் அணி சுற்றுப் பயணஞ் செய்வது இது முதல் தடவையல்ல.

முன்பு பல தடவைகள் இந்திய அணி இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததுடன், இந்தியாவின் முன்னணிக்கிரிக்கெட் வீரர்கள் பலரும் இலங்கை ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆயினும் 1985ம் ஆண்டில் இலங்கைக்கு இந்திய அணி இறுதியாக மேற்கொண்ட விஜயத்தையடுத்து இலங்கை இந்திய அரசியல் வட்டாரங்களில் தோன்றிய முரண்பாடான நிலைமைகளே கடந்த எட்டு ஆண்டுகளில் இலங்கை, இந்திய அணிகளின் பரஸ்பர சுற்றுப் பயணங்களில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்திய கிரிக்கெட் அணி 1983ம் ஆண்டில் உலகக் கிண்ண சாம்பியன் பட்டத்தையும் வென்றிருந்தது. கூடவே சர்வதேச கிரிக்கெட் சபையிலும் (International Cricket Council) இந்தியா ஒரு முக்கிய உறுப்பு நாடாக விளங்குகின்றது.

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு கடந்த ஆண்டில் மேற்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் பயணத்தையடுத்து மேற்கொண்டுள்ள முதலாவது வெளிநாட்டுப் பயணமாகவே அதன் தற்போதைய இலங்கை விஜயம் விளங்குகின்றது.

இந்திய கிரிக்கெட் அணி கடந்த ஆண்டில் தென்னாபிரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயம், சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே கருதப்பட்டது.

தென்னாபிரிக்கா அதன் நிறவெறிக்கொள்கை காரணமாக உலக அரங்கில் ஓரங்கட்டப்பட்டிருந்ததுடன், ஒலிம்பிக் உட்பட சர்வதேச விளையாட்டுப் பந்தயங்களில் பங்குபற்றுவதற்கும் உரிமையற்ற நிலையிலேயே காணப் பட்டது.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்கள் வெள்ளையர்களின் நிறவெறிக் கொள்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்தியாவின் மகாத்மா காந்தியடிகள் கூட இளம் பாரிஸ்டராக (Barrister) தென்னாபிரிக்காவில் கடமையாற்றிய போது நிறவெறியர்களால் மிகுந்த அவமானத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தார்.

மகாத்மாகாந்தியுடன் ஆயிரக் கணக்கான இந்தியர்கள் தென்னாபிரிக்காவில் நிறவெறியர்களின் கெடுபிடிகளுக்குள்ளாகியிருந்தனர். இந்தியாவில் காந்தியடிகள் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், இளைஞராக விருந்தபோது தென்னாபிரிக்க வெள்ளையர்களுக்கெதிராகவும் நிறவெறியை ஆட்சேபித்துப் போராட்டங்களை நடத்தியிருந்தார்.




டாக்டர் நெவில் கனகரட்ன

ஆனால் தென்னாபிரிக்க வெள்ளை இன அரசு கடந்த சில வருடங்களில் தனது நிறவெறிக் கொள்கைகளைப் படிப்படியாகக் கைவிட ஆரம்பித்ததுடன், சிறையிலடைத்து வைத்திருந்த கறுப்பினத் தலைவரான திரு.நெல்சன் மன்டெலாவையும் ஓரிரு வருடங்களுக்கு முன்னர் விடுதலை செய்திருந்தது.

இதனையடுத்து சர்வதேச நாடுகள் தென்னாபிரிக்காவை மீண்டும் ஏற்றுக் கொள்ள ஆரம்பித்த சமயம் சர்வதேச கிரிக்கெட் சபையில் தென்னாபிரிக்காவுக்கு உரிய அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்தியாவே வலியுறுத்தியிருந்தது.

தொடர்ந்து இந்தியாவும், தென்னாபிரிக்காவும் கடந்த ஆண்டில் முதல் தடவையாக பரஸ்பர கிரிக்கெட் சுற்றுப் பயணங்களையும் மேற்கொண்டிருந்தன.

இந்திய அணி கடந்த ஆண்டில் தென்னாபிரிக்கா சென்ற போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவரும், தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்களின் மதிப்புக்குரிய தலைவருமான திரு.நெல்சன் மன்டெலாவையும் சந்தித்திருந்தது.



திரு. நெல்சன் மன்டெலா இந்திய கிரிக்கெட் அணியின் மத்தியில் அன்று உரையாற்றிய போது, தாம் சிறுவனாக இருந்த காலத்தில் தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவெறிக் கெடுபிடிகளை நினைவுகூர்ந்ததுடன், அப்போது தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஏதாவது ஓர் அணி கிரிக்கெட் பந்தயத்தில் குதிக்கும் பட்சத்தில் அந்த அணியை ஆதரித்தும், தென்னாபிரிக்காவின் வெள்ளையர் இன அணியை எதிர்த்தும் தாம் கோஷமெழுப்பியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய கிரிக்கெட் அணி முன்பாக திரு. நெல்சன் மன்டெலா நிகழ்த்திய இந்த உரை தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவெறியின் கெடுபிடிகளை தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுவதாகவே விளங்கியிருந்தது.

தென்னாபிரிக்காவில் கடந்த ஆண்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய கிரிக்கெட் அணி, காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் வாழ்ந்த போது வசித்த வீட்டையும், அவர் நடத்திய ரொல்ஸ்டோய்ப்பண்ணையையும் (Tolstoy farm) பார்வையிட்டிருந்தது.

எனவே இந்திய அணி கடந்த ஆண்டில் மேற்கொண்ட தென்னாபிரிக்க விஜயம், தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கொள்கை அஸ்த்தமனமாவதையும், கறுப்பினத்தவர்கள் அங்கு ஏற்றம் பெறுவதையும் பறைசாற்றுவதாகவே அமைந்திருந்தது.

எனவே நிறவெறி அஸ்த்தமனம் பெற்று வரும் தென்னாபிரிக்காவுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணத்தையடுத்து இந்திய அணி இலங்கைக்கு தற்போது மேற்கொண்டுள்ள பயணம் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே விளங்குகின்றது.

இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் டாக்டர் நெவில் கனகரட்ன இந்திய கிரிக்கெட் அணியினரை நல்லெண்ணத் தூதுவர்கள் என்று வர்ணித்திருந்தார்.

இந்திய கிரிக்கெட் அணியைப் பொறுத்தவரை அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே தற்போது காணப்படுகின்றது.

கிரிக்கெட் பந்தய ரீதியாக பல சிறந்த இளம் ஆட்டக்காரர்களைக் கொண்டிருப்பதனால் மட்டுமல்ல, இன, மத ரீதியிலான பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் அமைந்திருப்பதன் காரணமாகவும் இந்திய அணி ஒரு தரமான அணியாகவே விளங்கி நிற்கின்றது.

இந்தியா இந்துக்களையே பெரும் பான்மையாகக் கொண்ட நாடாகும். இங்கு முஸ்லிம்கள் சிறுபான்மை இனத்தவர்களாகவே விளங்குகின்றனர்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு இந்து-முஸ்லிம் பிரச்சனையும் ஒரு பெரும் சவாலாக இருந்து வருகின்றது.

இன்று, நேற்று மட்டுமல்லாது பன்னெடுங்காலமாகவே இந்து-முஸ்லிம் சர்ச்சை இந்தியாவில் ஒரு பெரும் கெடுபிடியாக இருந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் கூட வட இந்தியாவின் அயோத்யாவில் ராமஜன்ம பூமி என்ற மதப்பூசல் இந்து-முஸ்லிம் மதவாதிகளிடையே பெரும் மோதலை ஏற்படுத்தியிருந்தது.

இது தவிர கடந்த ஆண்டில் இந்தியாவின் பம்பாய் நகரில் கூட இந்து-முஸ்லிம் கலகங்கள் வெடித்திருந்ததுடன் பல உயிர், உடமை இழப்புக்களும் இதனால் ஏற்பட்டிருந்தன.

கடந்த ஆண்டில் பம்பாய் நகர கலகங்களின் போது, முஸ்லிம் குடும்பம் ஒன்று காரொன்றில் வந்துகொண்டிருந்த வேளை, தீவிரவாத இந்து இளைஞர்கள் சிலர் அந்த முஸ்லிம் குடும்பத்தை வழிமறித்துத் தாக்குவதற்குத் தயாரானார்கள்.

அப்போது அவ்விடத்துக்கு விரைந்து வந்த நபர் ஒருவர் காரில் இருந்த முஸ்லிம்களைத் தாக்க வேண்டாமென ஆக்ரோஷமாகக் கத்தியதுடன், வேண்டுமானால் அந்த அப்பாவி முஸ்லிம்களுக்குப் பதிலாகத் தம்மைத் தாக்கும்படி சத்தமிட்டார்.

கலகக்காரர்கள் செய்வதறியாது அந்த நபர் முன்பாக கைகட்டி நின்றனர். அவ்வாறு சத்தமிட்ட நபர்வேறு எவருமல்ல, அவரே இந்திய கிரிக்கெட்ட வரலாற்றில் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்தவரும், உலக கிரிக்கட் அரங்கில் கொடிகட்டிப் பறந்தவருமான சுனில் மனோகர் கவாஸ்கர் ஆவார்.

கவாஸ்கரின் இச்செயல் அரசியல்வாதிகள், ராஜதந்திரிகளால் கூட சாதிக்கமுடியாத ஒரு மாபெரும் சாதனையாகவே விளங்கியிருந்தது. கிரிக்கெட் வாழ்வில் சாதனை வீரராகப் பெயர் பெற்றிருந்த திரு. கவாஸ்கர், இந்த நடவடிக்கையின் மூலம் தமது பொதுவாழ்விலும் ஒரு சாதனை வீரராக மாறியிருந்தார்.

எனவே இத்தகைய கவாஸ்கரை உருவாக்கியதும் ஓர் இந்திய கிரிக்கெட அணியே. இதுதவிர முஸ்லிம் இனத்தவரான மொஹமட் அஸாருத்தீனை தற்போது இந்திய அணித் தலைவராகக் கொண்டிருப்பதன் மூலம், குறுகிய இன்-மத வாதாங்களுக்கும் இந்தியா சாட்டை அடி கொடுத்துள்ளது.

இந்நிலையில் இனவாதம் புரையோடிப்போயிருக்கும் இலங்கைக்கு தற்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர்களை 'நல்லெண்ணத் தூதுவர்கள்' என்று நமது ஸ்தானிகர் டாக்டர் நெவில் கனகரத்ன வர்ணித்திருப்பது சாலப் பொருத்தமானதாகவே விளங்குகின்றது.

ஏனெனில் இங்கையின் இன-மதவாதிகளுக்கும் இந்த நல்லெண்ணத் தூதுவர்களின் வருகை ஒரு சாட்டை அடியாகவே இருக்குமெனக் கருதலாம்.





www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முகத்திற்கேற்ற முடி அலங்காரங்கள்

## லேடீஸ் ஸ்பெசல்

*அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் தவறானதல்ல.*

*அழகானவர்களாக உங்களை நீங்களே எண்ணிக் கொள்ளும்போது தன்னம்பிக்கை தானாக வரும்.*


*ஆள் பாதி ஆடைபாதி என்பார்கள். முடியைப் பற்றி மட்டும் மறந்து விட்டார்களா என்ன?*

*இதோ உங்கள் முக அழகை மெருகூட்டும் முடி அலங்காரங்கள். முயன்றால் முடியும் உங்களால்.*


ஒவ்வொரு வகையான முகத்துக்கும் ஏற்ற தனித்தன்மை வாய்ந்த சிகை அலங்காரம் உண்டு. எத்தகைய சந்தர்ப்பமானாலும் அதற்கேற்றதாக அலங்காரம் அமையும்.

சிறந்த சிகை அலங்காரம் உங்கள் முக அமைப்பையே மாற்றிவிடுவதல்லாமல் உங்களுடைய தன்னம்பிக்கையையும் அது வளர்க்கக்கூடியது. உங்கள் ஆளுமையையும் உங்கள் வாழ்க்கை முறையையுமே அது மாற்றியமைத்துவிடும். சிகை அலங்காரத்தின் அடிப்படையை அறிந்து கொண்டால் விதம் விதமான முறைகளை நீங்களே பரீட்சித்துப் பார்க்கலாம். சில அலங்கார முறைகளை இங்கு தருகிறோம்.





1. முழுமையான முகமுடையவரானால் கன்ன எலும்புள்ள பகுதி, கன்னப்பொட்டு ஆகிய இடங்களில் மென்மையான பூச்சினை தடவுங்கள்.



2. எடுப்பான மூக்குடையவரானால் சுருள்களற்ற முடியலங்காரமே சிறப்பாக இருக்கும்.



3. ஏறு நெற்றி உடையவர்கள் முன் மயிரை நெற்றியின் மேற்புறத்தில் விளக்கூடியதாக அமைத்துக் கொள்ளலாம்.



4. தாடை சற்றுப் பெருத்திருக்குமானால் அதன் கீழ் மட்ட அளவில் முடி முன்புறமாக வந்துவிழத்தக்கதாக முடி கத்தரிக்கப்படல் நல்லது.

5. குறுகிய கழுத்துடையவர்கள் நாடி அளவுக்குக் கீழ் முடி பின்புறம் தொங்க விடலாகாது. உச்சியின் பின்புறம் சற்று உயரமாக கொண்டை அமைத்துக் கொண்டால் அழகாகத் தோற்றமளிக்கும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான முறையில் தலை அலங்காரம் வேகமாகவும் வசதியாகவும் போட முடியுமானால் எல்லோருக்கும் நல்லது. ஆனால் சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது அதே அழகு மிளிர வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்குமே உண்டு. உங்களுக்கு எத்தகைய தோற்றமுண்டோ அதற்கேற்றாற் போன்ற வடிவமைப்பை ஏற்படுத்தும் முறைகளை இங்கே தருகிறோம்.

### நவீன சிகை அலங்காரம்

1. கேளிக்கைகளில் கலந்து கொள்ளும் போது இம்முறை சிறப்பாகவிருக்கும். முடியை நீரில் நனைத்து பின்னர் சற்றுத்தடிப்பான நீள்சுருள்களாக சுருட்டித் தொங்க விடுங்கள். காய்ந்த பின்னர் விரல்களால் கோதி விடுங்கள். இவற்றை முகத்தின் ஒரு பக்கம் விழத்தக்கதாக விட்டுவிடலாம்.
2. நெற்றிமீது மயிரின் விளிம்பு விழத்தக்கதாக முடிவெட்டப்படும். பிடரி மீது விழும் மயிர் குறுகியதாக வெட்டப்பட வேண்டும்.
3. இம்முறைக்கு முடி தாடையின் அளவுக்கேற்றவாறு வெட்டப்படும். மெருகூட்டுவதற்காக பின்புறமாக முடிகளுக்கூடாக நிபனைச் செலுத்தி நெற்றிக்குமேல் முன்தலையில் அழகான முடிச்சினைப் போட்டுக் கொள்ளலாம்.

### பாரம்பரிய அலங்காரம்

1. இம்முறைக்கு முடியைப் பின்புறமாகக் கோதிவிட்டு உச்சியின் சற்றுப் பின்புறமான பகுதியில் 'பணிஸ்' போன்ற அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதே இடத்தில் சாதாரண கொண்டையும் போடலாம்.
2. உச்சியின் பின்புறமாக பின்னி விடலாம். அழகு சேர்க்க இதில் பூ வைக்கலாம். கதம்பத்தையோ மெல்லிய பூச்சரத்தையோ பின்னல் முழுவதும் செருகி விடலாம். பின்னலின் இடையில் பிடரிக்குச் சற்று மேல் ஒரு கிளிப்பைப் பிணைத்துக் கொள்ளலாம்.
3. இது சாதாரண - ஆனால் அழகான முறை. பிடரியில் ஒரு கொண்டை போட்டுக்கொள்ளலாம். இது குலைந்து போகாதிருக்க ஒரு கொண்டை வலையையும் இணைத்துக் கொள்ளலாம். மேலும் அழகு செய்வதானால் தலையின் இரு புறத்திலும் மெல்லிய பின்னல் சடை போட்டு கொண்டையுடன் இணைத்து விடலாம்.

## -பட்டுச் சேலைப் பரிசுத் திட்டம்-

**முதல் பரிசு- பட்டுச்சேலை**

**ஆறுபேருக்கு ஆறுதல் பரிசுகள்- இல்ல உபயோகப் பொருட்கள்!**

**என்ன செய்யவேண்டும்?**

இன்று முதல் இனிவரும் பதினைந்து தினமுரசு வாரமலர்களில் வரும் லேடீஸ் ஸ்பெசல் விடயங்களை கூர்ந்து கவனமாய் படிக்கவேண்டும்.


பதினைந்து வாரத்தின் பின் பதினைந்து கேள்விகள் தரப்படும். சரியான விடை எழுதுவோரில் ஏழு பேர் அதிஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பிரபலமான ஒருவர் அதிஷ்டசாலிகளை தேர்ந்தெடுப்பார்.

முக்கியமான பலத்த நிபந்தனை. போட்டியில் மகளிர் மட்டுமே பங்கு கொள்ளமுடியும்.

# நீங்களும் தைக்கலாம்

## சாறி பிளவுஸ் (ரவிக்கை)



**தேவையான அளவுகள்:**
(உதாரணத்திற்கு இவ் அளவுகள், உங்கள் அளவுகளைப் பாவிக்கவும்)

1. நீளம் 13"
2. மார்புச்சுற்றளவு 36"
3. இடுப்புச்சுற்றளவு 30"
4. இடுப்பிலிருந்து நடு மார்பு உயரம் 9 1/2"
5. தோளிலிருந்து தோள்நுனி வரை அகலம் 14 1/2"
6. 2 1/2 பதிந்த குறுக்களவு 12 1/2"
7. இடுப்பிலிருந்து தோள்வரை உயரம் 11 1/2"
8. 5 பதித்த குறுக்களவு 15"
9. பக்கப் பொருத்து 6 1/4"

**வரையும் முறை:**
**முன் பக்கம்:**

13" நீளமாகவும் 36" மார்புச் சுற்றளவோடு 2 1/2" கூட்டி அதை 4 ஆல் பிரித்து வரும் அளவான 9 1/2" (அண்ணளவாக)த்தை அகலமாகவும் கொண்ட நீள் சதுரத்தினை வரைந்து ABCD எனப் பெயரிடவும்.

கழுத்தகலத்தினை எடுப்பதற்காக கீழ் வரும் சமன்பாட்டைப் பயன்படுத்தி 2 1/2" குறுக்களவு+ 1/4 அண்ணளவாக Aயில் இருந்து Bயை நோக்கி அளந்து E எனப் பெயரிடுக. கழுத்தாழத்தினை வரைவதற்காக நீளத்திலிருந்து (36") நடு மார்பு உயரத்தினைக் (9 1/2") கழித்து வரும் அளவை அண்ணளவாக 3" எனக் கொண்டு Aயில் இருந்து C யை நோக்கி அளந்து F எனப் பெயரிடவும். E,F புள்ளிகளை வரைகோட்டால் இணைத்து கழுத்தினைக் கீறவும்.

தோள் அளவை எடுப்பதற்காக தோளில் இருந்து தோள் நுனிவரை அகலத்தை (14 1/2") 2இல் பிரித்து வரும் அளவை A யில் இருந்து Bயை நோக்கி அளந்து Gஎனப் பெயரிடவும்.

தோள் சரிவை எடுப் தற்காக நீளத்திலிருந்து (36")இடுப்பிலிருந்து தோள் நுனிவரை உயரத்தினைக் (11 1/2") கழித்து வரும் அளவை G யில் இருந்து கீழ்நோக்கி எடுத்து Hஎனப் பெயரிடுக. E,H புள்ளிகளை நேர் கோட்டால் இணைத்து தோள் சரிவினைக் கீறவும்.

F இல் இருந்து கீழ் நோக்கி 2 1/2" அளந்து முதலாவது குறுக்களவை வரைந்து I எனப் பெயரிடுக. 2 1/2" பதித்த குறுக்களவை (12 1/2") 2இல் பிரித்து வரும் அளவான 6 3/4" த்தை Iயில் இருந்து A,Bக்குச் சமாந்தரம் வரைந்து J எனப் பெயரிடவும். பக்கப் பொருத்தில் (6 1/4") 1/4" கழித்து வரும் அளவான 6"த்தினை Dயில் இருந்து மேல் நோக்கி எடுத்து K எனப் பெயரிடவும். H,J,K ஆகிய புள்ளிகளை வளைவான கோட்டினால் இணைத்து கை வளைவினைக் கீறவும்.

Dயில் இருந்து 1/2" உள்நோக்கி எடுத்து L எனப்பெயரிடவும். L,K புள்ளிகளை இணைத்து பக்கச் சரிவினைக் கீறவும். C யில் இருந்தும் உள்நோக்கி 2 1/2" எடுத்து M எனப் பெயரிடவும். மிகுதித் தூரத்தினைக் கணிப்பதற்காக இடுப்புச்சுற்றளவோடு (30") + 1/4 கூட்டி அதை 4ஆல் பிரித்து வரும் அளவான 7 1/2(அண்ணளவாக) த்தில் Cயில் இருந்து எடுத்த உயரம் 2 1/2" க் கழித்துவரும் அளவான 5"த்தை Lஇல் இருந்து M ஐ நோக்கி எடுத்து N எனப் பெயரிடவும். M,N புள்ளிகளின் ,இடைப்புள்ளியை சரியாக எடுத்து அதிலிருந்து மேல்நோக்கி 3" அளந்து O எனப் பெயரிடவும். MO,NO புள்ளிகளை நேர்கோடுகளால் இணைத்து முதலாவது டக்சினைக் கீறவும். கை வளை கோட்டின் கூடிய வளைவுள்ள இடத்தினை நேர் கோடுகள் மூலம் ஒன்றையொன்று ஊடறுத்துச் செல்லுமாறு வரைந்து இருகோடுகளும் சந்திக்கும் செங்கோணத்தை மையமாகக் கொண்டு அதனூடாக கீழ்டக்சிலிருந்து 1/2" மேல் இருக்கும் வண்ணம் நேர்கோடு வரைந்து P எனப் பெயரிடவும். இந்நேர்கோட்டின் பக்கங்களில் 1/4" அளந்து நேர்கோடுகள் மூலம் P யுடன் இணைத்து இரண்டாவது டக்சினைக் கீறவும் Oவில் இருந்து மேல்நோக்கி 1/2" அளந்து அதிலிருந்து பக்கமாக 1/2" எடுத்து Q எனப் பெயரிடவும். Qவில் இருந்து A,C க்கு செங்குத்து வரைந்து அக்கோட்டிற்கு இரு பக்கங்களிலும் 1/4" அளந்து நேர் கோடுகளால் Q வுடன் இணைத்து மூன்றாவது டக்சினை வரையவும். C யில் இருந்து Aயை நோக்கி 2 1/2" எடுத்து Rஎனப் பெயரிடவும். Dயில் இருந்து Bயை நோக்கி 3" எடுத்து Sஎனப் பெயரிடவும். Oவில் இருந்து கீழ் நோக்கி 2 1/2" எடுத்து Tஎனப் பெயரிடவும். R,S,T புள்ளிகளை வளை கோட்டினால் இணைத்துக் கொள்ளவும். இப்பகுதியை வேறு பேப்பரில் பதிவு செய்து இப்பகுதி தனியாகவும் மேல்பகுதி தனியாகவும் எடுத்துக் கொள்ளவும். எல்லாப் பகுதிகளிலும் படத்தில் காட்டியவாறு தையல் இடைவெளிக்காக 1/2" கூடுதலாக விடுதல் வேண்டும். பக்கப் பொருத்திற்கு 3/4" விடுதல்வேண்டும். (தொடர்ச்சி அடுத்த வாரம்)

**திருமதி உமா மனோகரன் (பாரீஸ் ஈழநாடு)**

## அட்வைஸ்

மனித வாழ்க்கையில் காணும் மிக முக்கியமான விஷயங்களில் காதலும் ஒன்று. 'காதல்' என்ற சொல் ஆண், பெண் இருபாலாரிடையே மிக்க மனவெழுச்சியூட்டுவதுடன் மனவுறவும், உடலுறவும் ஒன்றையே அது குறிக்கின்றது. காதல் கலவியாசையுடன் நின்றுவிடுவதாகாது. ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலாரும் அவர்களுடைய வாழ்நாளில் பெரும்பகுதியில் தனிமையாக வாழும் நிலையிலிருந்து தப்ப உதவும் வழியே காதலாகும்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கொள்ளும் காதலால்தான் ஈருடல் ஒருயிர் என்ற தன்மை உருவாகும். சிற்றின்ப இயல்புணர்ச்சியை நாகரிக மக்கள் காதலுடனின்றி முழுமையாகத் தணித்துக் கொள்ள முடியாது.

மணமான பின்னர் காதல் புரிவது எவ்வளவு அவசியமென்று பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. நன்றாகப் பழகாமல் ஒதுங்கியிருப்பதால் மணவாழ்வுக்கு எவ்வளவு ஊறு ஏற்படுமென்று பல பெண்களுக்குத் தெரிவதில்லை.

சிற்றின்ப நாட்டம் தமக்குக் குறைவு ஆதலால், தாம் ஆடவரைவிட ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் என்று பெண்களில் பலர் கருதியதுண்டு. மரபையொட்டிய கல்வியைப் பெற்ற பெண்ணிடம் அடக்க ஒழுக்கமும், சிற்றின்பத்தில் கருத்தில்லாதவள் போல் இருக்கும் பெருமிதப் போக்கும் காணப்படும். எளிதில் உடல் சம்மந்தமான நெருக்கமான உறவு கொள்ள அவள் இணங்குவதில்லை. இப்போக்கினால் கணவன், மனைவியிடையே உண்மையான தோழமை தோன்ற இயலாது.

மேலும் காதலில்லாத கலவியால் அதன் முழுப் பயனடைய முடியாது.

தவிரவும் குழந்தைகளிடம் பெற்றோர் அன்பாயிருப்பதற்கும் அவர்களிடம் காதல் இருப்பது அவசியமாகிறது. பெற்றோர்கள் ஒருவரையொருவர் காதலித்தால் அத்தகைய காதல் உறவு குழந்தைகளுக்கு ஜீவாதாரமாகவும் இருக்கும். இப்பயனை அடைவதற்கு காதல் செய்பவரின் சுய நலத்தோடு, காதலிக்கப்படுபவரின் நலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மனித இனத்தின் உயிர் நூல் ரீதியான நோக்கம்-இன உற்பத்திக்காக இயற்கை விதித்துள்ள நியதி நிறைவேறக் காதல் பயன்படுகிறது. பெருமையும் அருமையும் உள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் தேவையான ஒழுங்கும் தியாகமுமே காதலுக்கும் தேவையானது.

# காதல் என்பது எதுவரை?

காதல் உன்னதமான இன்பமூட்டும் நாதமாகும். பெண் இன்பந்தரும் வீணையாகும். ஆனால் அந்த வீணையிலிருந்து இன்ப நாதத்தை எழுப்ப அதன் நிலைகளையும், தந்திகளையும், விரல்களைமாற்ற வேண்டிய முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எத்தனை மனிதர்கள் -ஒரு பெண் என்றால் என்ன என்றே தெரியாமல் மணந்து கொள்கின்றனர்! சில ஆண்கள் பெண்ணைப் பற்றியும், காதலைப் பற்றியும், ஏதும் அறியாதவர்களாகவே மணந்து கொள்கின்றனர்.

"காதல் என்ற வார்த்தைக்கு தூய்மையான அன்பு என்ற பொருள் விளங்கி வருகின்றது. ஆனால் இன்று ஒரு பெண்ணிடம் குறிப்பிட்ட நோக்கத்திற்காக செலுத்தும் அன்பை மட்டுமே அது குறிக்கிறது. கணவன்-மனைவியிடம் கொண்டிருக்கும் அன்பைக் கூட காதல் என்று சொல்லமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்யாணமாகாத ஆணும், கல்யாணமாகாத பெண்ணும் கொண்டிருக்கும் உடல் உறவு சம்மந்தப்பட்ட நட்புக்கு மட்டுமே காதல் என்று பெயரிட வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது.

"காதலித்துக் கலியாணம் செய்து கொண்ட மனைவியாக இருந்தாலுங்கூட அவளைக் காதலி என்று சொல்லிக்கொள்ள அவன் விரும்புவதில்லை. ஏனெனில் காதலி என்பதை தாழ்வாகவும் மனைவி என்பதை கௌரவமும் கண்ணியமுமிக்க உயர்வாகவும் நினைக்கின்றான் – இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது காதல் என்பது மிகவும் குறுகிய ஆயுளையுடையது என்று ஆகிறது. வாலிபப்பருவத்தில் பிறந்து கல்யாண நாளன்று இறந்துவிடும் அற்ப ஆயுசு படைத்ததாக ஆகிவிடுகிறது. இதைத்தான் கவிஞர்கள் தெய்வீகக்காதல் அமரத்துவக் காதல் எனப் போற்றினார்கள். லைலா-மஜ்னூன், அனார்கலி-சலீம் போன்ற நிறைவேறாத காதலர்கள் தான் இன்று சிரஞ்சீவித்தனம் பெற்று விளங்குகின்றனர். திருமணம் செய்து கொண்ட காதல் செத்து மடிகின்றது" இது சில இன்றையோரின் கருத்து-

உண்மையில் திருமணத்திற்குப் பின் காதல் இறந்து விடுகிறதா என்றால் இல்லவேயில்லை. அது நமக்கு நாமே சிருஷ்டித்துக் கொண்ட ஒரு மனப்பிராந்தி, உள்மன எதிர்ப்புணர்ச்சி, கணவன்- மனைவியானபின் குடும்பம் சமூகம் என்ற புதிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுவதால் அதற்குத் தக்கபடி பலதரப்பட்ட பொறுப்புகளும், கடமைகளும் இருவருக்கும் ஏற்பட்டு விடுவதால் "விளையாட்டுக்காதல்" அங்கே தலைதூக்கியாட வகையில்லாமல் போய் விடுகிறது. மேலும், முன்பு ஒருவருக்கொருவர் எட்டாப்பழமாக இருந்து வந்ததால் இருவருள்ளும் தீ கனன்று எரிந்தது. ஆனால் இப்போது இருவரும் கணவன்- மனைவியாகி விட்டதால் நித்தம் போனால் முத்தம் சலிக்கும், கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய்விடும் என்றாகிவிடுகிறது.

இருவரும் ஒரேவீட்டில் வாழ்ந்து ஒரே சயனத்தில் ஒவ்வொரு இரவையும் கழிப்பதால் "புதுமைக்கவர்ச்சி" குறைய ஆரம்பித்து விடுகிறது. ஏக்கம் அழிய இனிமை குன்றி விடுகிறது. இப்பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்கும் நாம் சில விஷயங்களைக் கையாள்வது சிறந்தது.

மிதமிஞ்சிய போகத்தில் இருக்காமலிருக்க வேண்டும். கணவனும், மனைவியும் மிகவும் விழைந்து இணங்கினால் ஒழிய உடல் உறவு வைத்துக் கொள்ளல் கூடாது. தங்களுக்குத் தாங்களே இந்தக் கட்டுப்பாட்டை விதித்துக் கொள்ள வேண்டும். மனைவியைத் தனக்குக் கீழ்ப்பட்டவளாக மதியாமல் அன்புள்ளம் படைத்த வாழ்க்கைத் துணைவி, தன்னுடன் சமபங்காளி எனப்போற்றி நடக்க வேண்டும். புணர்ச்சியைவிட புணர்ச்சிக்காக ஏங்கும் மையலில் தான் இன்பம் அதிகம்.

உடலால் ஏற்படும் இன்பத்தைவிட உள்ளத்தால் ஏற்படும் இன்பம்தான் சக்தி வாய்ந்தது. எனவே அடிக்கடி புணர்ச்சியிலீடுபட்டுக் காதல் உணர்ச்சியை வற்றவைத்து விடக்கூடாது. உடலுறவு இனிதானது. இருப்பினும்- உள்ளத்து உறவுதான் இன்றியமையாதது.

'காதல்' என்பதின் எல்லை ஆரம்பத்தில் குறுகியதாக இருந்தாலும் அது நாளடைவில் விரிவடைய வேண்டும். மனைவியைக் காதலித்த அவன் பின்னர் குழந்தைகளைக் காதலிக்கிறான்; பேரன், பேத்திகளைக் காதலிக்கிறான், நாளடைவில் உலகத்தையும், அதிலுள்ள மக்களையும் காதலிக்குமளவுக்கு மனதை விருத்திப்படுத்தி காதலை வளர்க்க வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற பரந்த மனோ நிலையை அடைகிறான்.

-சிலாவத்துறையான் எஸ்.ஏ. ரலீஸ்-

# தன்னையறிந்தவள் பெண்!

**எழுத்தாளர் பாலகுமாரன் பெண் உணர்வு புரிந்து எழுதுகிறவர், ஏன் அப்படி எழுதுகிறாய் என்ற கேள்வி வர 'போராடும் பெண்மணிகள்' என்ற தன் நாவலின் முன்னுரையில் பதில் சொல்லுகிறார் இப்படி. எப்படி? அடுத்த பந்திகளில் உள்ளபடி.**



நான் பெண்களுக்காகவே எழுதுகிறேன் என்று கேலி பேசியவர் உண்டு. ஆண் என்ன அல்ப ஜந்துவா? எல்லா ஆணும் அடாது செய்பவரா? அதென்ன பெண்கள் பக்கமே பேசுவது? என்று சலிப்போர் கேட்டதுண்டு.

எனக்குச் சார்பேதுமில்லை.

இருப்பினும் இந்த நாற்பத்து நாலு வயசில் காண்பன கேட்பனவற்றில் பெண் அல்லல்படுவதே அதிகமிருக்கிறது. இவ்வல்லலுக்கு பெண்களே பாதி காரணம் என்பதும் புரிகிறது. ஒரு சமூகத்தில் பாதி, உணர்வுச் சகதியில் உழன்றிருக்க வாழ்வு முன்னேற்றம் எவ்விதம் கைகூடும். அடுத்த பாதியும் அதில் இழுபடுவதைக் கண்டு, அறியாது முகம் திரும்புவது எவ்விதம்.

ஆணாதிக்கம் அழிவு பெண்ணாதிக்கம் தேவையோ ஒரு பெண்மணி கேட்டார். இல்லை. நான் பெண்ணாதிக்கம் போற்றவில்லை. ஆதிக்கம் கொள்வது அழியும் என்பது விதி.

அதே சமயம் அடங்கி ஒடுங்கி இருப்பவர் நிமிர்ந்து முகம் நோக்குவதும் கூடத் தவறு. எதிர்த்து கேட்பதுகூடக் கெடுதல், விலகி நடப்பதென்பது இழுக்கு என்கிறவாதம் தவறானது.

அன்பு செய்ய ஆதிக்கம் அறிந்து கொள்ள ஆளுமை இடைஞ்சல். ஆளுமை வேண்டாம் என்று எதிர்க்கிற பெண்கள் தன்னையறிந்து கொண்டவர்கள்.

தன்னையறிந்தவர்களால்தான் பிறரை உணரமுடியும்.

தன்னையும் பிறரையும் ஒருங்கே உணர்வதில்தான் இன்னொரு தலைமுறை வளமாக முடியும்.

என் கவலை இன்றைய பெண்கள் மட்டுமல்ல நாளைய பெண்கள்.

இனி ஜனிக்கப் போகும் குழந்தைகள்.

ஆளுமையில் துயரப்படாத ஆணும் பெண்ணுமே அடுத்த தலைமுறை பற்றிக் கவலைப்பட முடியும்.

போர் என்பது வேதனை. போராட்டம், அவமானம் என்று சுருளாமல் தொலைநோக்கோடு போரிட்டவர்களை எனக்குத் தெரியும். அவர் அழுத கண்ணீர் இந்த நிலத்தைப் பண்படுத்தியிருக்கிறது. தேசம் மாறியிருக்கிறது. நாம் நல்ல விதை விதைக்க வேணும். அந்த முயற்சி இது.

இந்த முயற்சிக்கு ஆலோசனை சொன்னவள் என் அம்மா. ஓய்வு பெற்ற தமிழ்ப் பண்டிதை. இப்போது ஒதுங்கி நின்று ஊர் பார்க்கும் விவேகி.

அவள் பேச்சுத் தூண்டுதலால் இந்தக் கட்டுரைத் தொடர்,

படித்துவிட்டுப் பேசுங்கள். உங்களுக்குள்ளேயே விவாதம் செய்யுங்கள். பொய்யாய் ஊருக்குச் சிரிப்பதை விட உள்ளே மலர்ந்த மௌனம் உயர்வு, ஆங்காரமாய் சரி, தவறு சண்டையிடுதலைவிட தன்னுள் தன் இனம் பற்றித் தெளிதல் சிறப்பு.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் – ஆரோக்கியம் பெறுங்கள் – ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்


## முதுகு வலியா? கவலை விடுங்கள்!

**1. பாரம் தூக்குதல் (செய்ய வேண்டிய முறை)**

முதுகை வளைக்காதீர்கள். முழங்காலையே வளையுங்கள். காலை ஊன்றியே பொருளைத் தூக்குங்கள். பின்னர் உடலுடன் நெருக்கமாக வைக்க முயலுங்கள். அதிகமான எடையுள்ள பொருளானால் தனியாகத் தூக்காமல் உதவிக்கு வேறொருவரை அழையுங்கள். திடீரெனப் பழு அமுக்கம் ஏற்படாதிருக்க, தூக்க வேண்டிய முறையையிட்டு திட்டமிடுங்கள். பாரம் தூக்கும்போது உங்கள் பாதங்கள் பூமியில் நன்கு பதிந்திருக்க வேண்டும்.

**1. A. தவிர்க்க வேண்டிய முறை:**

பாரம்தூக்கும் போது கால்களை நேராகவோ அல்லது ஒன்றுடன் ஒன்று பின்னியிருக்கும் போதோ தூக்கலாகாது. தோள் உயரத்துக்கு மேல் எப்பொருளையும் உயர்த்த வேண்டாம். இதனால் காயங்கள் ஏற்படலாம்.




**2. நிற்கும் போதும் நடக்கும் போதும் செய்யவேண்டிய முறை.**

நிற்கும்போது எப்போதும் ஒரு காலை ஓர் உயரத்தின் மேலே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய முதுகை நேராக வைத்துக் கொள்வதற்கு வசதியாக முழங்காலை மடக்கிக் கொள்ளலாம். நடக்கும் போது நிமிர்ந்து நடக்க வேண்டும். முகத்தை நேராக வைத்துக் கொள்ள வேண்டும்.

**2.B.தவிர்க்க வேண்டியவை.**

ஒரே நிலையில் நீண்ட நேரம் நிற்கலாகாது. கால்களை நேராக வைத்துக்கொண்டு குனிய வேண்டாம். நடக்கும்போதும் குனிந்து கொண்டு நடக்கலாகாது. நீண்டநேரம் நிற்கும்போதும் நீண்ட தூரம் நடக்கும்போதும் உயர்ந்த குதியோ அல்லது உயரமான 'பிளாற்போம்' கொண்ட பாதணியோ அணியலாகாது.



**வாகனம் செலுத்தும் போது இருக்க வேண்டிய முறை**

சாரதிகளுக்குரிய இருக்கையை முன்னோக்கி நகர்த்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் முழங்காலில் மடக்கம் ஏற்பட்டு இடைப் பகுதிக்குச் சற்று உயரமாக இருக்கும். நேராக இருந்து கொண்டு சக்கரத்தை இருகைகளாலும் பற்றிக் கொள்ள வேண்டும்.



**3.A. செய்யத்தகாத முறை.**


சாரதிக்கான சக்கரத்திலிருந்து வெகுதூரம் வரை சாய்ந்து கொண்டு வண்டி செலுத்தலாகாது. எட்டியிருந்து சக்கரத்தைக் கைகளால் பிடிப்பதும் கால் விசைமற்றும் பிறேக் முதலியவற்றை எட்ட இருந்து கொண்டு பயன்படுத்துவதும் முதுகு மற்றும் அவயவங்களுக்கு நோவை உண்டு பண்ணக்கூடும்.

**4. இருத்தல் - சரியான முறை**

கால்களை நிலத்தில் பதிக்கத்தக்க உயரமான இருக்கையில் அமருங்கள். முழங்கால் இடைக்குச் சற்று உயரமாக இருக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும். ஓர் உயரமான ஸ்ரூலில் உங்கள் பாதங்களை வைத்துக் கொள்ளலாம். முதுகு இருக்கையின் பின்புறத்தை தொட்டால்போல் நேராக நிமிர்ந்து இருப்பதே நல்லது.

**தவிர்க்க வேண்டிய முறை**

4.A. அதிக உயரமான இருக்கையில் அமரலாகாது. உங்கள் பணிக்கான மேசையிலிருந்து அதிகதூரம் தள்ளியிருக்காமல் அருகில் அமர்ந்து கொள்ளவும். முதுகைக் கூனிக்கொண்டிருக்கவோ குனிந்து கொண்டிருக்கவோ கூடாது.



**5. சயனித்தல் ஏற்றமுறை**

நல்ல உறக்கத்துக்கு சமசீரான படுக்கை இருந்தால் உங்களுக்கும் உங்கள் முதுகுக்கும் நல்லது. எந்தப் பக்கத்துக்கு வேண்டுமானாலும் திரும்பிப்படுக்கலாம். அவ்வாறு படுக்கும்போது முழங்கால் மடிந்திருக்க வேண்டும். முதுகு படுக்கையில் படும்படி தூங்குவதானால் முழங்கால்களுக்கடியில் ஒரு தலையணையை வைத்துக் கொள்ளலாம்.

**5.A. தவிர்க்க வேண்டியவை.**

உடலை நீட்டி நிமிர்த்திப் படுக்க முடியாத இருக்கை, சோபா, தொய்ந்து போன படுக்கை மற்றும் போதுமான ஆதாரமற்ற எவையிலும் படுக்கலாகாது. இவற்றில் முடங்கிக் கிடந்தால் இடுப்பு, முதுகு ஆகியவற்றில் பிடிப்பு ஏற்படலாம். வயிறுபடப்படுத்தலும் தீங்கினைத் தரும்.



## பெண்களே பாக்கியசாலிகள்!

பெண்களுக்கு பிடித்தமான ஒரு செய்தி.

பெண்கள் 30 வயதின்பின்னர் ஆண்களைப் பார்க்கிலும் செவிப் புலன் அதிகம் கொண்டவர்களாக உள்ளனர். பெண்களின் காது ஆண்களைவிட இருமடங்கு கூர்மையானது என்று அண்மைக் கால ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. வயதானவர்களின் ஆற்றலையிட்டு தேசிய நிலையில் ஆராய்ந்த நிறுவனம் இதனைக் கண்டுபிடித்துள்ளது. வயதானவர்கள் 700 பேரை 10 வருடங்களாக இந்நிறுவனம் ஆராய்ந்தது. அதன்மூலம் கேட்கும் சக்தி பெண்களிடமே அதிகம் உள்ளது என்பதனை விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.

## உணவு முறை அழகு தந்தது

மாரிலு ஷெக்னர் என்ற அழகான நடிகைக்கு, இப்போது நாற்பது வயது. 5 வருடங்களுக்கு முன்னர் தான் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை புரட்டிப் பார்த்தவருக்கு ஒரே அதிர்ச்சி.

முன்னர் அழகாக இருந்தேன் இப்போது அழகு போய்விட்டதே என்ற கவலையா? அதுதான் இல்லை.

இப்போது தான் அவர் முன்பை விட அழகாக இருக்கிறார். அதைப் பெருமையுடனும் சொல்கிறார்.

அவர் செய்ததெல்லாம் இதுதான்.

பால் உணவுகளான வெண்ணெய், பாற்கட்டி, தயிர் ஆகியவற்றை ஒதுக்கி விட்டார். பால் அருந்துவாரா? அதுவும் கிடையாது.

அவரது பெற்றோர்கள் இருதய நோயால் பாதிக்கப் பட்டனர்.

மூட்டுவாத நோயும் இருந்தது. அந்த பாரம்பரிய நோய்கள் தனக்கு வராமலிருக்க உணவு முறைகளை மாற்றிக்கொண்டார். கைமேல் பலன்.

நோய் போ. அழகுவா.



www.padippakam.com



# சைட் பிஸினஸ்
# காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வோர்

முன்னர் பிரபல நடிக, நடிகையர்கள் தமது கடைசிக் காலத்தில் அடுத்த வேளைக்கஞ்சிக்கே அலைபட்ட கதை புதியவர்களுக்கு பாடமாக இருக்கிறது.

சிறந்த நகைச்சுவை நடிகர் சந்திரபாபு கண்ணதாசனையே தன் வீடு தேடி வந்து காக்க வைத்தவர்.

பின்னர் நாலுகாசுக்கு நாலுபேர் பின் கையேந்தி மடிந்து போனார்.

சந்திரபாபுவாக மாற செந்தில் தயாராக இல்லை. சென்னை சாலிக்கிராமத்தில் வளசரவாக்கத்தில் என்று பல ஊர்களில் வீடுகளை வாங்கிப் போட்டு வாடகைக்கு விட்டுள்ளார்.

பாக்கியராஜ் 'பாக்யா', 'மினி பாக்யா' என்று இரு சஞ்சிகைகள் நடத்துவதோடு போரூரில் மருத்துவமனை, சித்தாறு என்னும் பகுதியில் தென்னந்தோப்பு பங்கு மார்க்கட் வியாபாரம் என்று வருமானம் தேட பல வழிகள்.

விஜயகாந் படத்தயாரிப்பு, விநியோகம், சோப்பு-பவுடர் ஏஜன்சி வாடகை டாக்ஸி வியாபாரம் மதுரையில் மில், மகாலிபுரம் பகுதியில் பண்ணை என்று கைவசம் பல தொழில்கள்.

சுப்பர் ஸ்டார் ரஜனிகாந் பெப்ஸிகோலா ஏஜன்சி, பெங்களூரில் கெமிக்கல், லெதர், பிளாஸ்ரிக் தொழிற்சாலைகள், இப்போது புதிதாக படத்தயாரிப்பு விநியோகக் கம்பனி என்று வருமானம் தேடும் பலதுறைகள்.

இவ்வாறு சினிமாவை மட்டும் நம்பாமல் வருமானம் தேடும் வேறுதுறைகளை நாடியுள்ள நட்சத்திரங்களின் பட்டியல் நீள்கிறது.

## காத்திருக்க நேரமில்லை

அடுத்தடுத்து ஏற்பட்ட தொடர் தோல்விகளுக்குப் பிறகு கார்த்திக் காத்திருக்கிறார். கார்த்திக் அவரது சொந்தச் சகோதரர் தயாரிக்க குஷ்பூ ஜோடி கைகொடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் வரவுள்ள படம் காத்திருக்க நேரமில்லை. இசை இளையராஜா. புதிய நட்சத்திரங்கள் பிரபலமாகும் போது காத்திருக்க நேரமில்லைதான். மார்க்கட்டை தூக்கி நிறுத்தினால் தான் உண்டு.



பூவையின் மேனியில் காளையின் ஆராய்ச்சி ரூப் கி ராணி சோரோன் கா ராஜாவில் அனில் கபூர் - ஸ்ரீதேவி.



கட்டபொம்மன் படத்தில் சரத்குமார், வினிதா

## ஜனகராஜ் தொடங்கும் -புதுத்தொழில்-

சிரிப்பு நடிகர் ஜனகராஜ் மார்க்கட் இப்போது டல்லாகி இருக்கிறது.

திருமதி பழனிச்சாமிக்குப் பிறகு இயக்குநர் சுந்தர்ராஜன், சிங்காரவேலனுக்குப் பிறகு வடிவேலு என்று புதியவரவுகள் கவுண்டமணி செந்தில் கூட்டணிக்கே சவால்விடும்போது ஜனகராஜ் என்ன செய்ய முடியும்!

பார்த்தார் வதயாண்டி இதழ் ஒன்றுக்கு ஆசிரியராகப் போகிறார். ஏற்கனவே எஸ்.வி. சேகரும் ஒரு சிரிப்பு பத்திரிகை தொடங்கி பின் கையைச் சுட்டுக்கொண்டது ஜனகராஜிக்கு தெரியுமோ என்னவோ?

## பத்திரிகை உலகிலிருந்து சினிமா உலகுக்கு இடம் பெயர்ந்தவர்கள்

சரத்குமார்-தமிழக திமுக. ஆதரவு நாளேடான தினகரனில் சில காலம் பணிபுரிந்தவர்.

மன்சூர் அலிகான்-உலகில் அதி நீளமான தலைப்புக்கொண்ட படத்தை வெளியிட்டுள்ள இவர் முன்னர் திரைச்சுவை-சினிமா மெயில் போன்றவற்றில் நிருபராக இருந்தவர்.

சந்திரசேகர்-திரைவானம் என்ற பத்திரிகையில் பணிபுரிந்து பின் பாரதிராஜா கண்பட்டதால் நடிகரானவர்.

இயக்குநர் வஸந்த்-சாவி வார இதழின் உதவி ஆசிரியராக இருந்தவர். இயக்குநர் எஸ்.பி. முத்துராமன்-அதிகமான ரஜனி படங்களை இயக்கிய எஸ்.பி.எம். கண்ணதாசன் நடத்திய தென்றல் பத்திரிகையில் துணை ஆசிரியராக பணியாற்றினார்.

இயக்குநர் மகேந்திரன்-முள்ளும் மலரும் உதிரிப்பூக்கள் போன்ற வெற்றிப்படங்களை தந்தவர். அதற்கு முன்னர் துக்ளக் பத்திரிகையில் உதவி ஆசிரியர்.

## வில்லன் நம்பியாரின் வெற்றியின் இரகசியம் என்ன?

நம்பியார்-மறுக்கமுடியாத வில்லன். எம்.ஜி.ஆர் ரசிகர்களால் வழி மறித்து தாக்கப்படவிருந்த அனுபவங்கள் அவரது நடிப்புக்கு கிடைத்த வெகுமதிகள்.

நம்பியார் தனது அனுபவத்தில் ஒரு கையளவானதை மட்டும் சொல்கிறார் கேளுங்கள்.

"எனது சினிமா பிரவேசம் 1935ம் ஆண்டு ஆரம்பமானது. நான் வில்லன் பாத்திரம் ஏற்று நடித்த காலகட்டமே அதிகம். ரசிகர் மனதில் வில்லனே ஆழமாகப் பதிகிறான். திருடாதே படத்தில் திரு. எம்.ஜி.ஆரோடு நடித்தேன். ஒரு கட்டத்தில் எம்.ஜி.ஆரோடு மோதுவேன். அப்போது மாடிப்படிகளில் இறங்கி அதன் கீழே பதுங்குவேன். என்னை விரட்டி வரும் எம்.ஜி.ஆர் படிக்கட்டுகளில் இறங்குவார். "இறங்காதீர்கள், இறங்காதீர்கள் கீழே நம்பியார் இருக்கிறான்" என்று படம் பார்க்கும் ரசிகர்கள் கத்துவார்கள். இதுதான் என் வெற்றியின் இரகசியம்" என்கிறார் இன்றும் பிரகாசிக்கும் நம்பியார்.

## ராணி இரு...

ஸ்ரீதேவியை பம்பாய் பட...
கொண்டதால் தமிழ் பட...
ஸ்ரீதேவிக்கல்ல.
இன்றைய தேதியில் ஸ்ரீ...
ஸ்ரீதேவியையும்-அனில் ...
போட்டு இந்தித் திரையு...
ஏறக்குறைய ஏழரைக்கோ...
பட்ட படம் ரூப் கி ரா...
அதாகப்பட்டது அழகில் ...
ஸ்ரீதேவி அழகில் ராணி...
ஏகப்பட்ட செலவு, உடை...
அட்டகாசமான விளம்ப...
இடுங்கிய கண்களுடன் ...
கீ செயின்கள் என்று வி...
அத்தனை இருந்தும் - அ...
என்பதுதான் பெரிய ...
ராஜாவுக்கும்தான்.





## படிதாண்டுகிறார் பத்மினி

முன்னாள் நாட்டியப் பேரொளி பத்மினி திருமணமாகி அமெரிக்காவுக்கு குடித்தனம் போனார். பின் இடைக்கிடையே படங்களில் தலைகாட்ட வீட்டுவேலைகளை போட்டுவிட்டு ஓடிவந்தார். இப்போது மறுபடியும் மலையாளப் படமொன்றில் நல்ல பாத்திரமாம். அப்படியே தமிழின் பக்கமும் வாய்ப்புக் கிடைத்தால் எட்டிப் பார்க்கும் எண்ணம் உண்டாம்.

## கவுண்டரை கழற்றி விடுகிறாரா கமல்?

தான் நடிக்கும் படங்களில் கவுண்டமணியைப் போட வேண்டாமென்று கமல் சொல்வதாக ஒரு பேச்சு. இது பற்றி கவுண்டமணியிடம் ஒரு பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது.

"கமல் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். அப்படியே சொல்லியிருந்தாலும் அது என்னை எந்த விதத்திலும் பாதிக்காது. நான் யாரை நம்பியும் சினிமாவுக்கு வந்தவன் அல்ல. என் வளர்ச்சியை எந்த ஹீரோவும் தடுக்க முடியாது" என்று கவுண்டர் போட்டுள்ளார் ஒரு போடு.

## கவர்ச்சியால் ஒரு சவால்!

தமிழில் இதுதாண்டா சட்டம், தங்கமான தங்கச்சி போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்தவர் மீனாட்சி. தமிழில் போதிய வாய்ப்புக்கள் இல்லை தெலுங்குக்குப் போனார்.

ஆமினி என்று பெயரை மாற்றினார். ரகுமானுடன் ரேப்பிடி ரௌடி என்னும் படத்தில் கொஞ்சம் தாராளமாகவே நடித்தார். படம் வெற்றிகரமாக ஓடியது. தெலுங்கில் வெற்றி பெற்றால் தமிழுக்கு மொழிமாற்றுவது தானே தமிழ்த் திரையுலக நியதி. சின்னத் தளபதி என்ற பெயரில் தமிழுக்கு வரவிருக்கிறது. சின்னத்தளபதி வரட்டும் தமிழில் மீண்டும் ஒருமுறை வருவேன் என்று சவால் விடுகிறார் 'ஆமினி என்னும் மீனாட்சி.

## கதை சரியா? கவர்ச்சிக்கு ரெடி!

மடிப்பு அம்சாவாக தலைவாசல் படத்தில் அறிமுகமாகி மதுமதி படத்தின் மூலம் மேலும் பிரபலமாகியுள்ளவர் விசித்ரா.

கல்லூரி மாணவர்கள் விசித்ராவைக் கண்டால் ஓ...பாத்திமா என்று பாடுகிறார்களாம். (மதுமதிப் படப்பாடல்) கேட்க சந்தோசமாக இருக்கிறதாம்.

விசித்ராவுக்கும் ஒரு கொள்கை உண்டு. அது யாதெனில் "கதை நன்றாக இருந்தால் கவர்ச்சி காட்டுவதில் தவறில்லை" என்கிறார்.

கதை நன்றாக இல்லையென்றாலும் கவர்ச்சி காட்டுவேன் என்று யாராவது சொல்லியிருக்கிறார்களா என்று ஒரு போட்டியே வைக்கலாம்.

## காதோடு சொல்லுகிறோம்

- ★ ஜஸ் நடிகையின் புதிய போய் பிரண்ட் குள்ளமானவராம். அவரைக் கண்ட ரயில் நடிகை ஸ்டூல் பாவிப்பிரா என்று கேட்டாராம். என்ன அனுபவமோ?
- ★ பூ நடிகைக்கு சவால்விடும் புது நடிகைகள் சந்தைக்கு வந்துள்ளதால் பூ நடிகை ரசிகர்களை கவரும் வழி பற்றியெல்லாம் யோசித்து வருகிறாராம். தனக்கு கோவில் கட்டிய ரசிகர்களை கிண்டல் செய்தவருக்கு இப்போது பிறந்துள்ளதாம் தாமத ஞானம். ரசிகர்கள் தான் வாழவைக்கிறார்கள் என்று சொல்லுகிறாராம்.
- ★ ரேகு நடிகை தொழிலதிபர் ஒருவரை வளைத்துப் பிடித்துள்ளாராம். அவரையே தயாரிப்பாளராக்கி படமொன்றை இயக்கப் போகிறார். தமிழ் ரசிகர்கள் பயப்படத் தேவையில்லை. ரேகமானவர் இயக்கப் போவது மலையாளப்படம். ஆ...இவடே ஒரு மனுசி.
- ★ தொப்புள் காட்டுவது தவறில்லை. நடிகையான பின் காட்டாவிட்டால் எப்படி என்று அட்டகாசமான தத்துவங்களோடு சுகன்ய நடிகை பேட்டி குடுத்துள்ளாராம்.
- ★ மண்வாசனை புகழ் ரே நடிகைக்கு ஒரு ஆசை. முழுக்க முழுக்க நடனக்காட்சியை வைத்து தான் நடிக்க, அதை கணவரே தயாரிக்க...இப்படி தொடர் ஆசைகள். கையைச் சுடுமோ என்று கணவர் கணக்குப் பார்க்கிறாராம்.
- ★ நடிப்புலக இமயத்தின் மைந்தன் தந்தை வழியை பின்பற்றும் விடயங்களில் பிரதான விடயம் நேரம் தவறாமை. குறித்த நேரத்தில் டாண் என்று சூட்டிங்கில் ஆஜர்.
- ★ அரசியலுக்கும் முழுக்குப் போட்டுவிட்ட நடிப்புலக இமயம் சினிமாவுக்கும் குட்பை சொல்ல வேண்டுமென்று குடும்பத்தினர் நச்சரிப்பாம். இல்லாத சொத்தோ. இருந்து சாப்பிடலாம். என்றாலும் உண்மைக் கலைஞனுக்கு ஓய்வேது?
- ★ சிறந்த காமரா இயக்குநர் மகேந்திரமானவர் வண்ணப்பூக்கள் விநோதத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாராம். விருது நடிகைக்கு அதனால் வருத்தமாம்.
- ★ தமிழ் சினிமாவில் இப்போது பிரபலமாகியுள்ள நடன மூவ்மென்ட் நாயகனை மார்பால் மோதுவது. அதையும் குளோசப்பில் காட்டுவது. சரி அடுத்த மூவ்மென்ட் என்ன செய்யப் போகிறார்களோ?



சின்னத் தளபதி படத்தில் ரகுமான், மீனாட்சி



## பல்லைக் கழட்டுகிறார் மீ...

நடிகை மீனாவுக்கு இப்போ... ஏறுமுகம். சூட்டோடு சூட... தனது முற்பற்களில் நான்... கழற்றிவிட்டு வேறு பல்லை... பொருத்திவிட எண்ணியுள்ள... அதற்காக அமெரிக்காவுக்கு... போகப் போகிறாராம். இ... டாக்டர்களில் அப்படியொரு... நம்பிக்கை.

www.padippakam.com

# இது பம்பாய் படவுலகம்

### சரியான போட்டி

அமெரிக்காவில் கலை விழா நடத்தும் விசயத்தில் அமிதாப்பச்சனும் அனில் கபூரும் போட்டிபோடுகின்றனர். யார் சிறந்தவர் என்பதுதான் போட்டி. அமிதாப் எதையும் சாதிக்கக்கூடியவர். நிகழ்ச்சி நடத்துவதற்கான ஒத்திகையிலும் அமிதாப் ஒழுங்காக நல்ல பிள்ளையாக கலந்து கொள்கிறார். அனில் கபூரும் விடுவதாக இல்லை சரியான போட்டிதான். கலை விழாவில் ஒன்றாகத்தோன்றும் போது மோதிக்கொள்ளாவிட்டால் சரிதான்.






அமிதாப் பச்சன்

### பெரிய பெரிய பயம்

பம்பாய் படவுலகில் சங்கிபாண்டே கோவிந்தா. இருவரும் எலியும்-பூனையும் போல. இரு நடிகர்களுக்குமே கணிசமான ரசிகர்களும் உண்டு. சங்கி பாண்டேக்கு திடீரென்று ஒரு பயம். டென்னிஸ் தாரகை மோனிகாவை கத்தியால் குத்தியது போல, கோவிந்தாவின் ரசிகர் யாராவது தன்னையும் குத்திவிடுவாரோ என்றுதான் பயம். அமிதாப் ரசிகர்களும் அவ்வாறு செய்யக்கூடும் என்றும் பயம் இருக்கிறது.

சங்கிபாண்டே முதுகிலும் கண்வைத்துக்கொண்டு திரிய வேண்டியதுதான்.





சங்கி பாண்டே



### ...ந்தும் என்ன?

...ம் வசப்படுத்திக் ...சத்திற்குத்தான் இழப்பு

...தவை மிஞ்ச ஆளில்லை. ...ரவு. ஜோடியாகப் ...மே அதிரும் வகையில் ... ரூபாய் செலவில் தயாரிக்கப் ... சோரோன் கா ராஜா. தமிழில் ... ராணி திருட்டில் ராஜா. ...தான் அந்த ராணிக்கு ... விசயத்தில். அதுதவிர ...கள். ஜப்பானியர் போன்ற ...பொம்மைகள், ஸ்டிக்கர்கள், ...ம் விதமான விளம்பரங்கள். ...தில் ராணி இருந்தும் படம் படுதோல்வி ... அதிர்ச்சி. ராணிக்கும் வருத்தம்.



ஷீபா



ரோஜா

### அதிரடியான ஒரு போட்டி

சுபர் ஸ்டார் ரஜனியைச் சந்திக்கும் அரிய வாய்ப்பு மற்றும் தமிழக சுற்றுலா. விபரம் அடுத்த முரசில்!

பிரதிக்கு முந்துங்கள்.



அனிதா அயூப்

### உலா தடுக்கப்பட்ட நட்சத்திரங்கள்





### சினிமா விமர்சனம்

# கட்டளை

...டிப்பணத்தை இலட்சம் இலட்சமாய் சுருட்டி வைச்சிருக்கிறானே ... தலைவன். அவன் மனைவி சேலையைப் போய் உருவுங்கடா. ...பாபித் தொண்டன் செய்த தப்புக்காக அவன் மனைவி ...லையை உருவுற நீங்க உங்க தலைவனைப் போய் தட்டிக் ...ங்கடா"

...சனம் எழுதியிருப்பது கப்டன் பிரபாகரன், ஏழைஜாதி போன்ற ...களுக்கு வசனம் எழுதி பிரபலமான லியாகத் அலிகான். ...ந்தை ஏற்ற இறக்கத்தோடு, சூறாவளியாக பேசித்தீர்ப்பது ...யராஜ். ஆவேசராஜ்.

...வாதி போல் ஆவேசமாக வசனம் பேச வேண்டும் என்பது ...ராஜ் கனவு. அது மீண்டும் பலித்துள்ளது. சண்டைக்காட்சிகளிலும் ...லைக்கவில்லை. நடிப்பிலும் அவ்வாறுதான்.

...னுப்பிரியாவுக்கு சொந்தப்படம் நிறைவாகச் செய்திருக்கிறார். ...லனாகி கதாநாயகனாகி-இப்போது குணசித்திர நாயகனாகியுள்ளார் ...ந்திராஜ். மனதில் நிற்கிறார்.

...வில்லனாக ராதாரவி. எஸ்எஸ்சந்திரனும் உண்டு. சிரிக்கவைப்பது ...ர்ராஜன். இயக்குநர் தொழிலை விட்டுப் போட்டு நகைச்சுவை ...ஞராகவே அவர் காலம் தள்ளலாம்.

...பாடல்கள் பரவாயில்லை. வோல்டர்" வெற்றிவேல் பட்டுநிலா ...ட்டில் இதிலே வண்ணநிலா பாடல்.

...தை வசனமெழுதி இயக்கியிருப்பவர் லியாகத் அலிகான். ...ராட்டலில் எக்கச்சக்கமான சூடு. வோல்டர் வெற்றிவேல் ...ரி இல்லாவிட்டாலும் தோல்விப்படமல்ல கட்டளை!



### நடிகையிடம் வேலை செய்ய விருப்பமுள்ள ரசிகர்!

அமராவதி படத்தில் நடித்த சங்கவிக்கு ரசிகர்களின் கடிதம் தினம் குவிகிறது. அதில் ஒரு கடிதம் தீவிரமானது. "நான் தங்கள் தீவிர ரசிகன், தங்கள் வீட்டில் பணிபுரிய விரும்புகிறேன். என்ன வேலையாக இருந்தாலும் செய்வேன்" என்றாலும் இப்படியா?

# மினி சினி

- ★ ரஜினிகாந்த் நடிக்கும் ரகசிய பொலிஸ் 009 படத்தில் ரஜினிக்கு வேண்டிய உடைகள் அனைத்தையும் வெளிநாட்டில் இருந்து வரவழைக்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.
- ★ வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் உழைப்பாளியைத் தொடர்ந்து சந்தமாமா-விஜயா கம்பைன்ஸ் அடுத்துத் தயாரிக்கும் படத்தின் பெயர் கறுப்புவெள்ளை. ஆனால் கலர்படம்தான்.
- ★ விஜயசாந்தி தமிழில் ஒரு படத்தைத் தயாரிக்க இருக்கிறார். வழக்கமான அரசியல், அடிதடி இல்லாமல் நகைச்சுவையுள்ள குடும்பக்கதையாக இருக்கும். இப்படத்தை பாக்கியராஜ் இயக்குகிறார்.
- ★ தெலுங்குப் படவுலகின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான கிராந்திகுமார் தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் படங்களைத் தயாரிக்கப் போகிறார். இப்படத்தை ஆர்வி உதயகுமார் இயக்குகிறார்.
- ★ இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் அடுத்ததாக இயக்கும் படம் செந்தூரபாண்டி. இதில் அவரது மகன் விஜய்யும், விஜயகாந்தும் நடிக்க இருக்கிறார்கள்.
- ★ ஆர்.கே. செல்வமணியின் அதிரடிப்படை படத்தின் முக்கியமான சண்டைக் காட்சிகள், பாடல்காட்சிகள் ஹொங்கொங்கில் படமாக்கப்பட்டு வருகின்றன. ரகுமான் ரோஜா நடிக்கும் இப்படத்தில் முக்கிய வேடமொன்றில் சுமன் தோன்றுகிறார்.
- ★ ரேவதி நடிக்கும் புதிய படமொன்றை கேளடி கண்மணி புகழ்வசந்த் இயக்க இருக்கிறார். இப்படத்தில் பாடகர் மனோ நடிக்கிறார். இவர் ஏற்கனவே சிங்காரவேலன் படத்தில் நடித்தவர்.
- ★ தற்போது நகைச்சுவை நடிகர்களில் முன்னணியில் நிற்கும் வடிவேலுவிற்கு இருபதிற்கும் மேற்பட்ட படங்கள் கைவசம் உள்ளன.
- ★ பார்த்திபன்-பானுப்பிரியா நடித்துப் பாதியில் நின்று போன புதுசா ஒரு கல்யாணம் மீண்டும் தொடங்கப்படவுள்ளது.
- ★ சுந்தரகாண்டம் படத்தில் நடித்த சிந்துஜாவுக்கு ஒப்பனையாளராக இருப்பவர் அவரது அப்பாதானாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## வழுக்குப் பாறை!

மணவாளக்குறிச்சி என்ற இடத்திற்கு அருகில் ஒரு பெரிய மலைமேடு இருந்தது. அதன் உச்சியில் ஒரு வழுக்குப்பாறையின் பொந்துகளிலும், பாறைக்குச் சற்றுத் தள்ளி இருந்த குகைகளிலும் நிறைய அன்னப்பட்சிகள் வாழ்ந்து வந்தன. அந்த வழுக்குப் பாறை அன்னப்பட்சிகளைப் பிடிக்க



ஒரு வேடன் விரும்பினான். பலவிதங்களில் முயற்சியும் செய்தான். ஆனால் அவனால் அன்னப்பட்சிகளைப் பிடிக்கவே முடியவில்லை. ஏன் தெரியுமா? அந்தப் பறவைகளைப் பிடிப்பதென்றால் வழுக்குப்பாறையில் ஏறித்தான் பிடிக்க முடியும். வேறு மரங்களோ, கிளைகளோ அங்கே இல்லை. அந்த வழுக்குப் பாறையைப் பிடித்து மேலே ஏறிப் பறவைகளைப் பிடிப்பதோ நடக்காத காரியம். ஏனென்றால் வழுக்குப்பாறைதான் வழுக்கி விடுமே. எப்படி எதைப்பிடித்து உறுதியாக மேலே ஏறிப் பறவைகளைப் 'பிடிப்பது என்று புரியாமல் வேடன் ஆண்டுக்கணக்காகத் தவித்தான். ஒரு வழியும் அவனுக்குத் தெரியவில்லை.

இந்நிலையில் ஒரு நாள் மிகப் பெரிய பலத்த மழை பெய்தது. மழை என்றால் அப்படி ஒரு பேய் மழை. சுழல் காற்றும் பனியும் குளிரும் மக்களை வாட்டி வதைத்தது. மலைமேல் இருந்த பல மரங்கள் மடமட என்று முறிந்து விழுந்தன. அந்தச் சமயத்தில் ஒரு காகம் தன் உடல் முழுவதும் நனைந்தபடி வழுக்குப் பாறையை நோக்கிப்பறந்து வந்தது. பாறையின் அருகில் அமர்ந்தது. இதைக் கண்ட அன்னப்பறவைகள் கீச் கீச்சென்று கத்தின. தங்கள் கூரிய அலகால் காக்கையைக் கொத்தி விரட்டப் பார்த்தன. ஏன் தெரியுமா? பறவைகளிலேயே அதிக திருட்டுப்புத்தி உடையதும், கண்டவைகளைத் தின்பதும், சுத்தமில்லாததுமான பறவை காகம்தான். அதனால் தான் அன்னங்கள் காகத்தை விரட்டின. இதைக் கண்ட சில பெண் பறவைகள் காகத்தின் மீது இரக்கம் காட்டின. "ஐயோ பாவம் இந்த மழையிலும் குளிரிலும் இந்தக் காகம் எங்கு தான் போகும்? இதனை விரட்டுவது பாவம். தவறு செய்யாதீர்கள். மழை விட்டதும் காகத்தை நாம் அனுப்பி விடலாம். துன்பத்திலிருப்பவர்களிடம் நாம் இரக்கம் காட்ட வேண்டும்," என வாதாடின.

உடனே அன்னப்பறவைகளின் தலைவனான வயதான ஒரு ஆண் பறவை, "நமக்குத் தெரியாத அன்னியர்கள் துன்பப்படும்போது நாம் அவர்களுக்கு உதவக்கூடாது. அப்படி நாம் உதவி செய்தால் அது நமக்கே துன்பம் ஏற்படுத்தும். எனவே இந்தக் காகத்தை இப்போதே நாம் விரட்டி விடுவோம்" என்றது.


ஆனால் சமயம் பார்த்துக் காக்கையும் பொய்க்கண்ணீர் வடித்தது.

"அடடா எனக்கு நன்மை செய்பவர்களுக்கு நான் தீமை செய்வேனா? இன்னமும் சில மணி நேரங்களில் மழை விட்டு விடும். உடனே நான் பறந்துபோய் விடுவேன். அதற்குள் நான் உங்களுக்கு என்ன தீமை செய்யப் போகிறேன்? தயவு செய்து இங்கு இருக்க அனுமதியுங்கள்" என்று கெஞ்சியது.

சரியென்று வேறு வழியில்லாமல் மற்ற அன்னப் பறவைகளும் காகம் அங்கேயே இருக்க ஒப்புக் கொண்டன. காகம் மூன்று மணி நேரம் அங்கே தங்கியது. அந்த நேரத்தில் அது அந்த வழுக்குப் பாறையில் பலமுறை எச்சமிட்டது. மழை விட்டதும் காகம் பறந்து விட்டது. ஆனால் காகம் இட்ட எச்சத்தில் முன்பு காகம் விழுங்கிய ஆலம் கொட்டைகளும் வெளியே வந்து விழுந்தன. அந்த ஆலங் கொட்டைகளில் ஒன்றிரண்டு வழுக்குப்பாறையின் இடுக்குகளில் வந்து விழுந்தன. கொட்டைகள் அந்த வழுக்குப் பாறைகளிலேயே தங்கி சில நாட்களிலேயே முளைக்க ஆரம்பித்தன. சில மாதங்களில் செடியாகி, பின் வளர்ந்து, சில ஆண்டுகளில் வேர் பிடித்து மிகப் பெரிய மரங்களாகி விட்டன. அதன் விழுதுகள் எங்கும் பரந்து படர்ந்து கிடந்தன. இதுநாள் வரையில் அன்னப் பட்சிகளைப் பிடிக்க வழி தெரியாமல் இருந்த வேடனுக்கு அந்த ஆலம் விழுதுகள் உதவின. ஆமாம்! வேடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் அந்த விழுதுகளைப் பிடித்துக் கொண்டு ஆலமரத்தின் மீது ஏறினான். அங்கிருந்தபடி வழுக்குப் பாறையின் உச்சியில் ஏறினான். அங்கிருந்த அன்னப்பட்சிகளை தினமும் ஒன்றிரண்டாகப் பிடித்துச் சென்றான். கறி சமைத்து உண்டான். வேடனிடம் இருந்து தப்பிக்க முடியாத அன்னப் பறவைகள் சில காலங்களிலேயே முழுவதுமாக வேடனிடம் அகப்பட்டு இறந்து போயின. காகத்திற்கு அடைக்கலம் தந்ததால் அமைதியாக வாழ்ந்த அன்னப் பறவைகளின் கதி என்ன வாயிற்று பார்த்தீங்களா?

பிள்ளைகளே! துன்பப்படுபவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டியது அவசியம் தான். ஆனால் துன்பப் படுபவர்களின் தகுதி அறிந்து தான் அவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் அன்னப் பறவைகளைப் போல் நாமும் அழிந்து போக வேண்டியது தான் புரிகிறதா?

## எங்கள் வீட்டுப்பூனை



நல்ல நல்ல பூனை
நான் வளர்க்கும் பூனை
சின்னச்சின்னப் பூனை
செல்லமான பூனை
சொன்ன படி செய்யும்
துள்ளித் துள்ளி ஓடும்
சோறும் பாலும் தின்னும்
சுத்தமாய் இருக்கும்
மியா மியா என்னும்
மீசைக் காரப் பூனை

ஹுலைஹா அஸ்ஹர்
ஆண்டு 3-சீ
மாறை/அறபா கனிஷ்ட
வித்தியாலயம்
வெலிகாமம்.

## முடியாது! முடியாது!

ஆபிரகாம் லிங்கனின் அமுத மொழிகள் இவை:



சேமிப்பை அலட்சியப்படுத்தி வலிமையைக் கொண்டு வர முடியாது!

வலிமையை வழுவிழக்கச் செய்து பலவீனத்தைப் பலப்படுத்த முடியாது!

கூலி கொடுப்பவனை ஊனமாக்கிக் கூலி வாங்குபவனுக்கு உதவமுடியாது!

பணக்காரனை அழித்து ஏழைகளை உயர்த்த முடியாது!

கடன் வாங்கும் பணத்தின் மூலம் தேவையான பாதுகாப்பை அடைய முடியாது.

சம்பாத்தியத்தைவிட அதிகமாகச் செலவழித்துச் தொல்லையிலிருந்து மீள முடியாது!

மனித சுதந்திரத்தைப் பறித்து நன்னடத்தையையும் ஊக்கத்தையும் உண்டாக்க முடியாது!

மக்கள் தாங்களே செய்துகொள்ளக்கூடிய - செய்துகொள்ள வேண்டிய-காரியங்களை நீ செய்து, மக்களுக்கு நிரந்தரமாக உதவ முடியாது!


ரமேஸ்-ராஜ்மோஹன்
கொழும்பு-13.

## நல்லவை வளரட்டும் தீயவை அழியட்டும்

நல்லவற்றைக் கூட்டிக்கொள்
தீயவற்றை கழித்துக்கொள்
அறிவைப் பெருக்கிக்கொள்
நேரத்தை வகுத்துக்கொள்
இன்ப துன்பங்களை சமனாகக் கருது.
வளர்பிறை போல் அறிவில் வளரு.
செலவைக்குறைத்து வரவைப் பெருக்கு.
அன்பை பெருக்கு ஆணவத்தை குறைத்துக்கொள்
நல்லவர்களுக்கு இணையாய் இரு.
பிறரை நம்பி வாழும் வாழ்வு நிலையற்றது.

இரா.சுரேஸ்குமார்.
ஆண்டு 10-ஏ, க/சீ.சீ.தமிழ் வித்தியாலயம்
புசல்லாவ.

## புத்தர் வார்த்தை



பல சித்துக்கள் தெரிந்த சித்தர் ஒருவர் இருந்தார். புத்த பெருமானைச் சந்தித்த அவர் தன் கையிலிருந்த உயிருள்ள சிப்பி ஒன்றை அவரிடம் நீட்டினார்.

"இந்தச் சிப்பிக்குள் விலையுயர்ந்த முத்து இருக்கிறது. இதைப் போன்ற முத்து உலகத்திலேயே இல்லை. நூறாயிரம் பொற்காசுகள் மதிப்புடையது இது. சிப்பியை உடைத்து முத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அதற்குப் புத்தர், "முத்தின் மதிப்பு நூறு கோடிப் பொற்காசுகளாகத்தான் இருக்கட்டுமே. ஓர் உயிரைக் கொல்வது என்பது என்னால் முடியாது. சிப்பியை நீயே எடுத்துச் செல்" என்று பதில் தந்தார்.

புத்தரை வணங்கிய சீடன் ஒருவன், "எங்கள் வழி காட்டியே! உங்களைப் போன்று சிறந்த ஞானி வேறுயார் இருக்கிறார்கள்? உங்களைப் போன்று அன்பும் அருளும் ஒருங்கே கொண்டவர் யார் இருக்கிறார்கள்? உங்களைப் போன்று பெருமைக் குரியவர் யார் இருக்கிறார்கள்?" என்று புகழ்ந்தான்.

இதைக்கேட்ட புத்தர், "சீடனே! எனக்கு முன்னால் தோன்றிய ஞானிகளை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாது ஐயா" என்றான் சீடன்.

"இனி எனக்கு அடுத்துத் தோன்றப் போகும் ஞானிகளையாவது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் புத்தர். மீண்டும் "தெரியாது ஐயா" என்று பதில் சொன்னான் சீடன்.

"என்னையாவது நீ முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார் புத்தர்.

தலை கவிழ்த்தபடி 'இல்லை ஐயா" என்றான் அவன்.

"பிறகு எதற்கு அலங்காரமான புகழ்ச்சிச் சொற்களால் என்னைக் குறிப்பிட்டாய்? அவற்றால் எந்தப் பயனும் இல்லை. குழந்தாய்!" என்றார் புத்தபெருமான்.

ஜீ. செல்வா
கொழும்பு-11

## தேசங்களின் தேசிய பறவைகள்

| | |
|---|---|
| இலங்கை- | காட்டு கோழி |
| இங்கிலாந்து - | ரொபின் |
| இந்தியா- | மயில் |
| ஐக்கிய அமெரிக்கா- | கழுகு |
| ஜப்பான்- | பச்சைக்கொண்டைக் கோழி |
| ஜேர்மன்- | வெள்ளைக் கொக்கு |
| தென் ஆபிரிக்கா- | நீலக்கொக்கு |
| கனடா- | கனடாவாத்து |
| வட அயர்லாந்து- | முத்துச்சென்னிப்பறவை |
| மலேஷியா- | மாயா |

ஏ.ஜே.எம். பைஸர்
பீர்சாய்பு வீதி.
கொழும்பு-12.

## தெரிந்து கொள்ளுங்கள்

உலகிலே முதன் முதல் தபால் முத்திரை வெளியிடப்பட்டது எங்கே?
-பிரான்ஸ்

உலகிலே மிகப் பெரிய நூலகம்
-லெனின் தேசிய நூலகம்-மொஸ்கோ

உலகில் அதிக மொழிக்கு மொழி மாற்றஞ் செய்யப்பட்ட நூலின் முதலிடம் வகிப்பது எது?
-பைபில்

உலகிலே மிகப் பெரிய மலர் எது?
-அமோர் கோபாலஸ்

உலகிலே முதன் முதல் மன்னராட்சி செய்தவர்கள் யார்?
-எகிப்தியர்

உலகிலே மிகப் பெரிய நூதனசாலை எங்குண்டு?
-லண்டன்

உலகிலே மிகப் பெரிய பாலைவனம்
-சஹாராபாலைவனம்

உலகிலே மிகப் பெரிய விலங்கு
-நீலத் திமிங்கிலம்

உலகின் மிகப் பெரிய நீரூற்று எங்குள்ளது?
-அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில்

உலகிலே முதன் முதல், கடிதங்கள் இலகுவாக வழங்க வீடுகளுக்கு இலக்கம் இட்ட நகரம் எது?
-பாரிஸ்

யமுனா ராஜரட்னம்
கொழும்பு-9.

## நாடுகள் நாணயங்கள்

| | |
|---|---|
| கனடா | கனடா டொலர் |
| பிரான்ஸ் | பிராங் |
| இந்தியா | ரூபா |
| ஈரான் | றியால் |
| ஈராக் | ஈராக்கி (தினார்) |
| ஜப்பான் | யென் |
| எகிப்து | பவுன் |
| அமெரிக்கா | டொலர் |
| ரஷ்யா | ரூபிள் |

க.ம.ஹரிராஜேந்திரன்
இந்து கல்லூரி
கொழும்பு-4

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## நிமிடக் கதை

# விடி வெள்ளி

-அமிர்தன்-



உமா கட்டிலிலிருந்து எழுந்ததும் ஏற்பட்ட அந்தச் சின்ன அதிர்வே என் உறக்கத்தைக் கெடுத்துவிட்டது.

நல்ல இருள். இருப்பினும் ஒரு மெல்லிய ஒளி அறையில் பரவியிருந்த மையினால் அவள் அடிக்குமேல் அடிவைத்துச் செல்வது தெரிகிறது. அறைக்கதவண்டை சென்று விட்டாள்.

ஓசைப்படாமல் கதவை மெல்லத் திறக்கிறாள். வெளியே செல்கிறாள். திறந்ததைப் போலவே மெதுவாக கதவை தாழிட்டு விட்டாள்.

இந்த நேரத்தில் இவளுக்கு என்ன வேலை. 'பாத்ரூம்' போகிறாளோ? பொறுத்துத்தான் பார்ப்போமே!

உமா போய் ஐந்து நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் வரவில்லை. "பாத்ரூம்" போய்வர இவ்வளவு நேரமா? எனக்குள் எண்ண அலைகள் மோதுகின்றன.

அமைதியைக் கிழத்துக்கொண்டு எங்கள் நாயின் அனுங்கள் வேறு. இதற்கிடையில் மிக மெதுவாக பேச்சுக்குரல். பொருள் விளங்க வில்லை. கிசுகிசு என்று இருவர் இரகசியம் பேசுகின்றனர்.

எனக்கு இருப்புக் கொள்ள வில்லை.

மணம் முடித்து 12 வருடங்கள். ஒரே பையன். அவனுக்கும் 10 வயது முடிந்து விட்டது. இத்தனைக்குப் பின்னும்... இருவருக்கும் எந்தக் குறையும் வைக்கவில்லை.

கடந்த மாதம் அலுவலகப் பணிகளுக்காக மலையகம் சென்றிருந்தேன். ஒரு வாரம் அங்ககு தங்கிவிட்டுத் திரும்பி வந்தேன். நான் இல்லாத காலங்களில் வீட்டில் நடந்த புதினங்களையெல்லாம் அயல் வீட்டில் குடியிருக்கும் பொன்னையா அண்ணன் என்னிடம் கதை கதையாகச் சொன்னார். இத்தகைய போக்கு வருங்காலத்தைப் பாழடித்து விடும் என்று அவர் சொன்னார்.

என்னிடம் சொன்னது போல் உமாவிடமும் எச்சரிக்கை விடுத்த தாகக் கூறினார். ஆனால் அவளின் போக்கில் எத்தகைய மாற்றத்தையும் காணவில்லை என்று வேதனைப் பட்டார்.

உமாவிடம் பொன்னையா அண்ணன் என்னிடம் சொன்ன வற்றையிட்டு நேரடியாகக் கேட்டால் "கோள் காவுறியளோ" என்று அவரிடம் சண்டைக்குப் போவாள். அவரே என்னிடம் கேட்டுக் கொண்டார். "தம்பி நான் சொன்னதாக உமாவிடம் கூறி விடாதே" என்று கெஞ்சினார்.

அவளிடம் எப்படிக் கூறுவது என்று தெரியாமல் இத்தனை நாளும் தவித்துக் கொண்டிருந்தேன். அவ்வப்போது கண்டிக்காவிட்டால் இப்படித்தான்.

வெளிக்கதவை மெதுவாகத் திறந்தேன்.

ஓசைப்படாமல் மெல்ல நடந்து முற்றத்தைப் பார்த்தேன். அதோ இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி இருந்தனர். பின் புறத்தில் புதிதாக ஒரு அறை கட்டுவதற்காகக் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த மணல் கும்பத்தின் மீது அவர்கள்!

அருகில்...மிக அருகில் சென்று விட்டேன்.

கீழே கிடந்த சருகுகள் என்னைக் காட்டிக்கொடுத்து விட்டன போலும். முதலில் அவன்தான் என்னைப் பார்த்து பயந்து விட்டான் 'வீர்' என கத்திக் கொண்டு உமாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

அவளும் திரும்பிப்பார்த்தாள்.

"நீங்கள்!"

அதிர்ச்சியும் பதட்டமும் அவள் குரலில்.

"ஆமா நான்தான்..."

எழுந்து கொண்டாள்.

அவன் அவளை அணைத்தபடியே எழுந்தான்.

"பிரபா..அப்பாடா...கண்ணைத் திறந்து பார், பாத்தீங்களா உங்க வீரமகன் இருட்டில உங்கள என்னேவா என்று எண்ணி என்னை இறுகக்கட்டிக் கொண்டான்."

"பனிபெய்யுது...இந்த நேரத்தில் அவன இங்கே ஏன் கொண்டு வந்து...விளையாடுற நேரமா இது...காலையில அவன் பள்ளிக்குப் போக வேணாமா?"

"அப்பாவுக்கு நாளும் தெரியாது டோய்! அப்பா நாளைக்கு சனிக்கிழமை. ஸ்கூல் இல்லை"

"அமா உங்க அப்பாவுக்கு சனியும் இல்ல ஞாயிறுமில்ல...! நீதான் உங்கப்பாகிட்ட எத்தனை நாளாகக் கேட்டுக்கிட்டிருந்தே விடிவெள்ளியக் காட்டச் சொல்லி..."

"அப்பா அதுதானப்பா விடி வெள்ளிய -அதே பெரிதா சின்ன ஆண்டாரப் போல தெரியுதே. அம்மா அதத்தான் என்னக்கு காட்டக் கூட்டிக் கிட்டு வந்தாங்க...நல்ல வடிவா இருக்கப்பா."

"அம்மா வடிவாத்தான் இருக்கு அவனுக்கு நீ அதிகமாச் செல்லம் குடுத்துக் கொண்டே வர்ரே...பத்து வயதாயிட்டுது...இன்னும் அவருக்கு அம்மாட மடிதான் தேவைப்படுது. பாக்கிற அயலிலுள்ளவங்களெல்லாம் சிரிக்கிறாங்க...

போதும் விடிவெள்ளி பார்த்தது. போங்க உள்ள..."

உமா சிரித்துக் கொண்டே உள்ளே போகிறாள். மகனையும் அணைத்தபடி...

உண்மையில் விடிவெள்ளி அழகாகத்தான் இருக்குது. கொஞ்ச நேரம் மணலில் நாமும் இருந்து விடிவெள்ளியைப் பார்க்கலாமே!



# குத்தரித்த கடி ஜோக்ஸ்

நீலா: அந்த மயானத்தைச் சுத்தி வேலி போட்டிருக்கே ஏன்?
மாலா: அங்க போறதுக்கு எல்லாரும் உயிரை விடறாங்களாம். அதான்.

■

நீலா: மழையில் நனையாத காய் எது?
மாலா: குடை மிளகாய்.
நீலா: இன்னொன்றும் சொல்லு.
மாலா: இன்னொன்ரு குடை மிளகாய்.

■

சுமன் ஒரே ஒரு வரைபடம் மட்டும் வைத்துக் கொண்டு பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தான். துரதிஷ்ட வசமாக முள்ளில் மாட்டி அது கிழிந்து விட்டது. ஆனால் சுமன் கவலைப்படவில்லை. ஏன்?

ஏன்னா அங்குதான் ஒட்ட'கம்' இருந்ததே.

■

இரு யானைகள் ஒரு கரும்புத் தோட்டம் பக்கமாய்ச் சென்றன. ஒரு யானை உள்ளே நுழைந்து கரும்பை ஜமாய்க்க, இன்னொன்று மட்டும் வெளியிலேயே நின்று விட்டது ஏன்?

ஏன்னா அந்த யானைக்கு சர்க்கரை வியாதி.

■

அரிச்சந்திரன் உபயோகித்த பற்பசை எது?

புரொமிஸ் (Promise)

■

முதல் நாள் வகுப்பில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவனாக பெயர் கேட்டுக் கொண்டே வந்தார்.

ஆசிரியர்: உன் அப்பா பெயர் என்ன?
மாணவன்: கண்ணன்.
ஆசிரியர்: உன் அப்பா பெயர்?
மாணவன்: கண்ணப்பன்.
ஆசிரியர்: உன் பெயர் என்ன?
மாணவன்: ராஜா
ஆசிரியர்: உன் அப்பா பெயர்?
மாணவன்: ராஜா பாதர்.

அடுத்து வந்தது ஒரு மாணவி.

ஆசிரியர்: உன் பெயர் என்ன?
மாணவி: செல்லம்.
ஆசிரியர்: உன் அப்பா பெயர்?
மாணவி: செல்லப்பா.

வெறுத்துப் போன ஆசிரியர், அடுத்து வந்தவனிடம், கேள்வியை மாற்றி விட்டார்.

ஆசிரியர்: உன் அப்பா பெயர்?
மாணவன் 3: ஜோன்
ஆசிரியர்: வெரி குட் உன் பேர்?
மாணவன் 3: ஜோன்சன்.
ஆசிரியர்: ?!?!?!

■

பைசா கோபுரம் ஜப்பானில் இருந்தால் என்ன பெயர்?

நிக்குமோநிக்காதோ.

சைனாவில் இருந்தால்?

சாஞ்சாச்சி.

■

கூர்மையான காய் எது?

'கத்தரி'க்காய்.

■

சுதன் வீட்டிலிருந்து தெரு முனையிலிருக்கும் கடைவரை ஓட்டமாய் ஓடிப்போய் என்ன வாங்கினான்?

மூச்சுதான்.

■


வெங்காயம் நறுக்கும் போது ஏன் கண்ணீர் வருது?

அதுக்கு 'காயம்' ஆகுதே.

■

குகன்: பழம், பால் ஏதாவது சாப்பிடுறீங்களா?
லவன்: ஏன் புதுப்பால் இல்லையா?

■



நன்றி: மதன் ஜோக்ஸ்

''காட்ச் பிடிக்கறதுலே ரொம்ப 'வீக்'கா இருக்காரு சார்... ப்ளீஸ்...!''

## இந்த வாரம் உங்கள் பலன்

(25.07.93 முதல் 31.7.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன் |
| சிம்மம் | - செவ்வாய் |
| கன்னி | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| மிதுனம் | - புதன், வெள்ளி |

சந்திரன் கன்னி, துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

31.7.93 இல் கர்க்கடகத்தில் புதன் பிரவேசம்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய் தொழில் விருத்தி, கடின உழைப்பு | காலை 8 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், காரிய நன்மை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | மன நிறைவு, மாந்தர் தொடர்பு. | பி.ப. 4 மணி |
| புதன்- | தனதானிய லாபம், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், தூர இடப் பிரயாணம். | காலை 9 மணி |
| வெள்ளி- | எடுத்த காரியம் நிறைவேறும், வீண் பயம். | காலை 11 மணி |
| சனி- | பகைவர் வெற்றி, பணத்தால் காரிய வெற்றி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நடைக் கஷ்டம், அகால போசனம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பயம் நீங்கும், மேலதிகாரிகள் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், தூர இட நன்மை. | காலை 11 மணி |
| புதன்- | பணிவு, கௌரவம், புகழ். | காலை 10 மணி |
| வியாழன்- | பண வரவு, காரியானுகூலம். | காலை 9 மணி |
| வெள்ளி- | சுப ஸ்தானம், அலைச்சல், கோபம் மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | எண்ணிய கருமம் வெற்றி, பொருள் வரவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | சுப காரிய நன்மை, அந்நியர் உதவி. | காலை 11 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், மனக் கவலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | மனச்சந்தோஷம், மறைமுக நோய், கவலை | காலை 10 மணி |
| வியாழன்- | மனைவியால் கவலை, பண விரயம். | காலை 11 மணி |
| வெள்ளி- | கடவுள் பக்தி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் பயம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தான தரும சேர்க்கை, தார சுகம். | காலை 9 மணி |
| திங்கள்- | கல்வி மேன்மை, இடமாற்றம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | பயம் நீங்கும், பணம் வரும். | காலை 8 மணி |
| புதன்- | தூர பிரயாணத் தொல்லை, சுகவாழ்வு. | காலை 11 மணி |
| வியாழன்- | இழந்த பொருள்மீட்பு, இன்னல் தீரும். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உறவுகள் நெருக்கம், உள்ளம் உவகை. | பி.ப. 2 மணி |
| சனி- | காரிய சித்தி, கடின உழைப்பு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நன்மை, வீண் சிநேகிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பணவரவு, தொழில் பிரச்சனை. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | கல்வி மேன்மை, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- | உயர்ச்சி, மனச்சந்தோஷம். | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியர் தொல்லை, அலைச்சல். | பி.ப. 9 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை, பொருள் விரயம். | காலை 11 மணி |
| சனி- | மனக்கசப்பு, வருமானம் குறைவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூசம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய நட்பு, பொன் பொருள் சேர்க்கை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | அயலவர் அன்பு, காரிய மேன்மை. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், வீண் செலவு. | காலை 10 மணி |
| புதன்- | கௌரவம், புகழ், தேக மெலிவு. | காலை 9 மணி |
| வியாழன்- | உண்மையின் உயர்வு, உயர்ந்தோர் ஆதரவு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, பூரிப்பு. | காலை 9 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, உறவினர் பகை. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனப்பயம், மங்கையரால் நேசம். | காலை 9 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பிரயாணம் அதிகம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | பாராட்டு, பண வரவு. | காலை 9 மணி |
| புதன்- | கருமங்களில் வெற்றி, பயண நன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | கௌரவம், புகழ், பெரியோர் நட்பு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | நடைக் கஷ்டம், நாணயம், கீர்த்தி. | பி.ப. 2 மணி |
| சனி- | உயர்ந்தோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, கஷ்ட பலன் நீக்கம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- | புதிய நட்பு, புகழ், கீர்த்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பண வரவு, பகைவர் வெற்றி. | பகல் 12 மணி |
| புதன்- | திரவிய லாபம், தீராத சோகம். | காலை 11 மணி |
| வியாழன்- | எண்ணங்கள் நிறைவேறுதல், சந்தோஷம். | காலை 9 மணி |
| வெள்ளி- | பணத்தடை, பாராட்டு, வழிபாடு. | பகல் 12 மணி |
| சனி- | துயர் அதிகம், தூர இடப் பிரயாணம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் பகை, குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | திரவிய லாபம், முயற்சிக்கு வெற்றி. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, கடன் தொல்லை. | பி.ப. 1 மணி |
| புதன்- | அந்நியரால் உதவி, அதிகார மேன்மை. | காலை 10 மணி |
| வியாழன்- | உயர்ச்சி, உழைப்பு மேன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | காலை 11 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, எண்ணிய கருமம் வெற்றி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உண்மையின் உயர்வு, உழைப்பு மிகுதி. | காலை 8 மணி |
| திங்கள்- | உள்ளம் மகிழ்ச்சி, எடுத்த கருமம் சித்தி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் நன்மை, பண வரவு. | காலை 9 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, அனுகூலம். | காலை 10 மணி |
| வியாழன்- | துயர் நீக்கம், தூரதேச செய்தியால் மகிழ்வு. | காலை 8 மணி |
| வெள்ளி- | பகை வெல்லல், பக்தி மேன்மை. | காலை 11 மணி |
| சனி- | தருமச் செய்கை, தந்தை வழி நன்மை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கல், மகிழ்வு. | காலை 10 மணி |
| திங்கள்- | பணப் புழக்கம், கொடுக்கல் வாங்கல் நன்மை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, திடீர் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ச்சி, பணத் தட்டுப்பாடு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கடவுள் பக்தி. | காலை 11 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கல், எண்ணங்கள் நிறைவேறல். | காலை 9 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, மனக்கஷ்டம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வருமானம், வசதியான வாழ்க்கை. | காலை 9 மணி |
| திங்கள்- | நண்பர்களால் செலவு, நாள்பட்ட நோய் நீங்கல். | காலை 11 மணி |
| செவ்வாய்- | ஆசை அதிகம், அந்நியர் பகை. | காலை 10 மணி |
| புதன்- | பூர்வீக சொத்துச் சேரல், புண்ணிய யாத்திரை. | பகல் 12 மணி |
| வியாழன்- | தாரசுகம், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பொருள் விரயம், கவலை. | பி.ப. 3 மணி |
| சனி- | காரிய மேன்மை, கடவுள் வழிபாடு. | காலை 9 மணி |


அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-7



## தகவல்

## அதிசயம் ஆனால் உண்மை!

### ஜப்பான் மூளையென்றால் வியப்பான மூளைதான்!



யப்பானியர்கள் தொழில்நுட்பத்தில் ஒருகை பார்த்து விடுவதென்றே முடிவு செய்துவிட்டனர்.

கோழி முட்டை போல் படத்தில் இருப்பது ரயில் வண்டி என்றால் நம்பித் தான் ஆகவேண்டும். ஏனென்றால் ஜப்பானியரின் மூளை அப்படி.

இந்த ரயில்வண்டி கொம்யூட்டர் முறையில் இயக்கப்படுகிறது. மின்காந்த விசையின் உபயத்தில் மணிக்கு 500 கிலோ மீட்டர் வேகத்தில் போகும். வெள்ளோட்டம் எல்லாம் முடிந்து இப்போது டோக்கியோவில் ஓடிக் கொண்டிருக்கிறது. யப்பான் போனால் நீங்களும் முட்டைக்குள் பயணம் போகலாம்.

## பெட்டி

# அமந்தா இறந்துவிட்டாள் அமந்தாவை அவர்கள் இழக்கவில்லை

றால்ஃபிரான்ற்ஸ் ஹில்-லூயி தம்பதியினருக்கு இப்போது 70 வயது.

1937இல் இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

அகமகிழ்ந்த தம்பதியினர் குழந்தைக்கு அமந்தா என்று பெயரிட்டனர். மகிழ்ச்சி நீடிக்க வில்லை.

குளு குளு என்றிருந்த குழந் தையை காய்ச்சல் பிடித்து அதுவே நெருப்புக்காய்ச்சலாகி விட்டது.

தம்பதியினர் பதறித்துடித்தனர். செய்யாத மருத்துவம் யாவும் செய்து பார்த்தனர்.

பயன் இல்லை. நோய் வென்றது. செல்லக் குழந்தை இறந்தது.

அமந்தா-என் செல்வமே உன்னை எப்படி பிரிவோம். பிரிந்து தங்குமோ எம் உயிர் என்று சோகத்தில் வீழ்ந்தனர்.

பட்டகாலிலே படும் என்பது போல மருத்துவர்கள் சொன்ன இன்னொரு செய்தி சோகபாரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

இன்னொரு குழந்தை பிறக்கப் போவதில்லை என்பதே மருத்து வர்கள் சொன்ன செய்தி. செய்தியா அது இடி.

தேறுதல் இன்றி அழுது புரண்ட தம்பதியினர் குழந்தையை அடக்கம் செய்யாமல் தம்மோடு வைத்துக் கொண்டனர்.

முதலில் ஒரு வாரம் குழந்தையின் உடல் கெடாமல் இருந்தது; ஆனால் உஸ்ணக்காற்று உடலை வரளச் செய்தது. சமயங்களில் உடலை வெய்யிலில் வைத்தனர். அத்தோடு சாதாரண எண்ணையை உடல் முழுவதும் தேய்த்தனர். பூச்சி புழுக்களின் தொல்லைகளில் இருந்து காப்பாற்ற கிருமிநாசினிகளையும் அடித்தனர். வருடத்தில் ஒரு தடவையோ அல்லது இரு தடவை யோ சோப்புப் போட்டு உடலைக் கழுவி வருகின்றனர். உடலில் தூசு படியாமல் தினமும் தூசு தட்டுவார்கள்.

இப்படியே அரை நூற்றாண்டுகள் கடந்து விட்டன. 1937ல் இறந்த குழந்தை-இன்றுவரை உடல் பழுது படாமல் அப்படியே இருக்கிறது.

கண்களில் கூட மாற்றமில்லை. உயிர்க்கண்கள் போலவே இருக்கின்றன. தினமும் உடை மாற்றி தலை சீவி அன்போடு பராமரிக்கிறார்கள்.

அந்தத் தம்பதியினரின் அதீத அன்பு அவர்களது உறவினர்களுக்கு கசப்பைக் கொடுத்துள்ளது. உறவை முறித்துக் கொண்டார்கள். ஆனாலும் அந்தத் தம்பதியினரின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட ஈரமனம் உள்ளவர்கள் நிலமையைப் புரிந்து கொள்கிறார்கள்.

சாவில் கூட அமந்தாவை பிரிய அவர்கள் விரும்பவில்லை.

“நாங்கள் இறந்தால் எங்களுடனேயே குழந்தையை அடக்கம் செய்யும்படி உறவினர்களிடம் கூறியுள்ளோம். அதுவரை-அவள்-எங்கள் இனிய அமந்தா எங்களுடன் இங்கேயே தனக்குரிய இடத்தில் இருப்பாள்” என்று அந்த தம்பதியினர் கூறுகின்றனர்.

அவர்களும் குழந்தையாக இருக்கின்றனர். மற்றொரு குழந்தையை இழக்க விரும்பாத வயோதிப குழந்தைகள்.



அரை நூற்றாண்டுகளாக உயிர் இன்றி வாழும் உடல்

## இது மனிதக்காதல் அல்ல... அல்ல... அல்ல..





காதல் என்பது மனிதர்களுக்கு மட்டுமே குத்தகை எழுதிக் கொடுத்தவிசயமா என்ன?

இது மனிதக் காதல் அல்லத்தான். ஆனால் புனிதமானது.

சீனாவில் ஷங்காய் நகர மிருகக் காட்சிச் சாலையில் ஒரு கலப்புக் காதல். றிக்கி என்ற ஒட்டகச்சிவிங்கியும் சாளி என்ற வரிக்குதிரையும் காதல் வயப்பட்டன. தம்மைப் பிரிக்கும் தடையையும் மீறி அன்பு முத்தங்களையும் பரிமாறிக்கொள்கின்றன. அண்ணனும் கொடுக்க, அவளும் வாங்க அதை காமராக்காரரும் நோக்க சிக்கியதுதான் இந்த அபூர்வப்படம். இப்போது நீங்களும் நோக்கலாம்.

## எனக்கொரு மகன் பிறப்பான் அவன் என்னைப் போலவே.....



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியின் மைந்தன் மீது கற்பழிப்புக் குற்றம் சுமத்தப் பட்டிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி கென்னடியும் அவரது சகோதரரும் பெண்கள் விடயத்தில் பலவீனமானவர்கள். அந்த பலவீனம் இரவுகளை பாவையர்களோடு பகிர்ந்து கொள்ளுமளவுக்கு சென்றதாக பல கதைகள் உண்டு.

பேரழகி மர்லின் மன்றோவுக்கும் கென்னடி சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட அந்தரங்க நெருக்கம் உலகமறிந்த கிசு.கிசு.

இப்போது கென்னடியின் மகன் கென்னடி ஸ்மித்துக்கும் பிரச்சனை.

கற்பழிப்புக்கு எதிரான அமைப்பொன்று கென்னடி ஸ்மித் மீது கண்டனம் தெரிவித்திருக்கிறது.

அக்கண்டண கூட்டத்திற்கு தானும் வரவேண்டும் என்று ஸ்மித் விடுத்த கோரிக்கையை அந்த தூக்கி குப்பைக் கூடையில் போட்டுவிட்டது. கோபப்பட்ட ஸ்மித் துள்ளிக்குதித்த போதும் எந்தப் பயனும் இல்லை.

கென்னடி ஸ்மித் மருத்துவக் கல்லூரி மாணவனாக இருக்கிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—4

**இதுவரை மதுமிதா**

*மாபெரிய கோடிஸ்வரரின் செல்லமகள் ஒரே மகள் மதுமிதா தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டாள். மிரட்டியவன் தன்னிடம் சில புகைப்படங்கள் இருப்பதாகச் சொன்னான். தன் பெயர் திவாகர் என்றான். திவாகரை சந்தித்து தன் அழகின் வலிமையால் வீழ்த்திப் போட மதுமிதா ஹோட்டல் ராக்கிக்கு சென்றாள். அங்கே திவாகர் செத்துப் போய் கிடக்க, கொன்றவன் அங்கே இருக்க அவனால் மடக்கப்பட்ட மதுமிதாவை கொலைஞனின் தலைவன் போனில் மிரட்டினான். பழியை மதுமீது போடப்போவதாக சொல்லி, போடாமல் இருக்க வேண்டுமானால் ஒரு கோடி வேண்டும் என்றான். அதைப் பெறும் வழி சொல்லித் தருவேன் என்றான். அத்தோடு போன் கட்டாக, மதுமிதா ஒரு திட்டத்தோடு அருகே நிற்கும் கொலையாளியை நோக்கினாள். அவனை மடக்கிப் போட்டுவிட திட்டம் வகுத்தாள். தருணம் கணக்கிட்டாள்.*

# கண்ணே மதுமிதா — ரசிகன் எழுதுவது



தருணம் வந்தது.

மதுமிதாவுக்கு எதிரியின் பலம் புரிந்தது. பலவீனமும் தெரிந்தது.

எதிரியின் உள்ளக் கோட்டைக்குள் தன் இளமை தொடுக்கும் தாக்குதல்களால் ஏற்படும் விரிசல் புரிந்தது.

குறிதவறாத ஷெல்லாய் இளமையின் வீச்சுக்களில் கோட்டையின் பாதுகாப்பு அரண்கள் உள்ளே தகர்வதை உணர முடிந்தது.

மதுமிதாவிடம் இருந்த மகத்தான ஆயுதம் இளமை.

மதுமிதாவிடம் இருந்த மகத்தான தந்திரம் அந்த ஆயுதத்தை குறித்த தருணத்தில், குறித்த இலக்கில் பயன்படுத்தத் தெரிந்தமை.

இளமை இயற்கையாய் வந்தது. அந்த இளமையை நாகரிகம் என்ற போர்வையில் வெளிப்படுத்தும் சாகசம் செல்வச் செழிப்பால் வந்தது.

ஆனால் அனுபவம்? அது கற்றுக் கொண்டதால் வந்தது. பட்டுத் தெரிந்ததால் வந்தது.

அந்த அனுபவங்களே தனி ஒரு கதை. கதைக்குள் கதையாக அவை வெளிப்படும். சுவாரசியங்களை மெல்ல மெல்லத்தான் அறிய வேண்டும். ஒரே மூச்சில் முயன்றால் சுவையும் போ. சுகமும் போ.

எனவே பொறுத்துக் கொள்க யாவரும்.

சிற்றிடைக்கும் நோகாமல் சேலைக்கும் வலிக்காமல் மெல்ல அவிழ்ப்பதிலே உள்ள சுகம் போல மதுமிதாவின் புதிர்கள் சுவையாய்-சூடாய் கதையின் கரத்தால் மெல்ல-மெல்ல அவிழ்ந்து செல்லும்.

இப்போது மதுமிதாவின் தந்திரம் பார்க்கலாம்.

உள்ளே கோட்டை அரண்கள் உடைந்து விழ சகல எச்சரிக்கை உணர்வுகளையும் அவன் மறந்தான்.

அவளை நோக்கி நகர்ந்தான்.

"காய் கனிந்து பால் நோக்கி நழுவி வருகிறது. வா தருகிறேன். எனக்குத் தேவையானதை உன்னிடம் பெறுகிறேன் பின் உன்னையும்....." மதுமிதா மனசுக்குள் உறுதி ஏற்றாள்.

பதட்டத்தில் விலகிய சேலை குன்றென நிமிர்ந்த இரு அழகுகளையும் அவன் விழிகளுக்கு விருந்தாய் கொடுத்தது.

கள்ளுண்ட வண்டாய் என்று இலக்கியம் சொல்வது போல் -அவன் விழிகளில் காமம் வழிந்தது. அது மதுமிதாவுக்கு படு சுத்தமாய் புரிந்தது.

அருகே வந்து கரம் உயர்த்தி அவள் தலைதொட்டு தடவினான்.

"மது பயப்படுகிறாயா? உன் போன்ற அழகான பெண்ணுக்கு எத்தனை ஆபத்துக்கள் பார்த்தாயா"

கிறக்கமாய் காதுமடல் அருகே கிசு கிசுத்தான். உதடுகள் காதுமடல்களில் பட்டும் படாமலும் வார்த்தைகளை உச்சரித்தன.

"இனி ஒரு தட்டுப் போதும். விழுந்து விடுவான்" மதுமிதா தீர்மானித்தாள்.

மறு நொடியே....

வரவழைத்துக் கொண்ட விம்மல்களோடு அவன் மார்பில் தலைசாய்த்து, தன் ஈரஉதடுகளை அசைத்தாள்.

அவனுள் கோட்டை முற்றாய் தகர்ந்தது.

தலைமுடி கோதி இறங்கிய கரம் அவள் முதுகை வருடிக்கொடுத்தது. மறுகரம் இடையில் பதிந்து மெல்ல அமுத்தி அதன் மென்மையில் வியந்தது.

"எனக்கு பயமாய் .....என்னை ஏன் இப்படி துரத்துகிறார்கள்" விம்மும் சாக்கில் மைதானமாய் விரிந்த அவன் மார்பில் முகம் அசைத்து, உதடு புரட்டி...

அவன் முற்றாய் சுற்றம் மறந்தான். ஆறுதல் சொல்லி தேற்றும் சாக்கில் இறுக அணைத்து, அவள் முகம் உயர்த்தினான்.

விழிகளில் அழைப்பு தெரிய உதட்டில் கவிழ்ந்தான்.

உதடுகளை விடுவிடுத்துக் கொண்டு "உங்களை நான் நம்பலாமா" கேட்டாள்.

"உனக்காக என்ன செய்ய வேண்டும். சொல் மது. செய்கிறேன். இப்போதே இந்த நிமிடமே"

சொல்லியபடியே உதட்டால் அவள் கழுத்துப் பிரதேசத்தில் உரசினான்.

அவன் பரந்த மார்பில் நிறைந்த ரோமங்களை மதுமிதாவின் கரம் கோதியது. கோலம் போட்டது. மறுகணம் அவனை இறுக அணைத்து இளமைகளின் மெதுமை அவள் மார்பில் பதிய இறுக்கினாள்.

"என்னை. இதிலிருந்து காப்பாற்ற முடியுமா?"

"இதிலிருந்து மட்டுமல்ல எதிலிருந்தும். இப்போது நீ என்னை காப்பாற்ற வேண்டும். செய்வாயா?"

மதுமிதா புரியாமல் அவன் முகம் பார்த்தாள். மயக்கமாய் சிரித்தான்.

"பசி என்னை கொல்லுகிறது மது. கையருகே கனிகள் இருக்க புசிக்காமல் போனால் நான் செத்துவிடுவேன்"

சொல்லிக்கொண்டே முரட்டுத்தனமாய் இறுக அணைத்து அவள் காதுமடலைக் கடித்தான்.

"இப்போது வேண்டாமே. அதற்கு இது நேரமும் இல்லை. ஃபிளீஸ்.... நான் தானே வேண்டும். ஓ.கே. ஆனால் இங்கே வேண்டாம்.. உங்களை நான் என்ன சொல்லி அழைப்பது"

"சந்தோஷ்.. வெளியே சொல்லாதே. பொலிஸ் தேடுகிறது. என்ன பயப்படுகிறாயா. டேக் இட் ஈஸி. பொலிஸ் என்னைத் தேடுகிறது வெளியே. நான் உனக்குள் தேடிக்கொண்டிருக்கிறேன் உள்ளே...சோ..எல்லாமே சுலபம் ஈஸியா பீல் பண்ணினா வாழ்க்கை முழுக்க சுகம். முடிவு சுபம்"

கண்சிமிட்டிச் சிரித்தான்.

■

இன்ஸ்பெக்டர் குலாம்ஷாவுக்கு அந்த பைல் எரிச்சலைக் கொடுத்தது.

குலாம்ஷா எரிச்சல்பட்டுக் கொண்டிருக்கும் போது அவரை உங்களுக்கு சின்னதாய் ஒரு அறிமுகம்.

குலாம்ஷா என்றால் பொலிஸ் டிப்பாட் மென்டில் தெரியாது. கிரைம் குலாம்ஷா என்றால் தான் தெரியும். குலாம்ஷாவுக்கு மிகப் பிடித்தவை மூன்று.

உண்மை-உழைப்பு-சிகரெட்.

மிகப்பிடிக்காதவை மூன்று-

நம்பிக்கைத் துரோகம், சமூக விரோதிகள். மேலதிகாரிகளினதும் அரசியல் வாதிகளினதும் தேவையற்ற தலையீடுகள் மற்றும் சிபாரிசுகள்.

குலாம்ஷாவுக்கு அழகு துறு சுறு மீசை. குலாம்ஷாவுக்கு பெருமை துடிப்பான செயல்கள்.

காலையில் யோகா. மாலையில் வோர்க்கிங் அதனால் உரமேறிய உடம்பு, ஐம்பது வயது. என்று சொன்னால் உடனே குலாம்ஷா பொய்சொல்லாதீர்கள் முப்பது தானே என்பீர்கள்.

குலாம்ஷாபற்றி மற்றவை கதையில். இப்போது குலாம்ஷாவை கவனியுங்கள். குலாம்ஷாவின் எரிச்சலுக்கு காரணம் அந்தப் பைல். அந்தப் பைலில் கட்டான உடம்போடு பாஸ்போட்சைசில் சிரித்துக்கொண்டிருந்தது சந்தோஷின் புகைப்படம்.

1990இல் களனியில் ஒரு கற்பழிப்புத் தொடர்பாக சந்தேகப்பட்டவன்.

அதே ஆண்டில் இளம் தொழிலதிபர் நரேஸ்வர்மன் கொலையிலும் இவனுக்கு தொடர்பு உண்டு என்று ஒரு சந்தேகம்.

குற்றங்களில் பாரியது:- சீருடையில் சென்று ஏமாற்றி தேடுதல் என்று கூறி தனவந்தர் சுப்பிரமணியம் வீட்டில் கொள்ளையடித்தது. எதிர்த்துத் தடுத்த காவலர்கள் இருவரை பிஸ்டலால் சாப்பிட்டது.

குலாம்ஷா கொதித்தார். மேலே படிக்காமல் பைலை மூடி ஓரத்தில் போட்டுவிட்டு, சிகரெட் உருவி உதட்டில் செருகி கொள்ளிவைத்தார்.

"சந்தோஷ் இரு. வந்துவிட்டேன் என் இனிய சமூக விரோதியே குலாம்ஷாவைப் பற்றி உனக்குத் தெரியாது"

மனசுக்குள் கருவிக் கொண்டார்.

பளிச்சிட்ட வெள்ளையில் பக்கத்திலிருந்த தொலைபேசி சிணுங்கியது.

காதுக்கு கொடுத்து "ஹலோ யார் பேசுகிறது" என்றார்.

"நீங்கள் தான் சேர்" என்றது மறுமுனை. குலாம்ஷா கோபத்தில் சிவக்க "குட்மோனிங் சேர் நான் சந்தோஷ்"

"எங்கே இருந்து......"

"பேசுகிறாய் என்று கேட்கப் போகிறீர்கள். உண்மையை உடனே சொல்ல எனக்கு பைத்தியமாக இருக்க வேண்டும். அல்லது சொல்வேன் என்று எதிர்பார்க்கும் உங்களுக்கு...." சிரித்தான்.

"யாரோடு பேசுகிறாய் என்று உனக்குத் தெரியுமா"

கோபத்தில் சூடேறிய வார்த்தைகளை தொடுத்தார்.

"யெஸ் சேர். மிஸ்டர் குலாம்ஷாவுடன். பிழைக்கத் தெரியாமல், அனுசரிக்க வேண்டியவர்களை அனுசரிக்கத் தெரியாமல் இன்ஸ்பெக்டர் பதவியை விட்டு உயரவே முடியாமல் இருக்கும் பரிதாபத் துக்குரிய குலாம்ஷா. அது நீங்கள்தானே. சேர்"

கிட்ட நின்றால் அவன் கழுத்தை நெரித்திருப்பார் குலாம்ஷா.

குலாம்ஷாவின் கோபத்தை பொலிஸ் மூளை "பொறு" என்று தடுத்தது. "எதிரியை மடக்க திட்டம் வகுத்துக்கொள்" என்று தூண்டியது.

"சந்தோஷ் உன்னை நான் சந்திக்க வேண்டும். குலாம்ஷா பற்றி உன் மனதில் எழுதியுள்ள பழைய சித்திரங்களை சுத்தமாய் அழித்துவிடு"

"விடலாம். சொல்லுங்கள் ஷா"

"குலாம்ஷா தன்னையே தான் மறு பரிசீலனை செய்துவிட்டான். விசுவாசம், உழைப்பு யாவும் மாதம் முடிய துண்டுவிழும் குடும்ப பட்ஜெட்டை காப்பாற்ற முடிந்ததா என்று அலசிப்பார்த்து அருமையான ஒரு முடிவுக்கு வந்து விட்டான். எனவே கிரைம் குலாம்ஷாவின் பழைய முகம் மற நண்பனே. நாம்நேரில் பேசலாம். இன்னும் விரிவாக - விளக்கமாக"

மறுமுனை சில நொடி மௌனித்தது. மெல்லிதாய் மறுமுனையில் அவன் யாருடனோ பேசுவது புரிந்தது. என்ன பேசுகிறான் என்று மட்டும் புரியவில்லை.

"ஓ.கே. மிஸ்டர் குலாம்ஷா உங்களை நம்புகிறோம். பட் சந்தோஷ் தனிமனிதனல்ல. தந்திரம் பலிக்கும் என்று அநாவசிய துணிச்சல் கொண்டீர்கள் என்றால்..... மன்னிக்கவேண்டும் ஷா சாவு உங்களை சந்தோசமாய் இந்த சந்தோஷ் வடிவில் தழுவிக்கொள்ளும்".

குரலில் தொனித்த உறுதி அவன் செய்யக்கூடியவன் என்பதை சத்தியம் பண்ணியது.

"டியர் சந்தோஷ்...என் புதிய நண்பனே! ஷா சாகப்பயந்தவன் அல்ல. எனினும் இப்போது வசதியாய் வாழ ஆசைப்படுகிறான். மிரட்டாதே. உன் பலம் உன்னோடு. என்பலம் என்னோடு. பரிசீலிக்கும் தேவை எழாமல் நல்ல நண்பர்களாய் இருப்போம்."

"ரைட் எப்போது சந்திப்பது. நல்ல நண்பர்களாகிக் கொள்வது"

"நீ இங்கே வருகிறாயா" கேட்டுவிட்டு சிரித்தார்.

சிரித்தான்.

புலியின் குகையிலும் வேண்டாம். சிங்கத்தின் இடத்திலும் வேண்டாம். பொது இடத்தில்...சீபா இன் நைற் கிளப்பில். ஓகேயா ஷா"

"என்னது நைற்கிளப்பிலா"

"ஏன் கூடாதா... நம் உதடுகள் பேசிக் கொண்டிருக்கும் போது விழிகள் ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும். சோ விழிகளுக்கும் விருந்து. விரும்பினால்...... புரிந்து கொள்ளுவீர்கள் என்ற நம்பிக்கையோடு இரவு எட்டு முப்பதுக்கு 16ம் இலக்க மேசையில் காத்திருந்து சந்திக்கும் வரை வணக்கம்."

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

■

இரவு எட்டுமணிக்கு குலாம்ஷா புறப்பட்டார். மறக்காமல் பிஸ்டலின் மகசீனை நிரப்பி ஜீன்சின் பின்புறமாய் எடுக்க வசதியாக செருகிக் கொண்டார்.

சாதாரண உடையில் தன் சொந்தக் காரில்-நிஷான்சனி லேட்டஸ்ட் மொடலில்-சீபா இன் நோக்கி சீறினார்.

சீபா இன் நெற்றியில் கலர் பல்புக்கள் அணிந்து சிரித்தது. வா என்று அழைத்தது. கார் கதவு திறந்து குட் ஈவினிங் சொன்ன வாட்ச்மேனுக்கு பதிலுக்கு குட் ஈவினிங் சொல்லி-விரைந்து போகும் போது அவன் வித்தியாசமாய் அவர் கண்ணில் பட்டான்.

இளநீல சட்டையணிந்து யாரையோ எதிர்பார்ப்பது போல எங்கோ பார்த்தபடி நின்றிருந்தான். குலாம்ஷா காரில் இருந்து இறங்கியபோது அவரையே பார்த்தபடி அவன் நின்றதை அவரது மூன்றாவது கண் அடித்துச் சொன்னது.

கவனியாதவர் போல குலாம்ஷா உள்ளே புகுந்து மெல்லிய சிவப்பு ஒளியில் கலந்து ஏசியில் நனைந்து 16ம் இலக்க மேசை எங்கே என்று தேடினார்.

கிறக்கமான இசை தவழ்ந்துவர குலாம்ஷா அருகே கூபிட்டு ஒன்று கூறியது.

"ஹலோ மிஸ்டர் நீங்கள் குலாம்ஷாதானே?"

பதில் சொல்லாமல் முகம்திருப்பி பார்த்தவர் அதிர்ந்தார். அதிர்ச்சியில் இருந்து குலாம்ஷா மீளவதற்கிடையே அந்த விபரீதம் நிகழ்ந்தது.

**(இன்னும் வரும்)**

## சிந்தியா பதில்கள்

# அரசியலில் அதிகளவிலான பெண்கள் வெற்றிபெறுவது எதனை உணர்த்துகிறது?



டியர் சிந்தியா! கூடவிருந்தே எமது சின்னச்சின்ன ஆசைகளை சிதைக்க நினைக்கும் நண்பர்களுக்கு உங்கள் அட்வைஸ்?

மர்லினா பறகாத்
இக்கிரிகொல்லாவ.

*ஒதுங்குங்கள். உணர்வுகளை காயப் படுத்தாதீர்கள். பின்குறிப்பாய்- மூன்றுதரம் ஃபிளீஸ்.*

■

சிறந்த அறிவிப்பாளரான திருமதி ராஜேஸ்வரி சண்முகம் இதுவரை கௌரவிக் கப்படாததன் மர்மம்?

கலைநேசன் ஜவாத்
புத்தளம்.

*கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் எல்லாம் கௌரவிக்கப்படுகிறார்களா என்ன? அந்தப் பட்டியலில்தான் அவரும்.*

■

இலங்கை தற்போதைய நிலையில் கைத்தொழில் நாடா? விவசாய நாடா?

க.ம.ஹரி ராஜேந்திரன்
கல்கிசை.

*கத்தரி நாடு. இனப்பிரச்சனைதான் அபிவிருத்திகளை கத்தரியாய் வெட்டிக் கொண்டிருக்கிறதே.*

■

புரட்சி எப்போது வன்முறையாகிறது?

எம்.எச்.எம்.தௌபீக்
புதிய காத்தான்குடி-6

*அதன் நிகழ்ச்சி நிரல் முழுவதிலும் பலாத்காரம் மட்டுமே பரவிக் கொள்ளும் போது.*

■

ஒரு பெண்ணிடம் என் விருப்பத்தை எவ்வாறு தெரிவிக்கலாம். ஏதும் வழிகளை அறிமுகப்படுத்தினால் என்ன?

ஏ.சி.எம்.கலாப்
கம்பளை.

*அறிமுகப்படுத்த-அதனால் ஒரு வேளை உம் முகத்தை அவள் விகாரப்படுத்த-நீர் என்முகவரியை விசாரிக்க, தேவையா இது?*

■

உதவிக்கும் உபதேசத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ஏ.ஜெனுபா
கல்முனை.

*எல்லோரும் செய்யக்கூடியது முன்னது. எல்லோராலும் செய்யமுடியாதது பின்னது.*

■

கமல்ஹாசன் தயாரிக்கவிருக்கும் மருத நாயகம் ஒஸ்கார் விருதுக்கு தெரிவு செய்யப்படுமா?

எஸ்.ராஜா (பகீரதன்)
தோலங்கமுவ

*பட்டால் ஆச்சரியமில்லை.*

■

சிந்தியா! இப்போது தொலைக்காட்சியில் நான்கு அலைவரிசை ஒளிபரப்பப் பட்டபோதும் நம் மொழிக்கு இரண்டாம் இடம் கூடக் கிடையாதே?

என்.தனராஜ்
ஹட்டன்.

*எக்ஸ்ரே ரிப்போட்டில் நாரதர் சொன்னது போல் இரண்டாவது சனத்தொகை தமிழ் பேசுவோர் என்பதை மறந்து விடுகிறார்கள். வசதியான மறதி.*

■

மனித உரிமைகள் மாநாட்டில் தலாய்லாமாவை அவமானப்படுத்திய பின்னணிகள் என்ன?

எ.ஸ. அக்மல்முஹமட்
கல்ஹின்ன.

*மனித உரிமைகள் அமைப்புக்குள்ள உரிமைகளுக்கே ஆபத்து வந்திருக்கிறது. பலமுள்ள பக்கம் சரிவதில் மனித உரிமை அமைப்பும் சளைக்கவில்லை அதுதான் பின்னணி.*

■

அன்பின் சிந்தியா! ரஜனிகாந்தின் எஜமான், அண்ணாமலை, உழைப்பாளி போன்ற படங்களுக்கு ரசிகர்கள் கொடுத்த வரவேற்பு தளபதிக்கு ஏன் கொடுக்கவில்லை.

ஸ்ரீராம் சிவா
கொழும்பு-11

*தளபதி மணிரத்தினம் படம் என்ற முத்திரையை அடிக்கடி நினைவூட்டியது காரணமாக இருக்கலாம். மற்றும் எஜமான் வெற்றிப்படம். சுப்பர் ஹிட் படமல்ல.*

■

சிந்தியா-அன்பு என்பது எதுவரை?

எம்.பிரதாப் சந்திரன்
உடபுஸல்லாவ.

*எல்லையற்றதுக்கு எதுவரையறை?*

■

சிந்தியா! யாழ் மாணவர்களின் கல்வி பற்றி உமது கருத்தென்ன?

தி.தவக்குமார்
ஹப்புத்தலை.

*இருட்டில் தொலைக்கப்பட்டு வருவன வற்றில் முக்கியமான ஒன்று.*

■

காதலுக்கு முதல் பரிசாக எதைக் கொடுக்கலாம்?

ஜெ.ஜெ.ரிஸ்னா
'ஆர்டன் பொரஸ்ட்'

*அது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடு வோரைப் பொறுத்த சங்கதி.*

■

விடிந்தால் திருமணம் நடக்கவிருக்கும் ஒரு பெண் முதல்நாள் இரவு எதைப்பற்றி சிந்திப்பாள்.

எஸ்.பாபு
அவிசாவளை.

*விடிந்தால் நடக்கும் கல்யாணத்தில் எப்படி நடந்து கொள்வது என்பதுபற்றி. ஹி.ஹி.ஹி*

*(முகத்தை துடைத்துக்கொள்ளுங்கள் பாபு)*

■

ஒரு காதலன் தன் காதலியை புரிந்து கொள்ள என்ன செய்ய வேண்டும்?

ஜீ.ராஜா
ஹாலி-எல.

*முதலில் உண்மையான காதலனாக நடந்து கொள்ளவேண்டும். அதன்பின் தானாய்ப்புரியும்.*

■

டியர் சிந்தியா காதலர் கொடுக்கும் முத்தங்களுக்கு ஆயுசு குறையும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் கணவர் மனைவிக்கு கொடுக்கும் முத்தங்களுக்கு என்ன குறையும்?

செல்வி பரீஸ்டா பேகம்
பண்டாரவளை.

*அங்கீகாரம் பெற்ற முத்தம் என்பதால் எதுவும் குறையாது. குறையும் சொல்ல இயலாது.*

■

அரசியலில் அதிகளவான பெண்கள் வெற்றி பெறுவது எதனை உணர்த்துகிறது?

ருக்ஸான் அமீன்
உடுதெனிய.

*அடுப்போடு வாழமட்டுமே பிறந்த வர்கள் என்ற பழைய கதை பொய்யாகி, பொறுப்போடு ஆட்சி நடத்தவும் தெரிந்த வர்கள் என்பதை உலகமே ஒத்துக்கொள்ளத் தொடங்கியிருப்பதை.*

■

ஜெயலலிதா பற்றி சொல்லுங்கள்?

செல்வி.எஸ்.பாக்கியா
நுவரெலியா.

*தன்னம்பிக்கையுள்ளவர். தன்னம்பிக்கை தானே எல்லாம் என்று தடம் மாறியதால் தனக்குத் தானே எதிரியாகிவிட்டவர்.*

■

திரையுலகம் என்ற ஒன்று தோன்றி யிருக்கா விட்டால்?

ஏ.சி.எம்.முஸம்மில்
வட்டதெனிய.

*திரைப்படம் பார்க்கும் செலவு மிச்சமா யிருக்கும்.*

■

இனிநான் தினமுரசு வாங்க மாட்டேன் என் கேள்விகளை பிரசுரிப்பதேயில்லை. அதுதான் கோபம்.

வின்சன்ட்
கொழும்பு.

*இப்போதும் கோபமா வின்சன்ட்.*

■

நான் கதை ஒன்று அனுப்பிவைத்தால் பிரசுரிப்பீர்களா?

ஆர்.ராஜேந்திரன்
சிலாபம்.

*பிரசுரமாகும். ஆசிரியரும் அதை கதை என்று ஏற்றுக்கொண்டால்.*

■

நீங்கள் ஏன் இது ஒரு குடும்பப்பத்திரிகை என்று முகப்பில் போடக்கூடாது?

கே.நளாயினி
பதுளை.

*சொல்லித்தான் அது தெரிய வேண்டிய நிலையில் முரசு இல்லை என்கிறார் ஆசிரியர். முரசு தேசியப் பத்திரிகை. தேசியத்திற்குள் குடும்பமும் அடக்கம். எனவே தேவையில்லை குறுகிய வட்டம்.*

■

நீங்கள் எதைக் கண்டு ஆச்சரியப் படுகிறீர்கள்?

ஜனனி மதுரலிங்கம்
கொட்டாஞ்சேனை.

*குறுகிய காலத்தில் தினமுரசு மீது வாசகர்கள் கொண்டுள்ள பாசப் பிணைப்பைக் கண்டு.*

■

நடிப்புத்திறனை விட கவர்ச்சியைக் காட்டி ரசிகர்களை கவர முடியும் என்று நினைக்கும் நடிகைகளைப் பற்றி?

எம்.பி.சுப்பிரமணியம் சேர்வை
மாத்தளை.

*என்ன செய்வது. இருப்பதைத்தானே தரமுடியும்.*

■

பெண்-சிறு விளக்கம் தருக?

செல்வி.கா.சைலஜா
கண்டி.

*அற்புதம். இனிய ஆச்சரியம். புரிய முடியாதவர்களுக்கு பெண் ஓர் அவிழ்க்க முடியாத புதிர்.*

■

நல்லதொரு குடும்பம் எப்படியிருக்க வேண்டும்?

திருமதி சாந்தி தர்மலிங்கம்
கொழும்பு-11.

*ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் பரஸ்பரம் மதித்து, வாழ்க்கைத் தேரை வடம்பிடித்துச் செல்லக்கூடியதாக இருக்க வேண்டும். வேறு வேறு திசைகளில் இழுத்தால் தேரில் உள்ளோடும் திசை மாறக்கூடும்.*

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# சிறகொடிந்த சின்னக்கிளி

—முகில் வண்ணன்—

பிரான்ஸ்
05.04.93

அன்புள்ள ரதினிக்கு,

உனது எல்லாக் கடிதங்களும் எனக்குக் கிடைத்தன. ஆனால் என்னால் தான் பதில் எழுத முடியவில்லை. ஆரம்பத்தில் உனக்கு நான் எழுதிய கடிதங் களும் தபாலில் சேர்க்கப்படவில்லை என்பதைப் பின்னர்தான் அறிந்து கொண்டேன். உனக்கு மட்டுமல்ல நமது 'பிரண்ட்ஸ்' எல்லாருக்கும் தான். நீங்கள் எல்லாரும் சேர்ந்து என்னைத் தூற்றி இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். தெரிந்தும் என்ன செய்ய? எனது கைகள் இதுவரை கட்டப்பட்டுக் கிடந்தது.

ஐந்தாம் வகுப்பில் இருந்து ஏ.எல் எடுக்கும் வரை தொடர்ந்து வந்த உறவு நமது உறவு. அத்தனை எளிதில் மறக்கக்கூடிய உறவா அது? நமது நெருக்கம் நமது குடும்பங்களையும் நெருங்க வைத்து சொந்தக்காரராகவல்லவா நாம் மாறி இருந்தோம்.

எனது திருமண வீட்டில் நீங்கள் அனைவரும் உங்கள் வீடு போல் நின்று நடத்தியதை மறந்து விடும் அளவுக்கு நான் நன்றி கெட்டவளல்ல. நன்றி மறக்காத நல்ல நெஞ்சம் என்பதால் தான் இன்னும் உயிருடன் இருக்கின்றேன்.

என்னடி பார்க்கிறாய்? நான் இங்கு நலம். நீ எப்படி? நலமுடன் இருக்க வேண்டுகின்றேன் என்று வழமையான பாணியில் கடிதம் எழுதாமல் என்னவெல்லாமோ எழுதுகிறேன் என்று பார்க்கிறாயா? கடிதமல்ல இது. எனது கதை. கூட்டில் இருந்து விடுதலை பெற்ற ஒரு குயிலின் பாடல். ஆம் சோகப் பாடல்.

இதை எழுதினால் தான் என்மனம் ஆறும். உங்களுக்கும் படிப்பினையாக இருக்கும் என்று கருதியே உண்மை எதையும் மூடி மறைக்காமல் எழுதுகிறேன். நமக்குள் என்னதான் ஒளிவு மறைவு. உனக்கே எனது விடுதலையின் பின் எழுதும் முதல் கடிதம் ஆகையினால் விரிவாக எழுதுகின்றேன். செல்வி, மலர்விழி, உமா சுந்தரி அனைவருக்கும் காட்டவும்.

உங்களுக்குத் தெரியும் நான்ஏ.எல் படிக்கும் போதே எனக்குத் திருமணம் பேசப் பட்டது. பிரான்ஸில் இருக்கும் எனது சித்தி எனக்குச் சம்பந்தம் பேசி இருந்தா. அம்மாவின் வேண்டுதலின்படி அது ஏ.எல் எடுக்கும் வரை தள்ளிப் போடப்பட்டது. ஏ.எல் முடிவு வெளிவந்தால் எனது மனம் எங்கே மாறி விடுமோ என்று சித்தி முன்னேற்பாட்டுடன் செயற்பட்டதும் நீங்கள் அறிவீர்கள்.

இவ்வாறு விரைவாக ஏற்பட்ட திருமண ஏற்பாட்டைக் கண்டு நீங்கள் அனைவரும் என்னை அதிர்ஷ்டக்காரி என்று கூறினீர்கள். உண்மையில் நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன். எப்படியோ? நமது வகுப்பு மாணவிகள் அனைவரும் ஒன்றாக வந்து எனது திருமணத்தில் கலந்து சிறப்பித் ததைத் தான் நான் என்றும் பெரும் பாக்கியமாகக் கருதுவேன்.

இப்போது அந்தத் திருமணத்தை ஒரு விபத்து என்று கருதினாலும் அதில் நீங்கள் அனைவரும் கலந்து கொண்ட நிகழ்ச்சி மட்டும் என் மனதில் என்றும் பசுமையாக இருக்கும். ஏனெனில் எதிர் வரும் காலத்தில் நீங்கள் யார் யார் எங்கெங் கேயோ? இவ்வாறு ஒன்றாக கலந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் வருமோ என்னவோ? ஆனால் எனக்கு மட்டும் அது கிட்டியதே!

திடுதிப்பென்று சித்தி மாப்பிள்ளையுடன் பிரான்ஸில் இருந்து வந்து இறங்கியதும் நானும் திடுக்கிட்டேன். நீங்களும் என்னிடம் நேரில் சொன்னது தானே! மாப்பிள்ளை அனுப்பிய படமெல்லாம் இளமைக் காலப் படங்கள் என்றும் அதற்கும் நேரில் பார்த்ததற்கும் பத்து வயது வித்தியாசம் இருந்ததையும் கண்டோம். படத்துக்கே அப்படி என்றால்ஆள்?....

திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த வேளையில் என்னால் மறுக்க முடியவில்லை. அதற்கும் மேலாக அம்மா சொல்லியிருந்தா எனது சாதகப் படி. எனக்கு வரும் மாப்பிள்ளைக்கு ஏதாவது குறை இருக்குமாம் என்று. உடல் ஊனம் இல்லாமல் இது வெறும் வயது வித்தியாசம் மட்டுமே என்று என்னையும் தன்னையும் அம்மா சாந்தப் படுத்திக் கொண்டா

என்பதை நான் அறிவேன். இப்போது அதுவே நிரந்தரக் குறையாகிவிட்டது.

இந்த விடயத்தில் சசியை நான் இன்றும் எப்போதும் எண்ணிக் கொள்கிறேன். அவள் வகுப்பில் தான் துடுக்கென்றாலும் கல்யாண வீட்டிலும் விட்டாளா?

"என்னடி சாந்தி இது உனது சித்தி கட்டிக்க வேண்டிய மாப்பிளையை நீ கட்டிக்கச் சம்மதித்து இருக்கிறாய் உனக்கென்ன பைத்தியமா?" என்றாள்.

"நமக்கு நல்லதைச் செய்ய நமது தாய் தந்தையருக்குத் தெரியும் தானே!" என்றேன்.



"தெரியும்! மண்ணாங்கட்டி!" என்றவள் நேரே அம்மாவிடம் சென்று "என்ன அன்ரி இது அனியாயம்? இத்தனை வயது வித்தியாசத்திலும் ஒரு கல்யாணமா? ஏன் உங்கள் தங்கைக்குத் தான் மூளை இல்லை என்றால் உங்களுக்கு எங்கே போச்சு? ஏன் சாந்திக்கு என்ன குறை? இப்ப என்ன அவசரம் இப்படிச் செய்ய?" என்று கேட்டு வைத்தாளே பார்க்க வேண்டும்.

அம்மாவுக்கு முகம் கறுத்து விட்டது. "இது பெரியவர்கள் செய்வது. நீங்கள் சின்னப் பிள்ளைகள் உங்களுக்கு விளங்காது. இப்படியெல்லாம் பேசக் கூடாதும்மா" என்று அம்மா சமாளித்து விட்டா.

"நானென்றால் வீட்டை விட்டு விரட்டினாலும் சரி என்று மறுத்து இருப்பேன்" என்று வந்து என்னிடம் சொன்னாள்.

இப்போது எண்ணிப் பார்க்கிறேன். எனக்கேன் அப்போது அந்தத் துணிவு வரவில்லை? என்று. எப்படி நான் இதற்கு வாய் மூடி மௌனியாகச் சம்மதித்தேன்? என்று. எனக்கு விளங்கவில்லை. இதுதான் விதி என்பதா?

திருமணம் இனிது முடிந்ததும் ஒரு மாதத்தில் நீங்கள் எல்லாம் கோலாகலமாக வழியனுப்பி வைக்க நாங்கள் பிரான்ஸ் வந்து சேர்ந்தோம்.

வந்த ஆரம்பத்தில் எங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாகவே இருந்தது. சித்தியின் கட்டுப்பாடுகளைத் தவிர. நாங்கள் சித்தியின் வீட்டில் ஒன்றாகவே குடியிருந்தோம்.

சித்தியின் கட்டுப்பாடுகளு[ம்] மாப்பிள்ளை அல்லது மருமகன் என்ற எண்ணம் இல்லாமல் 'சிவா' 'சிவா' என்று அவரை அழைப் பதும் எனக்குப் பிடிக்க வில்லை. இதை நான் சொல்ல முடியாமல்

"ஏன் நாம் தனியாக வேறு வீடு எடுத்து குடியிருக்க லாமே" என்று அவரிடம் கேட்டேன்.

"ஏன் உனக்கு இங்க இருக்கப் பிடிக்கல்ல என்றால் இலங்கைக்குப் போ. அவ்வளவு லேசில் இங்கு வீடு எடுக்க முடியாது. நீயும் வேலைக்குப் போனால்தான் செலவுக்கே கட்டுப்படியாகும். காட் கிடைத் ததும் வேலைக்குப் போக வேண்டும். நான் எத்தனை வருடமாக அன்ரியுடன் இருக்கிறேன். உனக்கு ஒரு மாதத்திலே வெறுப்பு வந்து விட்டதா?" என்றாரே!

நான் பயந்து விட்டேன். இதையே வேறு விதமாகவும் சொல்லி இருக்கலாம் என்று எனக்குப் பட்டது. அது மட்டுமா நடந்தது அனைத்தையும் சித்தியிடம் கூற சித்தி பத்ர காளியாக மாறினாள்.

கெட்ட வார்த்தைகளால் என்னைப் பேசினா... "உங்கட உழைப்புக்குள்ள உங்களுக்குத் தனிக்குடித்தனம் கேட்குதா? ஏன் இஞ்ச இப்ப என்ன குறை உங்களுக்கு. எல்லாம் அந்தச் சிறுக்கிகள் எழுதும் கடிதங்கள் என்றுதான் நினைக்கிறேன். இனி நீ உண்ட 'பிரண்ட்ஸ்' ஒருத்த ருக்கும் கடிதம் எழுதக்கூடாது. வாற கடிதங்களும் நான் படித்துப் பார்த்துத்தான் தருவேன். கல்யாணம் கட்டி வைச்சேன் என்று ஒரு நன்றியும் இல்ல. நன்றி கெட்ட நாயே" என்று என்னைத் திட்டித்தீர்த்தா.

உங்களைப் பற்றிக் குறை கூற வேண்டாம் என்று கூறப் போய் அடிவிழா குறைதான்.

அதற்குப் பின்னர்தான் சித்தியினதும் அவரினதும் சுயரூபம் மெல்ல மெல்ல விளங்க ஆரம்பித்தது.

கடை வீதிக்குப் போக என்றாலும், யாருடைய வீட்டுக்கு அவருக்குத் தெரிந்தவர்கள் வீட்டுக்குச் செல்வதென்றாலும் சித்தியின் அனுமதியே தேவைப்பட்டது. அம்மா இல்லாத இடத்தில் சித்தியின் கட்டுப்பாடும் நல்லது என்றுதான் அப்போதும் நான் எண்ணினேன்.

சம்பளம் எடுத்து வந்தாலும் சித்தியிடம் கொடுப்பதே வழக்கம் வீட்டுச் செலவு முழுவதும் அவவுடையதே. அந்த முறை சம்பளம் எடுத்து வந்த போது அவர் எனக்கொரு சாறி ஆசையாய் வாங்கி வந்திருந்தார். அதைக் காட்டினார் சித்தியிடம்.

"அடேயப்பா மனுசியில இப்பவே இவ்வளவு அக்கறை வந்திட்டுது போல. ஏன் கல்யாணத்துக்கு வாங்கின சாறிகளே இன்னும் உடுத்தாமல் கிடக்குது இப்பவும் புதுசு தேவைப்படுதோ. நாங்களும் வீட்டில் இருக்கிறம் எண்ட எண்ணம் இல்ல. ஓ...எனக்கு வயசு போட்டுத்தானே! சிவா காசையெல்லாம் கண்டபடி செலவழிக்க வேண்டாம். எல்லாம் எண்ணட்டக் கேட்டுத் தான் செய்ய வேண்டும்" என்றா சித்தி.

"சரி அன்ரி. இந்தச்சாரி ஒன்றுதான் இருந்தது அதுதான்..." என்று அவர்தலையைச் சொறிந்தது எனக்குப் பிடிக்கவே இல்லை.

அன்றிரவு படுக்கும்போது நான் அழுது தீர்த்தேன். இவர் வந்து என்னைத் தீண்டியதும் நான் கையைத் தட்டி விட்டேன். எனக்கொரு ஆறுதல் சொல்லாமல் சென்று விட்டார். விடியும் வரை 'பெட்றூமுக்'குள் வரவே இல்லை.

இவ்வாறு இருவரும் சேர்ந்து என்னைச்சித்திரவதை செய்தார் கள். அப்போது தான்நான் சிறைப் பட்டிருப்பதை உணர ஆரம்பித்தேன். ஆயுள் சிறைத் தண்டனைக் கைதிக்கும் இத்தனை கொடுமை இருக்குமோ நானறியேன்.

எனது உள்ளுணர்வு விழித்துக் கொண்டது. சுதந்திர வேட்கை என்னுள் அரும்பியது. என்ன செய்ய வீட்டுக்கு அம்மாவுக்குக் கூட கடிதம் போடமுடியவில்லை. என்னைச் சுற்றி ஏதோ மர்மம் நடப்பதாக என் உள்ளுணர்வு கூறிற்று. அது என்ன என்பதை அறிய வேண்டும் என்று ஆய்வுகளில் மறைமுகமாக இறங்கினேன்.

நான் கண்ட முடிவை எப்படியடி உனக்கு எழுதுவேன்! நினைக்கவே நெஞ்சு நடுங்குதடி! என்றாலும் எனது நிலையை நீங்கள் அறிவதற்காகச் சொல்லுகின்றேன். அவரையும் சித்திதான் வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது தான் அது. இந்தக் கொடுமையும் நடக்குமா? என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் கண்ணால் கண்டதை நம்பாமல் இருக்கலாமா?

காதால் கேட்டதைச் சொல்லுகிறேனே! "சிவா எனது குழந்தைகள் இருவருக்கும் நீர்தான் தகப்பன். நீர் வேறு எங்கும் சென்று விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே சாந்தியை உமக்குக் கட்டி வைத்தேன். நீர் என்னடா என்றால் இப்ப நமது உடன்படிக்கையை மறந்து அவளில் அதிக அக்கறை காட்டுகிறீர். நமது வசதிக்காகத்தானே அவளே தவிர அவளுக்கு நீரில்லை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்...." இதற்கு மேலும் கேட்டால் என் நெஞ்சு தாங்குமா? ஓடி வந்து விட்டேன்.

அதன் பிறகு படுக்கையறை நாட்டமும் குறையத் தொடங்கியது. நானும் ஒதுக்கத் தொடங்கினேன். ஏதோ கடமைக்காக வாழ்ந்தேன். இந்தப் பந்தத்தில் இருந்து விடுபடும் வழியை ஆராய்ந்த வண்ணமாக.

திருமண வாழ்வில் ஒருவருடம் எப்படியோ ஓடி ஒழிந்தது. நான் செல்வச் செழிப்புடன் சீராக வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றுதான் நீங்கள் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது தெரிகிறதா எப்படிப்பட்ட நரகத்தில் வாழ்ந்தேன் என்று.

அப்போது நான் எதிர் பாராத விதமாக மாமா ஒருவர் பிரான்ஸ் வந்து சேர்ந்து இருந்தார் இது எனக்குத் தெரியாது. நல்ல வேளை அவர் வீட்டுக்கு வந்த போது இவர்கள் ஒருவரும் இருக்கவில்லை.

நான் மாமாவின் காலில் விழுந்து முழு உண்மைகளையும் கூறினேன். என்னை எப்படியும் அதிலிருந்து விடுவிக்கும் படி கேட்டேன். "பயப்படாதே உன்னைக் காப்பாற்றுகிறேன். உன் வாழ்க்கையையும் பாழாக்கி விட்டாளா அந்தச் சண்டாளி. அந்தப் 'பொன்னையன்' எங்க என்றார்.

"அவர் இருக்கிறார். இருந்தும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். அவர் வெறும் பொம்மைதான்" என்றேன்.

யாரை என்று நினைக்கிறாயா? அவர்தான் எனது சித்தப்பா. அவர் வெறும் றப்பர் 'ஸ்டாம்பு' தான். தேவையான இடத்தில் சித்தி எடுத்துக் குத்திக் கொள்வாள். மற்றும்படி நல்ல வேலைக்காரர் 'டபிள் சிப்ற் உழைத்துக் கொண்டு கொடுப்பார்.

நான் உடுப்பெல்லாம் எடுத்து ஆயத்தமாக இருந்தேன். மாமா கார் ஒழுங்குபண்ணி வந்திருந்தார். அவர்கள் வந்ததும் "நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் காரில் ஏறினேன்.

மாமா காறித் துப்பிவிட்டு வந்தார்.

இருவரும் பேயறைந்தது போல் முகம் வெளிறப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இப்போது நான் மாமா வீட்டில் சுதந்திரப் பறவையாக இருக்கிறேன். ஆனால் எனது சிறகுகளை உடைத்து விட்டார்கள் என்னால் பறக்க முடியவில்லை. சிறகு முளைத்ததும் பறந்து அந்தச் சுதந்திரத்தை அனுபவிப்பேன். ஆமாம் விரைவில் விவாகரத்து எடுக்க இருக்கின்றேன்.

ரதினி! வெளிநாட்டு மாப்பிள்ளைகளை நமது 'பிரண்ட்ஸ்' எவரையும் விரும்ப வேண்டாம் என்று சொல்லுடி! எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குமோ?

பணத்துக்காக பகட்டுக்காக- இப்படிப்பட்டவர்களை நம்பி நீங்களும் மோசம் போகக்கூடாது என்பதற்காகவே இதனை இத்தனை விரிவாக எழுதினேன்.

நமது நாட்டில்தெருவோரம் சப்பாத்து தைத்துப் பிழைக்கும் ஒருவன் கண்நிறைந்த கணவனாகக் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என்அவா.

எனக்காகக் கவலைப் படாதே! இனி அடிக்கடி கடிதம் போடு மனம் ஆறுதலாக இருக்கும். நானும் அடிக்கடி கடிதம் போடுவேன். எல்லாருக்கும் என் சுகம் சொல்லவும் பதில் கண்டு தொடருவேன்.

இப்படிக்கு,
ஆருயிர்த்தோழி
சாந்தி.

(யாவும் கற்பனை அல்ல.)

செக்கன் கதை

# கடி....

—எம். சுரேஸ்
கொழும்பு வளாகம்—



"ப்ளீஸ் போதும் டாலிங்... இனிமேலும் கன்னத்தில கடிச்சா சத்தியமா என் கன்னம் தாங்காது.... இங்க பாரு நேரமும் ஒரு மணியாகுது. இன்னிக்கு இதுபோதும் கண்ணு".... பாரதி கெஞ்சினான், ஆனால் அவன் கன்னத்தில் விழும் அன்புக் கடிகள் குறைவதாக இல்லை.

"என்ன டாலிங்... ஒவ்வொரு ராத்திரியும் உன்னோட விடிய விடிய முழிச்சிக்கிட்டுதானே இருக்கேன். அப்பவும் உனக்கு ஆசை தீரல்லயா?... ப்ளீஸ் இன்னிக்கென்னாலும் என்னைக் கொஞ்சம் தூங்கவிடும்மா, காலம ஒஃபீசுக்குப் போகணும்."

பாரதியின் பேச்சு அந்த நடு இரவில் ஒருதுளிகூட எடுபடுவதாக இல்லை. விருப்பம் இன்றியே மேனி இன்னும் சுவைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.' உடல் வெப்பம் வேகமாக அதிகரிக்க, வியர்வை முத்துக்கள் உடலெங்கும் முத்தமிட ஆரம்பிக்கிறது. அவிழ்ந்து கிடந்த லுங்கியை தேடிப் பிடித்துக் கட்டிக்கொண்ட பாரதிக்கு அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை.

"சீ... இவ்வளவு நாள் அடிச்சும் திருந்தமாட்டேங்கறேன்னு. இன்னிக்கு அன்பா சொல்லிப் பார்த்தேன். ஆனா என் பேச்சை ஒரு துளிகூட நீ, கணக்கெடுக்க மாட்டேங்கறீயே... ஒன்ன... ஒன்ன... இன்னிக்கு ரெண்டுல ஒன்னு பாக்காம விட மாட்டேன்...." கண்கள் கோபத்தில் சிவக்க கட்டிலில் இருந்து எழுந்து பாரதி துரத்தித் துரத்தி அடிக்க ஆரம்பித்தான்- கொசுவை!!!!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு காதல் கதைக்கான முன்னுரை



வழமைபோல் வாலிபக் கனவுகளுடனும், கற்பனைகளுடனும் கழிந்த அந்த இரவு விடிந்தது. சூரியன் கிழக்கு வாசல் பக்கமிருந்து மெல்ல மெல்ல தன் கிரணங்களை விரித்து, முன்னேறிக் கொண்டிருந்தான்.

தூக்கத்திலிருந்து நேரத்துடனேயே விழித்தெழுந்த நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நண்பனைப் பார்த்து வரப் புறப்பட்டேன். கால பந்து விளையாட்டின் போது யாருடைய காலோ, இவன் காலைப் பதம் பார்த்துவிட்டதால்..... ஏற்பட்ட முறிவு... இன்றுடன் இரண்டாவது நாளாக வைத்தியசாலையில் இருக்கச் செய்துவிட்டது.

நண்பன் உவைஸைப் பார்த்து விட்டு வெளியேறும் போது மணிக் கூட்டின் சின்னமுள் எட்டிலும், பெரியமுள் பன்னிரெண்டிலும் நின்று கொண்டிருந்தன.

"வீட்டுக்குப் போய் என்னதான் செய்ய....? ஏன் தான் இந்த 'ரிஸல்டை' லேட்டாக்கின்றான்களோ!? அரட்டையடிக்கக்கூட நண்பர்களுமில்லை. அதுதான்...உவைஸ் ஆஸ்பத்திரிக் கட்டிலிலிருந்து கொண்டு கூரையைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் சாலியும் வேலைக்குப் போயிருப்பான்' மனதில் தோன்றிய எண்ண அலைகளோடு, வீட்டை நோக்கி 'சைக்கிளை' செலுத்திக்கொண்டிருந்தேன்.

நான் வரும் வழியில்தான் யூ.சி.லைப்ரரியும் இருந்தது. எட்டுமணி ஆகிவிட்டிருந்தபடியால் அது திறந்தே இருந்தது. லைப்ரரியின் அதிகாலை விருந்தினர்கள் சிலபேர் வந்துள்ளார்கள் என்பதை வெளியில் நிறுத்தப்பட்டிருந்த 'சைக்கிள்'கள் மூலம் தெரிந்து கொண்டேன். எனது 'சைக்கிளையும் உரிய இடத்தில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தேன். வெளியே...லைப்ரரிக்கு எதிரே.... வீதிக்கு அப்பால் நீலமாய்ப் பரந்திருந்த கடல், அலைமொழியால் பேசிக்கொண்டிருந்தது.

எவனோ. சொன்னானாமே..... "புத்தகங்கள் தனிமையின் போது நண்பர்கள் என்று...நண்பர்களை நோக்கினேன். அழுக்கழுக்காய் நிறுத்தப்பட்டிருந்த ராக்கைகளில்.... தூசு ஆடை அணிந்திருந்தார்கள். எங்களூர்ப்பக்கம் பயங்கரவாதம் அதிகரித்திருப்பதற்கான காரணம் உடனே புரிந்தது!

'புத்தகங்களின் அந்தப் பத்தினித் தனத்தை ஏன்தான் நாம் கெடுப்பான்' என்ற நல்லுணர்வோடு அதனைத் தொடாமலேயே சஞ்சிகைகள் பகுதியை நோட்டமிட்டேன். விரிந்து, பரந்த மேசையில் இந்தியாவின் வெள்ளி விழா, பொன் விழா, கண்ட, காணப் போகும் சஞ்சிகைகள்! அவற்றின் மேலாடை கலைந்த நிலை அதிக மானோரின் அறிவுத் தேவையை அவைதான் பூர்த்தி செய்கின்றன என்பதைப் புரியவைத்தது. குறை சொல்லக் கூடாதுபாருங்க... நல்ல அருமையான, அழகான படங்கள் இருக்குது!

படித்தேனோ, படம் பார்த்தேனோ... சத்தியமாய், பத்தரை மணிவரை லைப்ரரியில்தான் இருந்தேன். "ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு தடவை உங்கள் உள்ளங்களுக்கு ஓய்வளியுங்கள்" என்று யாரோ ஒரு பெரியவர் சொன்னது நினைவில் வந்தது. அத்தோடு...பசி வயிற்றைக் கிள்ளிய போதுதான் காலையில் சாப்பிடாமல் வந்ததும் நினைவில் வந்தது.

சைக்கிளை எடுத்துக் கொண்டு 'டொக்யாட்' வீதியால் மீண்டும் என் வீட்டை நோக்கிய சவாரி!

புனிதமரியாள் கல்லூரியில் 'நெட் போல்' விளையாடிக் கொண்டிருந்த மாணவ "சகோதரிகளை" ஒரு கள்ளப்பார்வை பார்த்து...இந்துக் கல்லூரியை-நான் படித்த கல்லூரி நெருங்கும் போது பிரின்சிபல்' வெளிவர...அவரைப்பார்த்துச் சிரித்து ஒ'ந 'குட்மோனிங்' உதிர்த்து... காளிகோயிலடியால் திரும்பி.... 'சாரதா வீதி'யால் விட்டு ஒரு மாதிரியாக வீடு வந்து சேர்ந்தேன்.

—2—

"மாமாவுக்கு சுகமில்லையெண்டு கேள்விப்பட்டம் அதான் பாத்துட்டுப் போகலாமெண்டு வந்தனாங்கள். இப்ப எப்படி? மாமா....சுகமா?"

"எவ்வளவு மருந்தெடுத்தும் சரி வருகுதில்லையே புள்ள....."

"இங்காலப் பக்கம் வந்து எவ்வளவு நாளாப் பொய்ட்டு அண்டைக்கு "அவங்க"ளோட வந்ததுக்குப்பொறகு வரக்கெடைக்கயுமில்ல"....

"யாரு புள்ள...இந்தப் புள்ள? நானாட மகளா....?

"ஓம்..மாமா...என்ட மூத்த நானாட மகள். பயணமென்டால் இதுக்கு ஒத்துவாறதேயில்ல... எங்கேயும் போனா ஒண்ணும் திங்கிறதுமில்ல. குடிக்கிறதுமில்ல... குடிச்சா ஒரே சத்திதான்."

என்ன யோசிக்கிறீங்களா.....? வீட்டை நெருங்கியதும் என் செவிகளில் பட்ட வார்த்தைகளில் சிலதுதான் இவை. கேட்டதும் புதிதாய்க் கேட்கிறதுமான வார்த்தைகள். பழகியவர்களினதும், புதியவர்களினதும் வார்த்தைகள். அறுபத்தைந்தைத் தாண்டிய வயசான ஓர் ஆண் குரல். ஏனையவை பெண்குரல்கள்! அவர்களின் பேச்சிலிருந்து அவர்கள் எனது உறவினர்கள் தான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

அவர்கள் மாமா என்றது எனக்கு யாரென்று கேட்கிறீர்களா...? சரியான அவசரம் உங்களுக்கு.... சொல்றேன் இருங்க,

"அது என்ட அப்பா, அதாவது என்ட வாப்பாட வாப்பா, சில பேர் 'அப்பா' என்று சொல்லுவாங்க, சிலபேர் 'வாப்புச்சி' என்று சொல்லுவாங்க.

என்ட வாப்பாவும், உம்மாவும், ரெண்டு தம்பிமாரும் முந்தநாள் மூதாருக்குப் போனதற்குப் பொறகு, நானும், அப்பாவும் வாப்பும்மாவும் (வாப்பாட உம்மா) தான் வீட்ல இருக்கோம்'. நேரத்தோட சொல்லியிருக்கலாம் என்கிறீர்களா...என்ன செய்ய மறதி என்பது உங்களுக்கு மட்டும்தானா இருக்கிறது!?

'வாப்பும்மா'வையும் சேர்த்து எல்லாம் ஐந்து பெண்கள் இருந்தார்கள். வந்த நான்கு பேரில் மூவர் முப்பத்தைந்துக்கும், நாற்பத்தைந்துக்கும் இடைப்பட்டவர்கள். பழைய 'லைட்ரீடிங்'கைப் பார்த்தால் அவர்களை எவ்வாறு அழைப்பதென்பதை நானும், நீங்களும் தெரிந்து கொள்ளலாம்...!

என் கண்களுக்குள் பிரகாசித்த அந்த நான்காவது பெண்ணைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்..." சீ.... போங்க...எனக்கு வெட்கமாயிருக்கு....!

—3—

வாடிக்கிடந்த என் வீட்டுத் தோட்டத்தில் ஒரு புதுமலரின் வரவு!

இருட்டிக்கிடந்த வானத்தில் ஒரு பால் நிலவின் வெளிச்ச ஊர்வலம்!

அவள் என் உறவு உலகத்தில் இது வரை கண்டுபிடிக்கப்படாமலிருந்த அமெரிக்கக் கண்டம்! இந்தக் கொலம்பசுக்குத்தான் இத்தனை தாமதம்!

அவள்-கிராம அமாவாசைக்குள் பவித்ரமாய் இருந்த நிலவு! இன்றுதான் பௌர்ணமி கண்டிருக்கிறாள்!

அவளின் விழிவீச்சுகளால் மயக்கப்பட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். என் விழிகள் இமைகளைத் தொலைத்து விட்டிருந்தது போலும்!

அவளின் புன்னகைப் பள்ளத்தாக்கை விழிகளால் அளந்த நான் என்னையுமறியாது அதனுள் வீழ்ந்து விட்டேன். என் புத்திக்கு புன்னகையின் அர்த்தம் அன்றுதான் புரிந்தது!

நாங்கள் பார்வைப் பரிமாறல்கள் செய்து கொள்ளும் தொலைபேசிகளானோம். அவள்-அம்புவிழிக்கு அர்த்தம் கற்பித்துக் கொண்டிருந்தாள்.

நாகரீகம் என்ற ஒன்று என்னைத் தடுத்திராவிட்டால் கண்களை அவளை விட்டும் அடிக்கடி திருப்பியிருக்க மாட்டேன்.

மனம் எதையோ வேண்டியது. வார்த்தைகள் ஹர்த்தால் அனுஷ்டித்தன. மௌனம் ஆட்சி நடத்தியது. கவிஞர் வைரமுத்துவும், அப்துல் ரஹ்மானும் வந்து காதலைப்பற்றிய தங்கள் கவிதைகளை ஞாபகப்படுத்தி விட்டுச் சென்றார்கள். "காதல் மௌன மேடையில் அரங்கேறும் நாளை நாடகம்." காதல் அது, மௌனங்களால் உச்சரிக்கப்படுகின்ற புனிதமான வார்த்தை"

"அப்படியாயின் எங்கள் மௌனமும் காதலா? ' அதுவும் கண்டவுடன் காதலா? ஒரு பெண் பிள்ளை கொஞ்சம் பார்த்து, சிரித்தால் போதுமே......! சீ...சீ... அநாகரீகம். திரும்பி நடந்தேன். உடலில் ஏதோ பாரம். ஒரு நிழல் தொடர்வது போன்ற பிரமை! கால்கள் நடக்க மறுத்தன. திரும்பி அவளைப் பார்த்தேன். எதையோ வேண்டும் ஒரு யாசகனின் பார்வை... அவள் விழிகளிலும்...!

மீண்டும், பார்வைப் பரிமாறல்களும், மௌனத்தின் ஆட்சியும்....! சொல்லிவைத்தாற்போல பக்கத்துவீட்டு "கெஸட்செட்"டிலிருந்து "காதலென்பது கதையாகும், இருகண்களிலே உருவாகும்" என்ற 'காஷ்மீர் காதலி' படப்பாடல் போய்க் கொண்டிருந்தது.

எங்கள் கண்களிலும் அந்தக் கதைதான் உருவாகிக் கொண்டிருந்தது போலும்!

சிறிது நேரத்தின் பின் விடை பெற்றுச் செல்ல எழுந்தார்கள். எனக்கோ அவர்களுடன், இல்லையில்லை. அவளுடன் போக வேண்டும் போல் இருந்தது. எவ்வாறு செல்வேன்? அவளுக்கு நகரவும் இடமளித்தேன். மனதுக்குள் வசிக்கவும் இடமளித்தேன்.

அவள் கையசைத்தாள். 'என்னை மறக்க வேண்டாம்' என்பது போல் இருந்தது. நானும் கையசைத்தேன். அவளுக்கு என்னவாய்த் தோன்றியதோ...!

—4—

தொடர்ந்த நாட்களில்...கனவுகளும், கற்பனைகளும் அதிகரித்து கவிஞனாகியிருந்தேன்! யார், யாரோ வந்து போன கனவுகளில் அவள் மாத்திரமே வரத்தொடங்கினாள். இப்படித்தான் ஒரு நாள், கனவில் சந்தித்துப் பேசிக்கொண்டோம்.

அவள்தான் முதலில் பேசினாள். "உங்கள் வீட்டிற்கு வந்திருந்த போது ஒன்றை தொலைத்துவிட்டேன்" என்றாள். "எதை?" என்றேன் ஆச்சரியத்தோடு. "இதயத்தை" என்றாள் நானும் பேசினேன். "நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தபோது ஒன்றை எடுத்துச் சென்றுவிட்டீர்கள்" என்றேன்.

'எதை' என்றாள் ஆச்சரியத்துடன்... 'என் இதயத்தை' என்றேன். தலை கவிழ்ந்து கொண்டாள். அந்தக் கனவு தேசத்து காதல் கொடி சுதந்திரமாய்ப் பறந்தது. யோசிக்காதீர்கள். கனவுக் காதலர்கள் தூயமொழியில்தான் பேசிக்கொள்வார்கள்.

விரைந்து சென்ற நாட்கள் இரண்டு மூன்று வருட கலண்டர் தாள்களை நிர்வாணப்படுத்தின. ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளாமலேயே அந்தக் காலங்கள் கடந்தன. அவளின் நினைவுகள் இப்போது யாருடன் என்பதை அறியாமலேயே...என் நினைவுகளை அவளைப் பற்றியதாகவே ஆக்கிக் கொண்டிருந்தேன்.

சில வேளைகளில்...என்னைப் போலவேஅவளும் என்னைப்பற்றிய நினைவுகளுடனேயே இதுவரை காலமும் இருந்திருந்தால்...இந்தக் கதையை வாசித்த பிறகாவது கடிதம் போடலாம்"

■

# தேன் கிண்ணம்

கண்மூடினாள்
அணைந்து
கொண்டது-
நிலவு.

**பதுர் எம்மெல் பரீதத்**
**அக்கரைப்பற்று.**

மாதங்களில் அவள்
மார்கழி.
நான் தொடும்போது
மட்டும்
ஏன்
சுடுகிறாள்.

**நிதக்ஷலா**



...கள்
நம் நாட்டி...
சுதந்திரமாக
சுற்றி வர முடியாத
பயங்கர வாதிகள்!

**செந்தமிழ்ச்செல்வன்**
**சிலாபம்.**

கண்ணகி போல வாழ
விரும்பினேன் நான்
அது நிறைவேறியது
என்காதலன் கோவலனானான்.

**செல்வி ஜீவா நடராஜா**
**பதுளை.**

### புள்ளி விபரம்

ஒவ்வொரு நிமிடம்
ஒவ்வொரு தினமும்
உலகில் உதிக்கும்
ஜனக் கணக்கை
விஞ்ஞான வழியில்
கணக்கிட்டு வந்தனர்!
எண்பதின் பின்னே
இவ்வுல கேறும்
ஜனத் திரள்
பூமியில் உள்ளதை
உறிஞ்சிடும்
என்றனர்!
யதார்த்தம் இதுதான்
வழி தெரியாது
விழித்தனர் மானுடர்!
உலக மக்கள்
ஒவ்வொரு நாட்டிலும்
கலகம் செய்தே
இன்று வரைக்கும்
அழிந்து
ஒழிந்து
சாக்காடாக
உலகை ஆக்குதல்
மனித நெருக்கத்தை
மனதிலிருத்தியா?
என்ற கணக்கை
இதுவரைப்
புள்ளிவிபரம்
காட்ட உலகில்
எவருமில்லையா?
சன நெருக்கம்
மனித மனதைச்
சலனப்படுத்தி
அழிவை நோக்கி
அணைய முயலுமா?
இல்லை
மனிதம் அழிந்து
மனித உருவம்
மட்டும் காட்டும்
உலக மாகுமா?
எதற்கும்
புள்ளிவிபரம்
அவசியம்!

**ஏ.இக்பால்.**

### மச்சானை பாத்தீங்களா?

ஓட்டு
கேட்டு வந்தவரு
அதிர் வேட்டு போல
பேசினாரு
வாக்களிச்சீங்கன்னா....?
வாக்கு.
கொடுத்தவரு
வாங்கி கட்டிக்கிட்டு
வழி மாறி
போனாறு
ஏங்க" அந்த
மச்சான
பாத்தீங்களா.....???

**கே.எஸ்.சந்திரசேகர்**
**கொண்டக்கெலை.**

### செருப்பு

என் பாதச் சுவடுகள்
ஸ்வரங்கள் அற்ற
வீணையாகாமல்
என் பாதங்களை
நேசிக்கும்
நிஜக்காதலி!

**மு.அ.தஸ்ரீப்**
**அக்கரைப்பற்று**

### தரிசனங்கள்!

உன்
தரிசனங்களால்
எத்தனை
விரிசல்கள்
என் அடிமனதில்
உன்
விழியின்
விசாரணைகளால்
விரிவானது
நம்
நட்பின் பாரம்பரியம்
உன்
இனிய நினைவுகளின்
ஸ்பரிசத்தால்
என்
இளமையில்
மின்மினி
அலங்கரிப்புக்கள்
இளவேனில்
மகரந்தம்
மதுக்களிப்பில்
இளைப்பாறுவது போல்
என்
உள்ளம்
தித்திப்பில்
மதுரகவி இசைக்கிறது.
உன்
புன்சிரிப்பில்
புண்ணானது
உருண்டு திரண்டு
வடிவம் கட்டிய
என் உள்ளம்.
உன்
இளமையில் மலரும்
பருவத்து அரும்பின்
மருக்கொழுந்து
வாசம்.
என் சுவாசம் வரை
தூண்டிலிடுகிறது
உன்
குரும்பார்வையில்
ஐம்புலன்களையும்
அடக்கியாளும்
பாரம்பரியம்
என்னில்
உன்
தரிசனங்களுக்கு
மனோரஞ்சித
மணி அடிக்கிறது!

**ஷஹிர்ஷா தாஸிம்**
**தர்கா நகர்.**

# பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம்.எஸ்.எம். அஸ்ஹார்.
முகவரி: இல.14, குருகொடை, அக்குறணை,
வயது: 22
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, விளையாட்டு.



பெயர்: எம்.எவ். கலீல் ரகுமான்.
முகவரி: 575, கல்யாண வீதி, சாய்ந்தமருது.
வயது: 18
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: கோ.மோகன்
முகவரி: 104,செட்டியார் தெரு, கொழும்பு-11.
வயது: 28
பொழுதுபோக்கு: ரி.வீ. பார்த்தல், வானொலி கேட்டல், புத்தகம் வாசித்தல்.



பெயர்: அழகானந்தம் அரவிந்தன்
முகவரி: 262/15, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: ஆர்.யோகேஸ்வரன்.
முகவரி:110/3, சிறீ கதிரேசன் வீதி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை புத்தகங்கள் வாசித்தல், வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: சந்திரகலா சோமசுந்தரம்
வயது: 18
முகவரி: லிடஸ்டேல் எஸ்டேட் ஹல்கரனோயா இராகலை போஸ்ட்



பெயர்: யு.எல். நூர்ஜகான்
முகவரி: 590, கல்யா வீதி, சாய்ந்தமருது- 01.
வயது: 20

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# காதுல பூ

# இது ஒரு குடும்பப் பத்திரிகை

**இன்றைய நடப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் எப்படியிருக்கும்? கற்பனை செய்து பார்த்தோம். கற்பனையில் உதித்தவற்றை நீங்களும் ரசிக்கலாம்.**

## அன்பு வழி இருக்க ஆயுதம் ஏன்? புலிகளின் தலைவர் பிரபா கேள்வி!



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இப்போது தினமும் மக்களைச் சந்தித்துப் பேசி வருகிறார்.

நேற்று நல்லூர்க் கந்தசாமி கோவில் வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார். காவிக்கலர் வேட்டியும் அதே கலரில் சட்டையும் அணிந்திருந்தார். பிரபாகரன் அங்கு உரையாற்றும் போது-

ஆயுதம் தான்எல்லாவற்றுக்கும் தீர்வு என்று சிலர் மடைத்தனமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாபெரும் ஆயுதம் ஒன்றைப்பற்றி அவர்களுக்கு சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அன்புதான் அந்த ஆயுதம். அறவழிதான் நமக்குக் கேடயம்.

சில தமிழ் அமைப்புக்கள் இப்போதும் ஜனநாயக வழிக்கு வர மறுக்கின்றன. இங்கே மேடையில் அமர்ந்துள்ள என் இனிய சகோதரர்கள் திரு டக்ளஸ் தேவானந்தா-திரு. சித்தார்த்தன் போன்றவர்களும் இப்போது ஜனநாயக வழிக்கு வந்திருப்பது எனக்கு பெரு மகிழ்ச்சி தருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே வன்முறையில் நம்பிக்கை கொண்ட அமைப்பாக மாறியிருக்கிறது.

திரு. சிவசிதம்பரம் ஜனநாயக வழிக்குத் திரும்பிய எமக்கு மரண தண்டனை விதித்துள்ளார். வயதான காலத்தில் காட்டில் வாழும் எண்ணத்தோடு காரியங்கள் ஆற்றாமல் அவர்களும் ஜனநாயக வழிக்கு வரவேண்டும். ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்தி செயல் பட்ட எமது அனுபவங்களை மறந்துவிட்டு கூட்டணி வன்முறைப் பாதைக்கு திரும்பியுள்ளதை வன்மையாக கண்டிக்கிறேன் என்று திரு. பிரபாகரன் உரையாற்றினார்.

## துரோகிகளை மன்னிக்க மாட்டோம்
### -சிவா எச்சரிக்கை

ஜனநாயகப் பாதையில் இருந்து ஆயுதமேந்திய போராட்டப் பாதைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி திரும்பியிருப்பது தெரிந்ததே.

தற்போது வன்னிக்காட்டில் தலைமறைவாக இருந்து வரும் கூட்டணித்தலைவர் திரு.சிவ சிதம்பரம் செய்தியொன்றை விடுத்துள்ளார்.

'கூட்டணியின் குரல்' என்னும் அவர்களது சொந்த வானொலிச் சேவை அவரது செய்தியை நேற்று ஒலிபரப்பியது.

எமது தலைவர்திரு. அமிர்தலிங் கத்தை கொன்றவர்களையிட்டு கோழைத்தனமாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தலைவன் மடிந்த பின்னும் வாய்மூடி, கைகட்டி நிற்க நாம் ஒன்றும் பொட்டுப் பூச்சிகளல்ல. அரசாங்கத்தை மட்டும் கண்டிப்பது வீரமாகாது. நாம் இப்போது ஜனநாயக வழிக்கு வந்துள்ள முன்னாள் புலிகளை சும்மாவிட்டு போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழினத்தின் மத்தியில் ஜனநாயக பாதைக்கு வரவேற்பில்லை. அதனால் ஜனநாயகம் பற்றிப் பேசும் துரோகிகளை மன்னிக்க முடியாது: அவர்களை எமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயங்க அனுமதியோம் என்றும் திரு சிவசிதம்பரம் அந்தச் செய்தியில் கூறியுள்ளார்.

## தமிழர்களுக்கு சமஷ்டி வழங்க வேண்டும்
## சிங்கள அரசியல் கட்சிகள் வலியுறுத்தல்!!

இலங்கையின் இனப் பிரச்சனைகளை பற்றி கடந்த நாற்பதாண்டுகளாக ஆராய்ந்து வந்த சிங்கள அரசியல் கட்சிகள் நேற்று வரலாற்று மக்கியத்துவம் வாய்ந்த முடிவொன்றினை மேற்கொண்டனர்.

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாணவேண்டும் என்றால் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அமைப்பொன்றினை வழங்க வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு சகல அதிகாரங்களும் உள்ள அதிகார அமைப்பாக அது அமைய வேண்டும் என்றும் அக் கட்சிகள் ஏகமனதாக தீர்மானித் துள்ளன.

ஹெல உறுமய என்னும் அமைப்பு தமிழ் கட்சிகள் கேட்கும் உரிமைகள் போதுமானவையல்ல என்று கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் கட்சிகள் மிகக் குறைவான அதிகாரங்களை கேட்பதால் தமிழர்களின் உரிமைகளுக்காக தாம் போராட வேண்டியிருக்கும் என்று ஹெலஉறுமய எச்சரித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சமஷ்டி அமைப்பே தீர்வு என்பதில் தெளிவாக இருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பிரபாவுக்கு நோபல் பரிசு கொடு!
### டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

அமைதி வழியில் முழு மனதையும் திருப்பிவிட்ட அன்புச் சகோதரன் பிரபாவுக்கு நோபல் பரிசே வழங்கப்படவில்லை. கோர்பசேவுக்கு கொடுத்தீர்கள்.தலாய்லாமாவுக்கு கொடுத்தீர்கள். அவர்கள் எல்லாம் அமைதிக்கு ஆற்றிய பணிகளைவிட பிரபா ஆற்றிய பணிகள் சற்றும் குறைந்ததல்ல.

இவ்வாறு நேற்று நல்லூரில் நடந்தகூட்டத்தில் ஈ.பி.டி.பி. தலைவர் திரு. டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

## தீரன் பிரபா தினம் - நாடு முழுவதும் அனுஷ்டிக்கச் சொல்கிறார் சித்தார்த்தன்!

திரு.பிரபாகரன் பிறந்த நாளில் இருந்து அவர் ஜனநாயக பாதைக்கு வந்த நாள் வரை உள்ள வரலாற்று பதிவுகளை குறிக்கும் வகையில் தீரன் பிரபா தினம் நடத்த வேண்டும்.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் முடிவு செய்துள்ளதாக அதன் தலைவர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்றுக் கூறினார். நல்லூரில் நடந்த கூட்டத்தில்உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

## சந்தியாவின் மகளே வருக! சரியான ஆட்சி தருக!
### கலைஞர் செல்விக்கு அழைப்பு!



தி.மு.க தலைவர் திரு.மு. கருணாநிதியும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் நேற்று மாலை 6.30 மணியளவில் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தினார்கள்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் கருணாநிதியின் இல்லத்தில் நடைபெற்ற அச்சந் திப்பில் கடந்தகால நினைவுகள் முதலில் பரிமாறப்பட்டன.

கலைஞர் வசனத்தை 'எங்கள் தங்கம்' திரைப்படத்தில் பேசி நடித்தது மறக்க முடியாத அனுபவம் என்று செல்வி கூறினார்.

அப்போதெல்லாம் நீங்கள் மிகவும் பருமனாக இருந்தீர்கள். டூயட் பாடல்களில் நம்பர் எம்.ஜி.ஆர் மிகவும் கஷ்டப்பட்டார் என்று ஒரு துளி கண்ணீரோடு கலைஞரும் தன் நினைவுகளை மீட்டினார்.

தி.மு.கவுக்குள் வை.கோபால் சாமி ஓரம் கட்டி முடிக்கப் படுவதற்கும், நாஞ்சில் மனோகரன் முகவரி இல்லாமல் போவதற்கும் தனது கட்சி ஒத்துழைக்கும் என்று செல்வி உறுதியளித்தார்.

தமிழக முதல்வராக செல்வி மீண்டும் பொறுப்பேற்க வேண்டும். தனது ராஜினாமாவை வழக்கம் போல் வாபஸ் பெறவேண்டும் என்று கலைஞர் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

அதன்பின்னர் இரவு 8.30 மணிக்கு கலைஞரது இல்லத்தில்செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

கழகத்தின் வருங்காலத் தலைவர் மு.க. ஸ்டாலின் சகிதம் சமுகமளித்த கலைஞர் மு.கருணாநிதி 'சந்தியாவின் மகளே வருக சரியான ஆட்சி தருக' என்று தமதுகட்சி ஜெயலலிதாவுக்கு அழைப்பு விடுப்பதாக குறிப்பிட்டார்.

முன்னாள் பிரபல எதிரியோடு எப்படி கூட்டுச்சேர்ந்தீர்கள் என்று கலைஞரிடம் நிருபர்கள் கேட்டனர்.

எதிரி என்று எப்போதும் நான் சொன்னதில்லை. எதிர்த்தரப்பில் இருப்பார் என்றுதான் சொன்னேன். எதிரி வேறு எதிர்த் தரப்பு வேறு. மேலும் அண்ணா கூட மறப்போம் மன்னிப்போம் என்று கூறியிருக்கிறார் என்றால் நான் ஒரு சாமானியன் மறக்கக் கூடாதா, மன்னிக்கக் கூடாதா என்று கலைஞர் பதிலளித்தார்.

செய்தியாளர்கள் வாயடைத்துப் போன நிலையில் கலைஞர் மாநாட்டை முடித்துக் கொண்டார்.

## தொலைக்காட்சியில் தமிழ் ஆதிக்கம்!

அரச கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சிகளிலும், ரி.என்.எல், எம்.ரி.வி. போன்ற தொலைக்காட்சிகளிலும் தமிழ் நிகழ்ச்சிகளே ஆதிக்கம் செய்வதாக குற்றம் சாட்டப்படுகிறது.

தமிழ் நாடகங்களுக்கு பெருந்தொகையான செலவுகள் செய்யப்படு வதோடு புதிய தமிழ்த் திரைப் படங்களும் தருவித்துக் காட்டப்படுகின்றன.

இதற்கிடையே ரி.என்.எல். தொலைக்காட்சி சிங்கள நாடகங்களை தமிழில் மொழிமாற்றி ஒளிபரப்புச் செய்துவருகிறது.

## சிற்றெறும்புகள் தொல்லை நடிகை பொலிசில் புகார்!



பிரபல நடிகை சுகன்யாவை சிற்றெறும்புகள் துரத்தி துரத்தி தொல்லைப்படுத்துவதாக புகார் ஒன்று காளைமேடு பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

சுகன்யாவின் புகாரை அடுத்து நேற்று விமானம் மூலம் சென்னை வந்த பாதுகாப்பு உள்துறை அமைச்சர் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார். உடனடியாக சிவப்பு பூனைப்படைப் பாதுகாப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க ஜனாதிபதியாக மடோனா! உரையாற்றும் போது செய்த விபரீதம்!!


நடிகர் நாடாள முடியு மானால் நடிகை முன் நாடாளக் கூடாது என்று தூள்பரத்தும் பிரச்சாரங்கள் மூலம் அமெரிக்க ஜனாதிபதி பதவியை எட்டிப் பிடித்திருக்கிறார் மடோனா.



நேற்று பதவியேற்பு உரையின் போது பழக்கதோசம் காரணமாக தனது உடைகளை களைந்து பின் அணிந்து அவர் சாகசம் காட்டியதால் பார்வையாளர்கள் வாயடைத்துப் போனார்கள்.

பழக்க தோசத்தை மாற்றிக் கொள்கிறேன் பகலில் மட்டும் என்று மடோனா உறுதியளித்தார்.

## சர்வ மதக் குழுவிடம் வீரப்பன் உறுதிமொழி



தமிழ்நாடு - கர்நாடக எல்லையில் முன்னர் சந்தன மரக்கடத்தலில் ஈடுபட்டு வந்தவர் திருவாளர் வீரப்பன்.

அகில உலக பத்திரிகை யாளர்கள் மற்றும் சர்வமத தூதுக்குழுவினர் நேற்று வீரப்பனைச் சந்தித்து பேச்சு நடத்தினார்கள்.

தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த தான் பிடித்து வைத்திருந்த இரண்டு பொலிசாரை வீரப்பன் விடுதலை செய்தார்.

வீரப்பனை சந்தித்துவிட்டு நேற்றிரவே திரும்பிய சர்வமத தூதுக்குழுவினர் தாம் நன்கு உபசரிக்கப்பட்டதாகக் கூறியதுடன் வீரப்பனின் உறுதிமொழியை வெளி யிட்டனர்.

இனிமேல் சந்தன மரம் வெட்டப் போவதில்லை யென்றும், சாதாரண மரங்களையே சாய்க்கப் போவதாகவும் வீரப்பன் உறுதிமொழி கூறியுள்ளார்.

## கவர்ச்சியாக நடிப்பதா? குஷ்பூ கோபத்தில் வெடிப்பு!



'அடக்கமான பெண்' திரைப் படத்தில் நடித்துக் கொண்டிருந்த பிரபல நடிகை குஷ்பூ எமது நிருபருக்கு பேட்டியளித்தார்.

எமது நிருபர் கேட்ட கேள்விகளும் அதற்கு குஷ்பூ அளித்த சூடான பதில்களும்.

கே:தங்களுக்கு மிகவும் பிடித்த மான நடிகர் யார்?
கு: மிஸ்டர் தியாகராஜா பாகவதர்.
கே:நடிகர் பிரபுவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
கு: பிரபுவா (குஷ்பூ யோசிக்கிறார்) ஓ... மறந்தே விட்டேன். என்னோடு அவர் நடித்த படங்கள் நன்றாகப் போய் இருக்கின்றன. மற்றப்படி பிரபுவைப்பற்றி நினைக்கும் அளவுக்கு எதுவும் நடக்க வில்லை.
கே:கவர்ச்சியாக நடிப்பீர்களா?
கு: (குஷ்பூவின் முகம்சிவக்கிறது. கிட்டத்தட்ட தக்காளிக் கலரில்) யாரிடம் கேட்கிறீர் கவர்ச்சி பற்றி? நீர் என்ன துகிலுரியும் துச்சாதன இயக்குநர்களின் தோழனா அல்லது தோஸ்தா. சுண்டுவிரல்கூட தெரியாமல் கிளவுஸ் மாட்டி ஒரு சாண் உடம்பு கூட காட்டாமல் நடித்துவரும் குஷ்பூ மோதி மிதித்து விடுவாள் ஜாக்கிரதை.

குஷ்பூ தன் மெல்லிய தேகம் துடிக்க கோபத்தில்குதித்தது கண்ட நமது நிருபர் தப்பினோம் பிழைத் தோம் என்று ஓடிவந்துவிட்டார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஆன்மீகம்

## தீமைக்குத் துணை போனால்....?

பிறருக்குத் தீங்கு நினைப்பவன் தானே அழிவான். இது அனைவருக்கும் தெரியும். ஆனால் பிறருக்குத் தீங்கு நினைப்பவன் மட்டுமல்ல, அவனுக்கு உதவுபவன் எவனோ அவனும் சேர்ந்தே அழிவான் என்பது நிச்சயம்.

பாண்டவர்கள் தங்கள் வீரத்தினால் வென்று சேர்த்த நாட்டைத் துரியோதனன் தன்வஞ்சனையால் கவர்ந்து கொண்டு அவர்களை வனத்திற்கு அனுப்பி விட்டான்.

நாட்டைப் பெற்ற பின்னும்கூட, நிம்மதியான உறக்கத்தைப் பெற அவனால் இயலவில்லை. காட்டிலிருக்கும் அவர்களை அப்படியே சுடுகாட்டிற்கு அனுப்பி விட என்ன வழி என்று



யோசிப்பதிலேயே அவன் உடல் இளைத்தான்.

இறுதியாகக் காலமா முனிவனை அழைத்தான். ஒரு யாகம் செய்து, அதிலிருந்து ஒரு பூதத்தைச் சிருஷ்டித்து பாண்டவர்களைக் கொல்ல அதை ஏவ வேண்டும் என்று கூறினான். தீமையை எதிர்க்கத் துணிவில்லாத அம்முனிவனும்அதற்குச் சம்மதித்தான். பூதமும் ஏவப்பட்டது.

ஆனால் தர்மம் தலைகாக்கும் என்பது சத்திய வாக்கல்லவா? தர்மநெறி வாழ்வாரை தர்மத்தின் நாயகராகிய பரம்பொருளே காப்பார் என்பது இவ்விடத்தில் நிதர்சனமாயிற்று.

இதே தருணத்தில் பாண்டவர்களுக்கு அங்கே மிகுந்த தாகமும், களைப்பும் ஏற்பட, அவர்களில் மூத்தவரான தருமர் தன் கடைசித் தம்பியை "எங்கேனும் தண்ணீர் கிடைத்தால் கொண்டு வா" என்று அனுப்பி வைத்தார்.

சகாதேவனும் ஒரு பொய்கையைக் கண்டான் அது நச்சுப் பொய்கை. இது தெரியாத சகாதேவன் தானும் தண்ணீர் அருந்தி தன் அண்ணன்மாருக்கும் கொண்டு போகலாம் என்று எண்ணி இறங்கிய போது ஒரு யஷன் தோன்றித் தடுத்தான். "என் கேள்விக்குப் பதில் கூறிவிட்டுப் பின் தண்ணீர் அருந்து, இல்லாவிடில் இறப்பாய்!" என்று சொன்னான்.

அதிக தாகத்தில் இருந்த சகாதேவன், அதை அலட்சியம் செய்து தண்ணீர் குடித்தான். அங்கேயே விழுந்து இறந்தான். சகாதேவனைத் தேடிவந்த நகுலனும் அப்படியே இறந்தான். இவ்வாறு பாண்டவர்கள் ஒரு வரைத் தேடி ஒருவர் வந்து தருமரைத் தவிர மற்ற நால்வரும் வீட்டிலிருக்கும் நேரத்தில் தான் காலமா முனிவன், பூதத்தை ஏவி விட்டிருந்தான்.

அங்கு வந்த பூதம், தான் கொல்ல வேண்டியவர்கள் , ஏற்கனவே இறந்துகிடப்பதைக் கண்டு, தான் ஏவப்பட்ட காரியத்தைச் செய்ய முடியாத கோபத்தோடு அதே வேகத்தில் திரும்பி வந்து, தன்னை ஏவிய காலமா முனிவனையே கொன்றது.

யஷனாகத் தோன்றி நச்சுப் பொய்கையை ஏற்படுத்தி நால்வரையும் இறக்கச் செய்தவர் தர்மதேவர். ஏவல்பூதம் போனபிறகு, தர்மதேவர் தம்பியரைத் தேடிவந்த தருமரிடம், அவர்கள் நால்வரையும் உயிர்ப்பித்துக் கொடுத்தார்.

தர்மம் தலைகாக்கும். தர்மதேவரே தோன்றி தக்க தருணத்தில் பாண்டவர்களின் உயிரைக் காப்பாற்றி இதை நிரூபித்துக் காட்டி விட்டார்.

கெடுமதி கொண்ட துரியோதனனுக்குத் துணை போனதால் காலமா முனிவன் தானே அழிந்தான்.

## வழிகாட்டும் நாயகம்

மக்காவில் பிறந்து, இறை பணிக்காக மக்கமா நகரைத் துறந்து, மதீனாவிற்குள் நபிகள் நாயகம் வந்து ஆறு ஆண்டுகளுக்குப் பின், மக்கமா நகர் திரும்புகிறார்கள். தனது ஆயிரத்து நானூறு தோழர்களுடன், இறைவனைத் தொழுது கொள்ள,

அறியாமைப் பிணியில் சிக்கி, சிந்தனைச் செல்வம் கிடைக்கப் பெறாத மக்கா வாசிகள், நாயகம் அவர்களையும், அவரது தோழர்களையும் உள்ளே விட மறுக்கிறார்கள். இருபக்கமும் சமரசம் பேசப்படுகிறது. அதன் விளைவே "ஹுதைபியா உடன்பாடு" எனும் உடன்படிக்கை ஏற்படுகிறது.

அந்த உடன்படிக்கையில், பெரும் பான்மையானவை நபிகள் நாயகம் அவர்களுக்கும் அவரது தோழர்களுக்கும் எதிரானதாகவே இருக்கிறது. ஆனாலும், அந்த உடன்பாட்டை சாந்தம் தவழும் முகத்துடன், ஒப்புக்கொண்டார் அந்த மனிதப் புனிதர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

**உடன்படிக்கையின் சாரம்சம்:**

இம்முறை மக்காவிற்குள் நுழைய அனுமதியில்லை. அடுத்த ஆண்டு மக்காவிற்கு வந்து, மூன்று நாட்கள் மட்டுமே தங்க வேண்டும். வரும் ஒவ்வொருவரும் ஒரு உடைவாளை மட்டுமே எடுத்து வரவேண்டும். மக்காவில் உள்ள முஸ்லிம்களை மதீனாவிற்கு அழைத்துச் செல்லக் கூடாது. ஆனால் நாயகம் அவர்களுடன் வரும் முஸ்லிம்கள், மக்காவிலேயே தங்கப்பிரியப்பட்டால், அதற்குத் தடை சொல்லக்கூடாது.

அமைதியின் தூதராகிய அண்ணல் நபி அவர்கள் மேற்படி வரையறைகளை அப்படியே ஏற்றார். சகிப்புத் தன்மையின் சுந்தர விளக்கமல்லவா அண்ணலார் அவர்கள். அவ்வுடன்பாட்டை அலீ அவர்களை எழுதப் பணித்தார்கள் நாயகம் அவர்கள். அதிலும் எத்தனை சாதனைகள். அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மது அவர்களுக்கும் என்று எழுதப்பட்டபோது, குறைஷிகள் ஆட்சேபம் தெரிவித்து, 'இன்னார் மகன் முஹம்மது' என்று எழுத வேண்டும் என்று பணிக்க கோபமடைந்தனர் முஸ்லிம் பெருமக்கள். அலீ அவர்களோ இறைவனின் திருத்தூதர் என்றுதான் எழுதியதை அழிக்க இயலாது என்று அண்ணல் அவர்களிடமே பிணங்கினார். ஆயினும், நாயகம் அவர்கள் எல்லோரையும் பொறுமையோடு இருக்கச் சொல்லி விட்டு, அலீ அவர்களையும் சமாதானப் படுத்திவிட்டு, ஆட்சேபிக்கப்பட்டதை தனது திருக்கரங்களாலேயே அழித்து பொறுமையின் சிகரமாக விளங்கினார்கள்.

நாயகம் அவர்களின் அளவுக்கு மீறிய பொறுமையால், பின்னாளில் மக்கா வாசிகளின் பகுத்தறிவுக் கண் திறந்தது. அதன் பின்னர், மக்கா குறைஷிகள் உருவ வழிபாட்டை விட்டொழித்து ஏக நாயகன் வழிநடக்கத் தொடங்கினார்கள். நாயகம் அவர்களின் சகிப்புத் தன்மை நமக்கெல்லாம் ஒரு வழி காட்டும் பாடம்.

–இளம்பிறை பாருக்–

## 'கவலைகளை தேவன் மேல் வைத்துவிடுங்கள்!' –புனித பைபிள்

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்...

(சங்கீதம் 55:22)

என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன்.

ஆகாரத்தைப் பார்க்கிலும் உங்கள் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது.

காகங்களை கவனித்துப் பாருங்கள்.. அவைகள் விதைக்கிறதுமில்லை... அறுக்கிறது மில்லை. அவைகளுக்கு பண்டகசாலையுமில்லை... களஞ்சியமுமில்லை. இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார். பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

மிகவும் அற்பமான காரிய முதலாய் உங்களால் செய்யக் கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன?

காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்.. அவைகள் உழைக்கிறதுமில்லை... நூற்கிறதுமில்லை. என்றாலும், சாலமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்...

இப்படியிருக்க, அற்ப விசுவாசிகளே, இன்றைக்குக் காட்டிலிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்று நீங்கள் கேளாமலும், சந்தேகப்படாமலும் இருங்கள்...

இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித் தேடுகிறார்கள். இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.

(லூக்கா 12:22-30)

ஏ.எஸ். ராஜகுமார்

# ஸ்போர்ட்ஸ்

## கிரிக்கட் உலகுக்கு மலையகம் தந்த கொடை! சுழற் பந்து வீச்சில் சூரன் முரளிதரன்!!

### இலங்கையின் இளம் புயலோடு ஒரு பேட்டி

குறுகிய காலத்திற்குள் சர்வதேச கிரிக்கெட் உலகில் பேசப்படுமளவுக்கு புகழேணியில் ஏறியவர் முத்தையா முரளிதரன்.

20 வயதான அந்த இளம் சிங்கம் உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களின் விக்கெட்டுக்களை சுருட்டியிருக்கிறது.

சின்னச்சாமி தம்பதியினரின் மூத்த புதல்வன் இன்று மலையகத்தையே பெருமையடைய வைத்திருக்கிறார்.

முரளி ஆரம்பக் கல்வியைப் படித்தது கட்டுகஸ்தோட்டை தூய அந்தோனியார் கல்லூரியில்.



அக்கல்லூரியின் கிரிக்கெட் அணி காப்டனாக இருந்து வெற்றிகளைக் குவித்தும் இருக்கிறார்.

மலையகம் முரளியால் பெருமைப் படலாம், இலங்கையின் விளையாட்டு லகுக்கு மிகச் சிறந்த வீரனை கொடுத்த தற்காக.

மாணவ ஆட்டக்காரர்களிடையே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமையுடைய முரளியிடம் கிரிக்கெட் உலகம் இன்னும் நிறைய எதிர்பார்க்கிறது.

முத்தையா முரளிதரனை எமது கண்டி நிருபர் ஐ.ஏ. றஸாக் சந்தித்து பேட்டி கண்டார். மிக இயல்பாக பதட்ட மில்லாமல் பந்தா இல்லாமல் முரளிதரன் பதிலளித்தார்.

**கே:** துடுப்பாட்டக்காரரை வீழ்த்த நீங்கள் கையாளும் உத்திகள் எப்படி?

**மு:** ரன்களை எடுக்காதிருக்கும் வகையில் பந்துகளை அனுப்புவதுதான் முக்கியமான உத்தியாகும். ஆட்டக்காரர் ரன்களை எடுக்க முடியாத கட்டத்தில் எப்படியாவது ரன்களை எடுத்துவிட எத்தனிப்பார். அவ்வாறான எத்தனிப்பு எனது பந்துவீச்சுக்கு அவர்களது விக்கெட்டை இலக்காக்கி விடுகிறது. சுழற் பந்து வீசுவதில் எனக்கு நல்ல பரிச்சயம் உண்டு. என்னை நானே பயிற்றிக் கொண்டதால் ஏற்பட்ட முன்னேற்றம் அது.

**கே:** இதுவரை நீங்கள் கைப்பற்றியுள்ள விக்கெட்டுக்களில் மிகப் பெறுமதியான விக்கெட் எதுவென்று கருதுகிறீர்கள்?

**மு:** நியுசிலாந்து அணித் தலைவர் மாட்டின் குரோவின் விக்கெட்டை கைப்பற்றியதைச் சொல்லலாம். மிகச் சிறந்த துடுப்பாட்டக்காரர் அவர்.

**கே:** நீங்கள் வீசும் பந்துகளை சந்திக்கும் துடுப்பாட்டக்காரர் பவுண்டரிகளையும் சிக்ஸர்களையும் அடிக்கும்போது உங்கள் மனோநிலை எப்படி இருக்கும்?

**மு:** நான் தைரியத்தை இழப்பதில்லை. பவுண்டரிகளையும்- சிக்ஸர்களையும் அடித்தாலும் நான் கவலைகொள்ள மாட்டேன். ஒரு விக்கெட்டை கைப்பற்றினால் கூட எனக்கு அது திருப்திதான். விளையாட்டில மன உறுதி முக்கியம். தளர்ந்தால் எதிர்த்தரப்புக்கே அது சாதகம்.

**கே:** உங்கள் இதுவரைகால கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வு எது?

**மு:** எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நியூசிலாந்து அணியைத் தோற்கடித்த அந்தநாள் என் வாழ்வில் மிகச் சிறந்த நாள் ஆகும். நான் அதில் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினேன். அதன் மூலம் எனது அணிக்கு என்னுடைய பங்களிப்பை சிறப்பாக வழங்கினேன்.

**கே:** நீங்கள் ஒரு சிறந்த தடுப்பாளரும் (பீல்டர்) கூட. எந்த இடம் உங்களுக்கு விருப்பமானது?

**மு:** கவர் பொயின்ட். அங்கேதான் பந்துகள் அதிகமாக வருகின்றன.

**கே:** 23 வயதிற்கு உட்பட்ட அணியில் தென்னாபிரிக்கா சென்றீர்கள். அங்கு அனுபவம் எப்படி?

**மு:** அந்தப் போட்டிதான் என்னை உயர்மட்டத்திற்கு அழைத்துச் சென்றது. மூன்று நாள் நான்கு ஆட்டங்களும் உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் ஒன்றிலும் பங்கு பற்றினேன். அந்த சுற்றுப் பயணத்தில் 35 விக்கெட்டுக்களை நான் கைப்பற்றினேன். தென்னாபிரிக்க அணி சுழற் பந்துக்கு முகம் கொடுக்க கொஞ்சம் திணறினார்கள்.

**கே:** உங்கள் அடுத்த இலக்கு?

**மு:** டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்தது 50 விக்கெட்டுக்களையாவது கைப்பற்ற வேண்டும்.

**கே:** இப்போது இந்தியா அணி–அடுத்தது தென்னாபிரிக்க அணி வருகிறது. உங்கள் கணிப்பென்ன?

**மு:** வி.வில்.சீ. பொறுத்திருந்து பார்க்கலாம். (நம்பிக்கையோடு புன்னகைக்கிறார்.)

### பெருமைப்படலாம்

தென்னாபிரிக்கா சுற்றுப் பயணத்தின்போது முரளிதரன் வீசிய சுழற் பந்துகள் அந்த அணியினரை நிலைகுலைய வைத்தன. அனுபவமுள்ள ஆட்டக்காரர்களே திகைத்துத்தான் போனார்கள்.

இதுவரை நடுவர்களால் விமர்சிக்கப்படாத - குறைகூறப்படாத பந்து வீச்சாளர் என்ற பெருமையும் முரளிக்கு இருக்கிறது.

தமிழ் பேசும் மக்களும் முரளி குறித்து நிச்சயம் பெருமை கொள்ளலாம். கொள்வோம்.

### உற்சாகப் போதையா உடனே தடு!

விளையாட்டு வீரர்கள் சிலர் தசைகளுக்கு வலுவூட்ட பயன்படுத்தும் சில மருந்து வகைகள் கொலை வெறியை தூண்டுவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கனடாவைச் சேர்ந்த பிரபல ஓட்டவீரர் பென்ஜோன்சன் ஊக்கமருந்தைப் பாவித்து இப்போது பென்சன் ஜோன்சனாகியுள்ளார்.



பாலியல் ரீதியான பலவீனம் உள்ளவர்களும் போதை மருந்துகளை நாடுவதுண்டு. வெறியுணர்வு தலைக்தேறி அவர்கள் பெண்களோடு மிருகத்தனமாக நடந்துகொள்வார்கள்.

அத்தகைய மருந்துகளை தடுக்கப்போவதாக இங்கிலாந்து 1988ல் அறிவித்தது. அறிவிப்போடு சரி. மீண்டும் சுறுசுறுப்பு.


கற்பழிப்புக்கள் பலவற்றுக்கும் அந்த போதை மருந்தே காரணம் என்று கண்டறியப்பட்டதை அடுத்து அந்த மருந்துகளை தடுக்க சட்டம் பாயப்போகிறது. இவ்வருட முடிவுக்குள் இங்கிலாந்து அதற்கான சட்டத்தை கொண்டு வரவுள்ளது. சரியான சட்டம்தான்.

www.padippakam.com

வாரமலர் தினமுரசு

## ஹொலிவுட் சினிமா -ஒரு பார்வை-

### இருளில் உலாவரும் படை



ஆமி ஒஃப் டாக்னஸ் (இருளில் உலாவரும் படை) அதுதான் படத்தின் பெயர். கடந்த ஜுன் மாதம் 11ம் திகதி அமெரிக்காவில் திரையிடப்பட்டிருக்கிறது. கதாநாயகன் பூறுஸ்காம் பெல். இயக்கம் சாம் றெய்மி.

கதைச்சுருக்கம்: 14ம் நூற்றாண்டின் கோட்டைக்குள் புதையுண்டு கிடந்தவர்களோடு கதாநாயகன் மோதி வெற்றிபெறுவதுதான் கரு. அதைச்சுற்றித்தான் கதை.

இறந்தவர்களின் எலும்புக்கூடுகள் படையெடுக்கின்றன. வாளால் வெட்டிச் சாய்க்கிறார் கதாநாயகன். திரில்...திரில்..திரில். திரிலைத்தவிர வேறில்லை படத்தில். அந்தளவிற்கு புல்லரிக்க வைத்துள்ளார்கள் கதாநாயகன்-இயக்குநர்-ஒளிப்பதிவாளர் கூட்டணி. படம் வசூலில் நல்ல அறுவடை செய்கிறது.

## வஞ்சிர பிஸா

தேவையானவை:

| | |
|---|---|
| காளான் அல்லது உருளைக்கிழங்கு | - 350 கிறாம் அல்லது 12 அவுன்ஸ் |
| சூரிய காந்தி எண்ணெய் | - 2 மேசைக்கரண்டி |
| மைதா மா | - 150 கிராம் |
| தக்காளி சோஸ் | - 75 கிராம் |
| எலுமிச்சம் பழச்சாறு | - 2 தேக்கரண்டி |
| மிளகு தூள் | - தேவையான அளவு |
| உப்புதூள் | - தேவையான அளவு |
| மார்ஜரீன் | - தேவையான அளவு |
| வஞ்சிர மீன் | - 150 கிராம் |

அல்லது ஆட்டிறைச்சி (மார்புப் பகுதித் தசை மட்டும்)

செய்முறை:-

சூடடுப்பு அல்லது மூடிய அடுப்பை (ஓவன்) சுமார் 220 பாகை செல்சியஸ் (425 பாகை பேரான்ஹைட்) அளவு சூடாக்கவும்.

காளான்களை அல்லது கிழங்குகளைத்தோல் நீக்கி கழுவி ஓரளவு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். எண்ணெயை சூடாக்கி காளானை 5 நிமிடங்கள் வதக்கவும். மெதுமெதுப்பானதும் மீதி எண்ணெயை வடித்துவிட்டு ஆறவிடவும்.

காளான் மீது தக்காளிசோறு (சோஸ்) எலுமிச்சம்பழச் சாறு ஆகியவற்றுடன் மிளகுத் தூளையும் உப்பையும் சேர்த்து மெதுவாகக் கிளறிவிடவும்.

மாவை நீருடன் கலந்து ரொட்டிக்கான பதத்தில் பிசைந்து சூடடுப்பிலுள்ள தட்டில் வைக்கவும். தட்டில் ஒட்டிக்கொள்ளாதவாறு சிறிதளவு மார்ஜரீன் அல்லது வெண்ணெய் தடவுதல் நன்று.

வஞ்சிர மீனை அல்லது இறைச்சியை துப்புரவாகக் கழுவி, தோல் முள் முதலியவற்றை நீக்கி சிறு துண்டுகளாக வெட்டி காளான் கலவையுடன் சேர்த்துக் கொள்ளவும்.

இக்கலவையை அடுப்பிலுள்ள மா அடிப்படையின் மீது பரப்பவும்.

அப்படியே 30 நிமிடங்கள் அடுப்பில் இருக்க விடுங்கள்.

இது 3 பேருக்கு அளவான உணவு.





மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் பத்துப்போட்டியில் மூவருக்கு தேசிய விருது கிடைத்தது. அதனை பாராட்டி கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடந்த நிகழ்வில் மன்றத்தின் நடனவகுப்பு மாணவிகளின் நாட்டிய விருந்து.

## பிரதம படைத்தளபதியான டயானா!

பிரிட்டனில் இளவரசி டயானா பற்றி செய்திவராத நாளே கிடையாது. அத்தனையும் புதிய செய்திகள். கவர்ச்சிகரமான தங்கள் இளவரசியின் செய்தியை பிரிட்டிஷ் மக்களும் ரசித்துப் படிக்கின்றனர்.

தற்போதைய செய்தி: பிரிட்டனில் அரச குடும்பத்தினருக்கு சொந்தப் படை இருக்கிறது.

அண்மையில் டயானா தனது சொந்தப் படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவரே பிரதம படைத் தலைவி.

படைப்பிரிவில் 25000 பேர் உள்ளனர். தலைமை ஏற்கும் வைபவத்திற்கு பச்சை வர்ண ஆடையும் அதற்கேற்ற பச்சை நிற தொப்பியும் அணிந்து உற்சாகமான கம்பீரத்தோடு டயானா கலந்து கொண்டார். படைப் பிரிவின் தங்கத்திலான சின்னத்தை டயானா மார்பில் அணிந்திருந்தது கம்பீரத்திற்கு மெருகூட்டியது.

31 வயதான டயானா எப்போதும் அலங்கார விசயத்தில் குறை வைப்பதில்லை. கவர்ச்சிக்கும் இளமைக்கும் பஞ்சமில்லை.





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூலை மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.